# சைவ விளக்கு

பலாலி ஆசிரிய கலாசாலை




சைவ மாணவர் மன்றம்

For quality PHOTOGRAPHS



GNANAMS

JAFFNA PHONE: 7067

R. Kathirgamu

# சைவ விளக்கு

**சைவ மாணவர் மன்றம்,**
பலாலி ஆசிரிய கலாசாலை,
**வசாவிளான்.**
1970

## எங்கள் மன்றம்

இந்து மாமன்றம் என்ற போதிலே சிந்தை பேருவகை கொள்ளுதே
இலங்கை எங்கணும் இருந்து மாணவர் பரவலாகவே வந்து சேருவர்
சேர்ந்த மாணவர் ஒருமையாகவே காரியம் பல ஆற்றுவர்
செய்யுங் காரியம் நல்லதோ எனக் கூட்டம் கூடியே ஆய்குவர்.

ஆதிநாயகன் சோதியாகவே அடியவர்க்கருள் கூர்ந்தனன்
சாதி இன்றியே சண்டையின்றியே சாதனை பல செய்குவோம்
புத்தர் யேசுவும் புனிதர் காந்தியும் தோன்றினர் புவி வாழ்கவே
நித்தம் நாங்களே நிமலர் பாதமே அன்புகொண்டு வணங்குவோம்.

வீடு செல்லவே வீதிகள்பல வித்தியாசமாய் இருத்தல் போலவே
மதங்கள் யாவுமே ஒருவன் தேவனை அடைய நல்வழி காட்டுமே
பக்திப் பாடலும் பொங்கல் பூசையும் ஓய்தல் இன்றியே செய்குவோம்
சக்தி பூசையும் வெள்ளி பூசையும் நால்வர் பூசையும் நன்கு செய்குவோம்.

ஆனி உத்தரம் கீரிமலையிலே அருமையாகவே கொண்டாடுவோம்
ஞான பண்டிதர் இருந்து நல்வழி காட்டி வளர்க்கும் எம்மன்றமே
கந்தசாமியும் எங்களதிபரும் தந்த ஊக்கம் எம்மன்றமே
எந்தை நாவலர் வளர்த்த நம்மதம் வானளாவவே பொங்கி ஓங்குமே.

கலகம் இன்றியே வாழ நல்வழி காட்டிடும் எங்கள் மன்றமே
உலக வாழ்விலே உவகையாகவே உய்ய நல்வழி காட்டுமே
பெயரும் புகழுமாய்ச் சீரும் சிறப்புமாய் மானிடர் குலம் வாழவே
உயரும் வழியினை உணர்த்தி விடுதலே உண்மையான நம்நோக்கமே.

சி. சதாசிவம்
ஆங்கிலம் இறுதி வருடம்.

## விநாயகர் துதி

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.



ஓவியம் பொ. விசாகப்பெருமாள்

## சைவ மாணவர் மன்றம்

1970

போஷகர்: பண்டிதர் க. சச்சிதானந்தன்

தலைவர்: திரு .வீ. கணேசன் — செயலாளர்: திரு. S. பழனிவடிவேல்

உப தலைவர்: திரு. T. தேவராசா — உப செயலாளர்: திருமதி. T. கந்தசாமி

பொருளாளர்: திரு. P. வீரபத்திரன்

## செயற்குழு

திரு. மா. புவனேந்திரன்
திரு. A. பேரம்பலம்
செல்வி கௌ. தயாபரம்பிள்ளை

திரு. N. நடராசா
திருமதி. M. நடராசா
செல்வி கோ. பொன்னம்பலம்

# சைவ விளக்கு

நிர்வாக ஆசிரியர்: திரு. க. கனகரத்தினம்
உதவி: ,, : திரு. K. நவரத்தினம்

## ஆசிரியர் குழு

| ஓவியம் | கட்டுரை, கவிதை, கதை | அச்சு |
|---|---|---|
| திரு. P. விசாகப்பெருமாள் | திரு. T. தர்மலிங்கம் | திரு. R. மார்க்கண்டன் |
| செல்வி R. செல்லையா | திரு. S. சதாசிவம் | திரு. A. அமிர்தலிங்கம் |
| | திரு. A. M. ஜெயபாலன் | |

### விளம்பரம்

திரு. மா. புவனேந்திரன் திரு. S. தில்லையம்பலம்
திரு. S. சிவசுப்பிரமணியம் திரு. M. மயில்வாகனம்
செல்வி V. புருகுப்பிள்ளை

உ

# ஆசியுரை

நல்லை ஆதீனம்,
நல்லூர்,
20-9-1970.

''மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்''

பலாலி ஆசிரிய கலாசாலை சைவ மாணவ மன்றத்தினர் **''சைவ விளக்கு''** என்னும் சமய சஞ்சிகை வெளியிடுவதைப் பாராட்டுகின்றோம்.

அக விருள் போக்குவது அறிவு; அறிவு எனும் விளக்கு அகத்திருள் கடியும். அதுபோல், பல இளம் உள்ளங்களில் உள்ள அஞ்ஞான இருளைப் போக்கும் மெய்ஞ்ஞான விளக்காக இச் **''சைவ விளக்கு''** பிரகாசிக்க எல்லாம் வல்ல எம்பெருமானை வழுத்தி ஆசீர்வதிக்கின்றோம்.

*ஸ்ரீமத் ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள்*

உ

# ஆசியுரை

*பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்*

"ஒன்றேடொன்று மாறுபடுகின்ற சமயம் அத்தனையும் இருப்பது நீதியே" என்ற முடிபை ஒப்புக்கொண்டு, ஒப்புக் கொண்ட அதனுலே அவ்வச்சமயமாய், அதேசமயத்தில் அவற்றின் வேறுமாய் இருப்பது மெய்ச்சமயம். இவ்வியல்பு அதன் தனிச்சிறப்பு.

ஆன்மா இந்தச் சரீரமாய் அதே சமயத்தில் சரீரத்தின் வேறுமாயிருக்கின்றது.

கடவுள் ஆன்மாக்களாய் அவற்றின் வேறுமாயிருக்கின்ருர்.

மெய்ச்சமயம் எல்லாச்சமயமுமாய் வேறுமாயிருக்கின்றது.

*"இப்பரிசாஞ் சமயமுமாய் அல்லவாகி"*

என்பது தாயுமானவர் வாக்கு.

[இப்பரிசு—ஒன்றேடொன்று மாறுபடும் இயல்பு]

**"சைவ விளக்கு"**

மேலே குறிப்பிட்டவைகளை விளக்கஞ்செய்து
மெய்ச்சமயத்தின்
தாய்மையைப்
பிரகாசிப்பதாக......

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# ஆசியுரை

— திரு. சி. கந்தசாமி அவர்கள் —
பீ. எஸ். சி. லண்டன்., டிப். எட். லண்டன்.
(அதிபர். பொன்னம்பலம் இராமநாதன் இளம் பல்கலைக்கழகம்.)
பலாலி, வசாவிளான்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கழகத்துச் சைவமாணவர்கள் தங்கள் சமய, கலாச்சார விருத்தியையும், சமூகத்தின் முன்னேற்றத்தையும் நோக்கி இவ்வெழுபதாம் ஆண்டில் ஒரு மலர் வெளியிடுகிறுர்கள்.

ஒரு சமயத்தினர் ஒரே மனப்பான்மையும், ஒன்று சேர்ந்தவர்களாகவும் வாழ்தல் நன்று. அன்றேல் சமயம் வளராது. ஆசிரியர்கள் சமூகத்துக்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டியவர்கள். ஆகையால் இவர்களே தம் மனக்கருத்துக்களைத் துணிவுடன் வெளிப்படுத்தி மாறு மனப்பான்மை உடையினரை மாற்றி எங்கள் சமூகத்துக்குப் புத்துயிர் அளித்துக் காக்க வேண்டும்.

எங்கள் சமயத்திலுள்ள அடிப்படையான தத்துவங்களையும், வழிபாடுகளையும் பிள்ளைகள் நன்கறிந்து ஒழுகச்செய்ய வேண்டும்.

இம்மலர் வருடாவருடம் நறுமணமுடையதாய்த் தோன்றி ஒரு மறுமலர்ச்சியை விளைவிக்கவேண்டும்.

சைவம் வாழ்க! தமிழ் வாழ்க!

எங்கள் கலாசாலை அதிபர்
உயர்திரு.
ஜோ. ந. எட்வேட் அவர்கள் அளித்த

## ஆசியுரை

பலாலி விசேட பயிற்சி ஆசிரியர் கலாசாலைச் சைவ மாணவர் மன்றம் அதன் முதலாவது சஞ்சிகையைப் பிரசுரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறது என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கலாசாலையில் பயிற்சிபெறும் எல்லாச் சைவ மாணவர்களும் தங்கள் சமய ஒழுக்கங்களையும், பாரம்பரியங்களையும் வளர்ப்பதற்குப் பலவித முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். இவ்வித சஞ்சிகை ஒன்றைப் பிரசுரிப்பதும் அம்முயற்சிகளிலொன்றாகும். இச்சஞ்சிகையில் அடங்கியுள்ள கட்டுரைகள் கற்பித்தற் திறமையிலும், சமயப் பண்பாட்டிலும் பல ஆசிரியர்கள் முன்னேற்ற மடைவதற்குப் பயன்படுமென்பதில் சந்தேகமில்லை.

சைவ மாணவர் மன்றத்திற்கும் அது பிரசுரிக்கும் சஞ்சிகைக்கும் எனது மனமுவந்த வாழ்த்துக்கள்.

எங்கள் அதிபர்



உயர்திரு ஜோ. ந. எட்வேட் அவர்கள்

# விளக்கினிலே


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| எங்கள் மன்றம் | ... | ii |
| சைவ மாணவர் மன்றம் | ... | iii |
| சைவ விளக்கு | ... | iv |
| ஆசியுரை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் | ... | v |
| ,, ,, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | ... | vi |
| ,, ,, சி. கந்தசாமி | ... | vii |
| ,, ,, ஜோ. ந. எட்வேட் | ... | viii |
| ஆசிரியர் கூறுகிறார் | ... | ix |
| சைவ மாணவர் மன்றம் 1970ம் ஆண்டுக்குரிய அறிக்கை | ... | xi |
| 1. சாதியினும் சமயமே அதிகம் | ... | 1 |
| 2. உள்ளும் புறமும் உள்ளானை உள்ளுவோம் | ... | 3 |
| 3. ஆசிரிய உலகம் | ... | 5 |
| 4. ஆளுடைப்பிள்ளையின் திருமுறையில் உள்ள சித்தாந்தம் | ... | 8 |
| 5. சைவசமய தத்துவங்கள் | ... | 11 |
| 6. காதல் | ... | 14 |
| 7. மகாவித்துவான் கணேசையரும் அவரது சைவப்பணியும் | ... | 16 |
| 8. சமயவாழ்வின் குறிக்கோள் | ... | 19 |
| 9. தேவார மூவரின் திவ்ய தமிழமுதம் | ... | 22 |
| 10. அருணகிரிநாதரின் வாழ்க்கையற்புதங்கள் | ... | 25 |
| 11. பட்டினத்தடிகளும் பாவையடும் | ... | 28 |
| 12. ஆடும்பிரான் | ... | 31 |
| 13. தேனும் வண்டும் | ... | 33 |
| 14 கிழக்கிலங்கையில் கண்ணகிவிழா | ... | 36 |
| 15. எம்மதத்திற்கும் சம்மதமான இரு திருப் பாடல்கள் | ... | 42 |
| 16. அன்பும் அம்மையாரும் | ... | 45 |
| 17. மனிதப்பிறவியும் வேண்டுவதே | .. | 48 |
| 18. இசையில் இணைந்த இறைவன் | ... | 50 |
| 19. சாபம் பலிக்கின்றது | ... | 53 |
| 20. பொறியின்றி ஒன்றும் புணராத புந்தி | ... | 57 |
| 21. கடைசியிலே காண்பதெல்லாம் | ... | 64 |
| 22. கோரிக்கை | ... | 65 |
| 23 துணையாகி நிற்குமுதலே | ... | 66 |
| 24. முருக நாமம் ஒலித்திடுக | ... | 67 |
| 25. ஆறுபடை வீடுடை முருகா | ... | 68 |


# கவிதை

பண்டிதர் க. சச்சிதானந்தன்

தேன்மடுத்து வெடித்தபலா தன்மணமே
சிதறுது தெய்வச் சைவம்
தான்மணக்கும் பலாலியெனும் பள்ளியதே
தகழியாகச் சைவ மன்றம்
வான்மணக்க உளமலர்ந்த அன்பூற்றே
வழிந்து நறு நெய்ய தாக
மான்மழுவுந் திருநீறும் மலர்ந்தொளிரச்
சைவமணி விளக்கு வைப்பாம்.

தொடுத்தஇதழ்த் தாமரையும் துவர்வாயும்
செங்கரமும் தோற்றம் ஒன்றுய்
எடுத்தஅடி தோறுமிவர் அன்னமெனும்
பொன்னணையார் மலர்க்கை ஏற்ற
அடுத்தவடி களிறென்னும் தோள்வலியார்
ஆசிரியர் அகங்கை ஏந்த
எடுத்தஅடித் திருநடமே எங்கெங்கும்
சுடரெறிப்ப விளக்கு வைப்பாம்.

எங்கள் மன்றப் போஷகர்



பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள்.

# ஆசிரியர் கூறுகிறார்.

பலாலி ஆசிரிய கலாசாலையின் ஆரம்பகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட எமது சைவ மாணவர் மன்றம் இப்பொழுதும் அதற்குரிய தனிச் சிறப்பியல்புகளுடன் இயங்கி வருகின்றது. அது கலாசாலையிலும், வெளியிலும் சைவசமய அனுட்டானங்களை நிலைநாட்டிச் சமயப் பணிபுரிந்து வருகின்றது. அப்பணிகளில் இச்சஞ்சிகை வெளியீடும் ஒன்றாகும்.

எமது மன்றத்தில் கடந்த பல்லாண்டு காலமாக இருந்து வந்த ஒரு குறையை நிவிர்த்தி செய்யுமுகமாக இவ்வாண்டு எமது மதிப்புக்குரிய போஷகர் திருவாளர் க. சச்சிதானந்தன் அவர்களும், ஏனைய எமது மன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து இப் பணியைச் சிறப்புறச் செய்து முடித்துள்ளார்கள்.

எமது கலாசாலையில் இயங்கிக் கொண்டிருக்கும் சைவமாணவர் மன்றம் சைவசமய விழாக்களையும், சமய அனுட்டானங்களையும் சிறப்பான முறையில் மேற்கொள்ளுவதைச் சாற்றிடும் ஓரிதழாகவும், சைவ சமயத் தத்துவங்களையும், அதன் சிறப்பையும் எடுத்து விளக்கும் ஏடாகவும் எமது சஞ்சிகை வெளிவருகின்றது.

"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே" என்ற தாயுமானவர் சுவாமிகளின் பாடலைப் பாடுகின்ற போதெல்லாம், "சைவப்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் வையத்தில் யான்வந்த பயனெய்தும் பராபரமே" என்றுதான் என்னைப் பாடத் தூண்டுகின்றது. ஆகவே இப்பணிக்கு என்னை ஆளாக்கிய மன்றத்தினருக்கு முதற்கண் எனது அன்பு கலந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

எமது **சைவ விளக்கு** உருவாகுவதற்கு மூலகாரணராக இருந்தது, எடுத்த கருமத்தை அடுத்து முடிக்கும் துடுக்குடைய எளிமையான தோற்றம் - எமது போஷகர் - அவர்களே. கலாசாலையில் தன் கடமையினாலும், பல்கலைப் பாண்டித்தியத்தினாலும், அன்பாலும் பண்பாலும், அனைவரையும் கவர்ந்த இவ்வெழில் மிகு தோற்றம் எம் மன்றத்தின் அச்சாணியாக இருக்கின்றது.

அவ்வப்போது திட்டங்களைத் தீட்டி, ஆலோசனைகளைக் கூறித், தைரியமூட்டி, இவ்விளக்கு உங்கள்கையில் இருந்து ஒளி வீசச்செய்த பெருமை எமது போஷகர் அவர்களையே சாரும். அவருக்கு எமது மன்றத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

எமது சஞ்சிகை வெளியீடு பற்றி எமது அதிபர் அவர்களுக்குத் தெரிவித்தபொழுது அவர் வியப்படைந்து கூறிய வாழ்த்துக்களையும், மனமுவந்து அளித்த ஆசியுரையையும் பெற்றுச் சைவவிளக்குப் பிரகாசிக்கின்றது. சஞ்சிகை வெளியீடு சம்பந்தமாக அடிக்கடி கலாசாலையைவிட்டு வெளியே போகவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அதனை உணர்ந்து எமக்கு அனுமதி வழங்கி எமது சஞ்சிகை வெளியீட்டுக்கு ஒரு தடைக் கல்லாக இன்றி அணைக்கல்லாக இருந்து உதவி அளித்த அதிபர் அவர்களுக்கு எனது பணிவான நன்றியைக் கூறுகின்றேன்.

எமது கலாசாலை முன்னைய அதிபர் திருவாளர் சி. கந்தசாமி அவர்களிடம் எமது சஞ்சிகைக்கு ஆசியுரை கேட்டபொழுது மிகமனமுவந்து தனது சொந்தக் குழந்தைக்குக் கொடுக்கும் ஒரு பரிசுப்பொருள் போன்று சிறந்த ஒரு ஆசியுரையைக் கொடுத்து உதவினர்கள். அவருக்கு எமது மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி கூறுகின்றேன்.

தள்ளாத வயதிலும் "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற இலட்சியத் திற்போலும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், பண்டிதர் பொன். கிருஷ்ண பிள்ளை அவர்கள் மனமுவந்து அளித்த கட்டுரைகளுக்கு அவர்கட்கு நன்றி கூறுகின்றேன்.

எமது சஞ்சிகை உருப்பெறுவதற்குக் கட்டுரைகள், கவிதைகள், விளம்பரங்கள், நன்கொடைகள், ஆசியுரைகள், புகைப்படங்கள் ஆகியன கொடுத்துதவிய பெரியார்கள், கவிஞர்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு மன்றத்தின் சார்பில் நன்றி கூறுகின்றேன்.

எமது சஞ்சிகை மிக அழகுறவேண்டும் என்னும் பேரவாவினல் அயராது உழைத்தவர்களில் திரு. பொ. விசாகப்பெருமாளும் ஒருவராவர். சஞ்சிகையின் அட்டையின் சிறப்பு பெருமாளவர்களின் அயரா உழைப்பே. அன்னரின் கைத்திறன் எமது மன்றத்துக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும், அவருக்கு எனது நன்றியுரித்தாகுக.

விளம்பரஞ் சேகரிப்பதில் விறுவிறுப்பாக நின்றுழைத்த திருவாளர்கள் K. மார்க்கண்டன், S. அமிர்தலிங்கம், K. நவரத்தினம். பொ, விசாகப்பெருமாள். பொ. காங்கேசு, S. தில்லையம்பலம் ஆகியோருக்கு மன்றம் பெரிதும் கடப்பாடுடையது. அவர்களுக்கு மன்றத்தின் சார்பில் நன்றி கூறுகின்றேன்.

மன்ற அங்கத்தவர்களில் புகைப்படம் கொடுக்காத அங்கத்தவர்களுடைய படங்கள் சஞ்சிகையில் இடம்பெருதது ஒரு குறையாக இருக்கின்றது. இனிமேல் வெளிவரும் சஞ்சிகைகளில் இக்குறை காணப்படமாட்டாதென எதிர்பார்க்கின்றேன்.

இச் சஞ்சிகை வெளியீட்டுக்கு எவ்வித பிரதிபலனும் கருதாது எனக்கு உதவியளித்த அன்பர்கள் யாவருக்கும், சஞ்சிகையை மிகக்குறைந்த காலத்திலே சிறந்த முறையிலே அழகுற அச்சிட்டுக் கொடுத்த ஸ்ரீ லங்கா அச்சகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

எமது கன்னி முயற்சியில் காணப்படும் சின்னஞ்சிறு பிழைகளைப் பெருமனதோடு பொறுப்பீர்களெனநம்புகின்றேன்.

**வணக்கம்**

**பத்திராதிபர்**

# சைவ மாணவர் மன்றம்

## 1970 ஆம் ஆண்டுக்குரிய அறிக்கை

மன்றத்தின் வருடாந்த அறிக்கையைச் சபைக்குச் சமர்ப்பிப்பதையிட்டுப் பெருமையும் மகிழ்வும் அடைகிறேன். மன்றத்தின் சகல அங்கத்தவர்களினது பூரண ஒத்துழைப்புடனும், மன்றப்போஷகர் பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்களுடைய வழிகாட்டலின் பேரிலும் மன்றத்தின் வருடாந்த கைங்கரியங்கள் யாவற்றையும் சிறப்புடன் செய்து முடித்துள்ளேன் எனபதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

**வெள்ளிக்கிழமைப் பூசைகள்.** நீண்ட விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் வந்த வெள்ளிக்கிழமைகளில் பூசையும் ஆராதனைகளும் கிரமமாகவும் ஒழுங்காகவும் நடந்தேறின.

**நவராத்திரி விழா:-** சென்ற வருடத்திற்குரிய நவராத்திரி விழாவை எமது நிர்வாக சபையே ஏற்று நடத்தியது. கும்பம இருத்தி ஒனபது நாளும் மாலையில் ஒழுங்காக விசேஷ பூசையும் ஆராதனையும் நடத்தினோம். முதல் நாள் விசேட நிகழ்ச்சியாக வானொலி புகழ் சிதம்பரநாதன் அவர்களின் நாதஸ்வரக் கச்சேரி இடம் பெற்றது. இறுதிநாள் சங்கீத பூஷணம் திருமதி கமலா பெரியதம்பியின் இன்னிசைக் கச்சேரி சிறந்த பக்கவாத்தியங்களுடன் நடைபெற்றது.

**தைப்பொங்கல்:-** உழவர் திருநாளாம் தைப்பொங்கலைச் சிறப்பான பொங்கற் பூசையுடன் வெகு சிறப்பாகக் கொண்டாடினோம்.

**சிவராத்திரி:-** சிவராத்திரி விழாவை விசேட பூசையுடனும் ஆராதனையுடனும் பின் வரும் நிகழ்ச்சிகளுடனும் கொண்டாடினோம்.

1. மன்றப் போஷகர் பண்டிதர் க. சச்சிதானந்தன் ஆரம்ப உரைநிகழ்த்தினர்.

2. பண்டிதர் எஸ். பொன்னம்பலம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

3. கதாப்பிரசங்கம் திரு. பொன். தெய்வேந்திரன்.
விடயம் ''மாங்கனி பெற்ற மங்கை''

4. திரைப்படம் (விஞ்ஞான கணித கழகத்தின் உபயம்.

5. பஜனை திரு கனகரத்தினம் கோஷ்டியினர். (மேற்படி மன்ற அங்கத்தவர்கள்)

6. நாடகம் ''தியாகச் சின்னம்'' திரு. சாந்தலிங்கம் குழுவினர்.
(மேற்படி மன்ற அங்கத்தவர்கள்)

7. சங்கீதக் கச்சேரி சங்கீத பூஷணம் திருமதி கமலா பெரியதம்பி.

8. பஜனை செல்வி கோணேஸ்வரி பொன்னம்பலம் கோஷ்டியினர்.
(மேற்படி மன்ற அங்கத்தினர்கள்)

**ஆனி உத்தர விழா:-** எமது மன்றத்தினல் வருடாவருடம் கொண்டாடப்பட்டு வரும் இவ்விழாவை இம்முறையும் சகல அங்கத்தவர்களும கீரிமலைச் சிவன் கோவிலுக்குச் சென்று

விஷேச அபிஷேக ஆராதனைகளுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடினோம். அன்று மதிய போசனத்தைக் கீரிமலையிலேயே வைத்துக்கொண்டோம்.

**ஆடிப்பிறப்பு:-** என்றும் இல்லாதவாறு இம்முறை ஆடிப்பிறப்பை விசேஷ பொங்கற் பூசையுடன் கொண்டாடினோம்.

**குருபூசைகள்:-** சமய குரவர்களாகிய திருஞான சம்பந்தர் மாணிக்கவாசகர் ஆகியோரது குருபூசைகளை வெகுசிறப்பாகக் கொண்டாடினோம். ஏனைய குரவர்களது குருபூசைகள் விடுமுறைகளில் வந்தமையால் கொண்டாட முடியாது போய்விட்டன. திருஞானசம்பந்தர் குருபூசையன்று கலாசாலைப் பேராசிரியர் திரு. என் வீரமணி ஐயர் அவர்கள் சீர்காழிச் செல்வன் என்னும் விடயம் பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு ஆற்றினார்கள். மணிவாசகர் குருபூசையன்று சைவப்புலவர் கதிர்காமநாதன் அவர்கள் திருவாசகத்தின் பெருமை என்னும் விடயம் பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு ஆற்றினார்கள்.

**அன்பளிப்புகள்:- 19-10-69** ம் திகதி செல்வி நளினி இராஜசிவகுருநாதன் ஒரு எவர் சில்வர் தட்டம் அன்பளிப்புச் செய்தார். அதே தினத்தில் கைப்பணி மாணவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு பஞ்ச மணியை அன்பளிப்புச்செய்தனர். மன்றப் போஷகர் பண்டிதர் க. சச்சிதானந்தன் 18 ரூபா 40 சதத்தை மன்றத்துக்கு அன்பளிப்புச் செய்தார்கள்.

| | |
|---|---|
| திரு. எஸ். தில்லைநாதன். | 5-00. |
| செல்வி, ஜே. சேனாதிராசா. | 25-00. |
| செல்வி- எஸ், முத்துத்தம்பி | 3-50 |

**சஞ்சிகை:-** எமது மன்றத்தின் புதிய முயற்சியாக இவ்வருடம் ஒரு சஞ்சிகை வெளியிட எண்ணி அதற்காய சகலவேலைகளும் துரிதமாக நடை பெற்று வருகின்றன. இச்சஞ்சிகை மன்றத்தின் பெருமையை மென்மேலும் குன்றிலிட்ட தீபம் போல் பிரகாசிக்கச் செய்யும் என்பது உறுதி. எனவே இப்பணியை எதிர்காலத்தில் சிறப்புற நடாத்த வேண்டும் என்பது எமது பேரவாவாகும்.

**நன்றியுரை:-** கடந்த வருடம் எமது மன்றம் கேட்டுக் கொண்டதற் கிணங்க தாவர விடுதி அமைத்துத் தந்தமைக்காகவும், எமது மன்றத்தினால் நடாத்தப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் அனுமதியும், இடவசதியும் தந்து உதவியமைக்காகவும் எமது மன்றம் எமது அதிபர் அவர்கட்கு மிகுந்த கட்டுப்பாடுடையது. எமது மன்றத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய வேண்டிய இடங்களில் வேண்டிய வழி காட்டல்களையும். அறிவுரைகளையும் நல்கியதோடல்லாமல் வேண்டிய உதவிகளையும் செய்து எம்நெஞ்சத்தை விட்டகலாதவராகிய எமது மன்றப் போஷகர் பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கட்கு மன்றத்தின்சார்பில் எமது உளமார்ந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன், மன்றத்தின் அங்கத்தவராய் இருந்தபோதிலும் கோவில் பூசைகளை ஒழுங்காக நடாத்திச் சகல விடயங்களிலும் தோளோடு தோள நின்று உழைத்தமைக்காக திரு.நா. நடராசா அவர்கட்கு மன்றத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். மன்றத்தின் விஷேட தினங்களில் சொற்பொழிவுகளும் கச்சேரி முதலிய வற்றையும் நல்கிய பெரியார்களுக்கு எமது மன்றத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன, அத்துடன் மன்றத்தின் சகல கைங்கரியங்களிலும தோளோடு தோள் நின்று உதவி செய்த சகல சகோதர சகோதரிகட்கும் மன்றத்தின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து எமக்கு உதவிசெய்த தாவர விடுதிச் சமயற்காரர்கட்கும் மன்றத்தின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

**சு. பழனிவடிவேல்.**
**செயலாளர்**

---




''அன்பின் சங்கமத்தை'' ஆக்கிப்படைத்த நடிகர் குழு




''அன்பின் சங்கமத்தில்'' அண்ணனுக்கு முடிசூட்டும் தம்பி



செல்வி பொ. கோணேஸ்வரி கோஸ்டியினர்
சிவராத்திரியின்போது கூட்டுப்பிரார்த்தனை நடாத்துகிருர்கள்



பூசகர் திரு. ந. நடராசா அவர்கள்
வெள்ளிக்கிழமைகளில் நடாத்தும் தீபாராதனைக் காட்சி



திரு. க. கனகரத்தினம் கோஷ்டியினர்
சிவராத்திரியின்போது கூட்டுப்பிரார்த்தனை நடாத்துகிருர்கள்

# "சாதியினும் சமயமே அதிகம்"

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

"சாதியினுஞ் சமயமே அதிகம். சமயத்தி லுஞ் சாதி அதிகமென்று கொள்வது, சுருதி யுத்தி அனுபவம் மூன்றுக்கும் முழுமையும் விரோதம்" என்கின்றார் நாவலர் பெருமான்.

பெரியபுராண வசன முகப்பிலே உண்மை நாயன்மார் மகிமையிலே மேற்குறிப்பிட்ட வச னத்தில் தொடங்குவதொரு பந்தி வருகின் றது.

சிந்தனைச் செல்வரும் தத்துவ விசாரத்தில் மூழ்கியிருப்பவருமான மகான் ஒருவரை அணுகி, மேற்குறிப்பிட்ட பந்தியைச் சுட்டிக் காட்டி, 'சாதியினுஞ் சமயமே அதிகம்' என்ற வாக்கியத்துக்கு விளக்கம் கேட்டபோது, அந்த மகான் தமது சிந்தனையிலிருந்தும் இறங்கி, சிறிது நேரம் மௌனமாயிருந்து, கேட்டவரை உற்றுநோக்கி,

"கோயில் வீதியிலே சாதி வேற்றுமை யுண்டு; சுவாமி சந்நிதானத்திலே அது இல்லை" என்று கூறி, மெல்லெனச் சிரித்தார். அந் தச் சிரிப்பு, வீதிக்கப்பாலே ஜனநாயகம் என் கின்ற வெளியுலகிலேயும் சாதி வேற்றுமை இல்லை என்று, சுட்டிக் காட்டுவதாயிருந்தது.

"கோயில் வீதியிலே சாதியுண்டு; கோயி லுக்குள்ளேயும் வீதிக்கு அப்பாலே வெளியுல கிலும் சாதி இல்லை" என்பது, அந்தத்தத்து வப் பெரியார் தந்த விளக்கம்.

இந்த விளக்கம், 'சாதியினுஞ் சமயமே அதி கம்' என்ற வசனத்தினும் கடினமாய்க் கலக் கந் தருவதாயிருந்தது.

அந்தத் தத்துவப் பெரியார் தொடர்ந்து தமது விளக்கத்துக்கு விளக்கந்தருவாராயினர். அதுவருமாறு:-

நமது சமயம் வைதிக சைவம். வைதிக மாவது வேதநெறி. அஃதாவது அறிவு நெறி. கருவிகரணங்களை நெறிப்படுத்தி அறிவைத் தூய்மை செய்யும் நெறி. அதற்குபகாரம் வர்ணாசிரமதர்மம். வைதிகத்தின் தொடக்கம் தர்மம். ஒருவன் செய்யத்தக்கது எது தகா தது எது என்று தர்மவிசாரமுடையனாய், தன்னிலையை உணர்ந்து, நீதிவழுவா நெறி முறையில் தன் வாழ்க்கையை இட்டு வைத் துப் பாதுகாக்கற் பாலன். சாதிக்கட்டுப்பாடு, உலகபந்தங்களைப் பக்ஷபாதமான பற்றுக்களைப் போக்குதற்கு உபகாரமானது. அது வர்ண சிரமதர்மம் என்று போற்றப்படுவது. ஒரு இனம் மற்றொரு இனத்தை நசுக்க வைத்த தன்று அது. வைதிகன் சாதிமான். அவ னுடைய ஒருகை மேலோரைப் பற்றியதாயி ருக்கும். மற்றக்கை கீழ்நிலையில் உள்ளாரை உயர்த்த உதவும். வைதிகம் முற்றுப் பெற்ற வன் ஒரு நாளைக்கு உலக பந்தங்களை விடுகிற முறையில் விட்டுச் சிவசம்பந்தியாவன். சிவ சம்பந்தம் சைவம். அஃதாவது அருள்நெறி. **அருள் நடத்தநடப்பவன் சைவன். அரு ளைத்தேடுபவன் வைதிகன்.** அவனுக்கிடம் வீதி. வைதிகம் முற்றிச் சைவன் ஆகியவன் சுவாமி சந்நிதானத்தை அணுதும் பக்குவன்.

நோயாளியை மருத்துவன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான். நோய் நீங்கியபின், அவன் ஆரோக்கியர்களுடன் சேருகிறான்.

வீதியில் நிற்கும் வைதிகன் சாதிகுலம் பிறப்பாலெய்திய பிணி நீங்கியபின், சுவா மியை அணுகி ஆரோக்கியர்களாகிய சைவர் களுடன் சேர்ந்து கொள்ளுகிறான்.

சுவாமி சந்நிதானத்திலே தில்லைவாழந்தண ரும் திருநீலகண்டத்துக்குயவனும் ஒரு குலம். அவர்களுக்குத்தான் ஒருவனே தேவன்.

அருச்சுனன் போர்முனையில் பாசபந்தங்க ளால் தாக்குற்றுத் தயங்கினான். வைதிகம்

முற்றுப் பெறவில்லை. கண்ணன் தர்மத்தைக் காட்டி நீதி வழுவா நெறிமுறையில் அவனை நிறுத்தினுன்.

அருச்சுனர் அடுத்தபிறப்பில் கண்ணப்ப ராயினுர். காளத்தியப்பரைக் கண்டார். கண்ட அளவிலேயே பரிபூரண சிவ சம்பந்தியாயினுர். அகன்ருர் அகலிடத்தார் ஆசாரத்தை. தாடலைப்பட்டார். அவரது சாதிகுலம் பிறப்பை யாரும் விசாரிக்கவில்லை. அபர சுப்பிரமணிய ரான திருஞான சம்பந்தர் கண்ணப்பரை வணங்கினுர்.

இனி, 'சாதியினுஞ் சமயமே அதிகம்' என்ற நாவலர் பெருமான் கூற்று விளக்கம் ஆகலாம். வைதிகத்தில் சாதி பெரிது; சைவத்தில் சமயம் பெரிது என்றவாறும்.

இப்பொழுதைய பகிரங்க உலகம் அவைதிக உலகம்; நீதியைக் குறுக்கி நிதி செய்யும் உலகம்.

அவைதிகருக்குச் சித்தியார் வழங்கும் பெயர் 'தொடுத்த பேதைமைக்கே பொருந்தினேர்' என்பது. அவர்கள் தாங்கள் பாசபந்தங்களினுட்பட்ட நோயாளிகள் என்பதை அறியார்கள். பாவம்! இவர்கள் தங்கள் தர்மங்களை மறந்து உயர்வு தாழ்வு பேசுவதில் அர்த்த மில்லை.

அவைதிகர்கள் தர்மத்தை விசாரித்து, நீதி வாழ்க்கையின் நன்மையைச் சிந்தித்து, வைதிகர்களாய்க் கோயில் வீதியில் கால்வைக்கத் தம்மைப் பக்குவப்படுத்தவேண்டும். வைதிகத்தில் கால்தூக்கி வைத்துவிட்டால் அது மெல்ல மெல்லச் சைவத்திற் சேர்த்தே விடும்.

நாவலர், தம்காலத்துத் தில்லைவாழ் தீக்ஷிதர்கள் கையால் விபூதி பெற மறுத்துவிட்டார். தீக்ஷிதர்கள் அவைதிகர்களாய்விட்டார்கள். தர்ம விசாரம் நீதி அவர்களை விலகிவிட்டன. வைதிகத் தொடக்கம் அவர்களுக்கு எட்டாததாய், வெகுதூரத்ததாய் விட்டது. அவர்கள் கோயில் வீதியிலேதானும் கால்வைக்கும் தகுதியற்றவர்கள் என்பது நாவலர்பெருமான் கருத்தா யிருந்திருக்கும்.

''சமயத்தினுஞ் சாதி அதிகம் என்று
கொள்வது சுருதி யுத்தி அநுபவம்
மூன்றுக்கும் முழுமையும் விரோதம்.''

உ

சிவமயம்

# உள்ளும் புறமும் உள்ளானை உள்ளுவோம்

பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள்

"அவன் எங்குளான்?" எனக் கடவுளிருப்பை வினவுவார்க்கு அவன் எங்கு இலான்?" என்ற வினு அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகிப் பொலிந்திலங்கு மவனியல்பைத் தெற்றென விளக்கும். ஒன்ருய் வேருய் உடனுய் ஆன்மாவொடு கலந்திலங்குவது போலவே அவன் அகிலமெல்லாங் கலந்திலங்குகிருன். அவனை மோட்சத்திலோ அண்ட முகட்டிலோ இருப்பதாக மாத்திரம் நினைத்துவிடாது இவ்வுலகிலும்—ஏன் எங்கள் இதயக் குகையிலுமே இருப்பதாக நினைந்து உள்நோக்கிப் பார்த்தலே ஆன்மாக்களுக்கு அளப்பிலின்பம் பயக்கும். அண்டவெளியிலே ஆன்மநாயகனை மாலும் பிரமனும் அளந்து காணமுற்பட்டு அம்முயற்சியிற் பின்னடைய அப்பர்பிரானே தாம் அவனைக் கண்டஇடம் தமது உள்ளந் தானென்று தெளிவாகக் குதூகலத்துடன்

"தேடிக் கண்டுகொண்டேன் — திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணுத் தேவனை என்னுளே,
தேடிக் கண்டுகொண்டேன்"

என்கிருர். மால் மயங்குந் தன்மை உடையவன்; நான்முகன் புறத்திலே நான்கு திக்கிலும் நான்கு முகமுடையவனுகையால் இவ்விருவரும் புறவெளியிலே பரனைத் தேடித் தோற்றுப்போதலியல்பே என்ற நயமான குறிப்பும் அப்பர் பாடலிலே அமைந்துளது. இறைவனே உள்ளும் புறமும் உயிர்மூச்சாக இருத்தலோடு சிறுகணமும் என்னைவிட்டு நீங்காது உடன்கலந்து உறைகின்ருனென,

"என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக்
கென்னுளே மன்னும் இன்னம்பரீசனே"

என்று அவன் உயிர்க்குயிராய் இருக்குந் தன்மையை நலம்பெற அந்த அப்பர்பெருமானே விளக்கும் தன்மையையும் ஓர்க.

பொதுவாக நாமெல்லாம் அப்பாலுக்கப் பாலாக உள்ளவனுகத்தான் அவனை நினைந்து வழிபாடாற்றுகிறோம். "துரியமும் கடந்த தூர தூர தூரமே" என அவனைப் பலருஞ் சுட்ட அப்பர்காலத்துத் திருஞானசம்பந்தர் "என்னை இது செய்த பிரான் இவன்" என்று அண்மையில் வைத்துக் காட்டுகிருர். பூரணப்பொருள் ஓரிடத்துமாத்திரம் இருப்பின் அது எப்படிப் பூரணமாகும்? தாயுமானசுவாமிகள் பூசைக்கு மலர்கொய்யச் செல்லுகிருர். மலரிடை இறைவன் வீற்றிருக்கிறதைக் காண்கிருர். ஆகவே மலரெடுக்க மனமும் கூசுகிறது. புறத்திலே இருப்பவனுக அவனை நினைந்து கும்பிடக் கைகூப்பினுல் அவனே தம் உள்ளத்தும் கோயில்கொண்டிருப்பதைக் காண்கிருர். உள்ளும் புறமும் ஒருசேர இருக்குமவனை ஓரிடத்துமாத்திரம் இருப்பவனுகக் கும்பிடும்போது அக்கும்பிடுதலும் அரைக்கும்பிடுதலாகித் தமக்கு நாணந் தருகிறதாம். இதனை மிக நன்ருக

"பண்ணேனுனக்கான பூசையொரு வடிவிலே
பாவித்திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
பனிமல ரெடுக்க மனமும்
நண்ணே னலாமலிரு கைதான் குவிக்கவெனி
னுணுமென் னுளநிற்றிநீ
நான் கும்பிடும்போ தரைக்கும்பிடாதலா
னுன் பூசையெய்யன் மூறையோ?"

என்று அவ்விறைவனையே கேட்கிருர். "உள்ளும்புறமும் ஒருபடித்தாய் நின்று சுகங்கொள்ளும் படிக்கிறை நீ கூட்டிடவுங் காண்பேனே" என்ற அவர் அவா இனிது நிறைவேறியமையாற்ருன் தம் அனுபவத்தை அவர் சர்வசமய சமரசத் தோத்திரமாக மோனஞானப்பொருளை "அங்கிங் கெனுதபடி" என்று நாமுங் கும்பிட வழிகாட்டுகின்ருர்.

புறத்திலே கோயிலின் கண் எம்பெருமானைக் கண்டு கும்பிடுவதெல்லாம் அகத்திலே அவனைக் காணுவதற்காகத்தான்-புறப்பூசை ஆதியனவெல்லாம் அகவழிபாட்டிற்கு உதவுவதற்குகந்தனவாக வேண்டும். இன்று உலகிலே புறநிகழ்ச்சிகளுக்குப் பெரிதும் மகத்துவம் கொடுத்தலால் வழிபாடு வெறும் கேளிக்கையும் ஆடம்பரமும் நிறைந்த அளவில்

நின்றுவிடுகிறது. புறச்சோடிப்பும் வர்ணவிளக்குகளும் வாண வேடிக்கையும் கோவிலையே வியாபாரக் களியாட்ட பூமியாக்குகின்றன. இதனாலேதான் ஒரு மகான் "என் அப்பன் புனித கோயில் இன்று கள்ளர் குகையாகிவிட்டதே" என்றுபிரலாபித்தார். வீண் ஆடம்பரமற்றஅழகும் பூசையும் மிக்க அவசியம். ஆயின் அவை அத்துணையில் நின்றுவிடாது உள்ளத்தும் பதிந்து பக்தியை எழுப்புதல் வேண்டும். சரியையும் கிரியையும் யோகத்திலும் ஞானத்திலும் முற்றுப்பெறுதல் வேண்டும். அரும்பும் மலரும் காயாகியும் கனியாகியுமன்றோ பயன் தருகின்றன!

திருவிசைப்பாவில் திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம் என்ற தலத்தின் கீழ்வரும் பாக்களின் பகுதிகளாகிய "அம்பலத்துள் நின்றாடும் மைந்தனென் மனங்கலந்தானே" "அம்பலத்து நின்றாடும் மைந்தனென் மனத்துள் வைத்தனனே" பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென் பனிமலர்க் கண்ணுள் நின்ற கலான" "மணியம்பலதததுள் நின்றாடும் மைந்தனே அறியுமென் மனமே" என்பவை புறத்தெய்வத் திருவுருவம் அகத்திற் பதிந்து அங்குக் குடிகொள்ளுதலைச் சிந்திக்க வைக்கின்றன. நடராஜ வடிவம் அழகுக் கலையின் சிகரம். அது வெறும் பார்வையளவில் நின்று விடுதலில்லை. உள்ளக்கிழியில் உருவாக அமைகிறது. பட்டினத்துப்பிள்ளையார் தமது கோயில் நான்மணிமாலையில் இறைவன் ஆடுங்கோலத்துடன் உள்ளீடற்ற தம் நெஞ்சத்திடைப் புகுந்து புறத்திற் போலவே கூத்தாடுகின்றான் என்று

"......... ......... பீடில் நெஞ்சத்து
நுழைந்தனை புகுந்து தழைந்தநின் சடையுஞ்
செய்ய வாயும் மையமர் கண்டமும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
எடுத்த பாதமும் தடுத்தசெங் கையும்
புள்ளி ஆடையும் ஒள்ளிதின் விளங்க
நாடகம் ஆடுதி நம்ப!"

எனப் புறக்கூத்தை அகத்தின்கண்ணும் தாம் தரிசித்தவாற்றைத்தெரிவிக்கிறார். அதே நான்மணிமாலையின் 20ஆம் பாவில் அப்பன் ஆடுங்கோலத் திருமேனியை,

"கண்ணிடைப் பொறித்து மனத்திடை
அழுத்தியாங்
குள்மகிழ்ந் துரைக்க உறுதவஞ் செய்தனன்"

எனத்தாம் புறக்கண்ணாற் கண்டமட்டில் விட்டுவிடாது கண்ணினுள்ளும் படமாக எழுதி மனத்திலும் என்றும் நீங்காது அழுத்தியமையால் தம்முள்ளத்தே அருளின்பந் தேங்கிப் புறத்தும் பாட்டாக வெளிப்படும் பெருந்தவம் கிட்டியதெனத் திருவாய் மலர்ந்தருளுகின்றார். உள்ளக்கமலமே உத்தமன் விரும்புமிடமாகையால் அவனை நாமும் அகத்தே காணும் தியானப் பெரும்பயனைப் பெற்று உய்வோமாக!

மயிலும் அயிலும் பொருந்த ஒயிலாக இலங்கும் முருகப்பிரானைத் தம் கண்ணிலும் மனத்திலும் நித்தமும் எழுதிப்பார்க்கும் அடியவரே தேவருக்கும் வேதத்திற்கும் அரியயனுக்குமே எட்டாத முருகனைக் கிட்டிப்பார்க்கும் பெருமையுடையோரெனக் குமரகுருபரர் சந்தச்சிறப்புடன் தந்தருளிய பாடலொன்று எமக்கும் அவனை அண்மையனுகச் செய்தலினால் அப்பாவைப் பொருளறிந்து நயந்து ஓதுவோமாக! அது வருமாறு:-

"வடிவி னழகு மெழுத அரிய
புயமு நறிய செச்சையும்
மருமம் விரவு குரவு மரையின்
மணியு மணிகொள் கச்சையும்
கடவு மயிலு மயிலு மொழுகு
கருணை வதன பத்மமும்
கமல விழியும் விழியு மனமும்
எழுதி எழுதி நித்தலும்
அடிக ளெனவு னடிகள் பணியும்
அடிய ரலது மற்றும்வே
றமரர் குழுவு மகில மறையும்
அரியு மயனு முற்றுநின்
முடியு மடியு முணர வரிய
முதல்வ தருக முத்தமே
முனிவர் பரவு பரிதி புரியின்
முருக தருக முத்தமே"

(முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
முத்தப்பருவம் 10ஆம் பா)

(செச்சை = வெட்சி; மருமம் விரவு குரவு = மார்பில் பொருந்திய குரவம்பூ; கடவும் மயில் = செலுத்தப்படும் மயில்; அயில் = வேல்; வதனபத்மம் = முகத் தாமரை; வடிவின் அழகுதொடங்கி முருகன் கமல விழிவரையுமுள்ள அவன் அங்கங்களை அடியவர்கள் தம் விழியிலும் மனத்திலும் நாள்தோறும் பொறித்து அதிலே தம்மைப் பறிகொடுக்கிறார்கள்)

# ஆசிரிய உலகம்

(நா. முத்தையா)
அதிபர் கனிஷ்ட மகாவித்தியாலயம், நாவலப்பிட்டி.

ஆசிரியனே உலகம்; உலகமே ஆசிரியன். முக்காலத்திலும் உலகத்தைச் சிருஷ்டித்த, சிருஷ்டிக்கிற, சிருஷ்டிக்கும் சிற்பி ஆசிரியனே. பிரமதேவர் பூதஉடலைச் சிருஷ்டித்து ஆத்மாவை அதனுள்ளே புகுத்தியதோடு அவரது வேலை பூர்த்தியாகிவிட்டது. ஆனால் ஆசிரியனுடைய கடமையோ மகத்தானது. உலகத்தோடு சம்பந்தமான உடலையும் பரமாத்மாவோடு சம்பந்தமான ஜீவாத்மாவையும் தெளிவாக்குவதும் இணைத்துக் கொண்டிருப்பதும் உள்ளமாகும். இந்த உள்ளம் பண்படுகின்ற அளவுக்கு ஒருவன் மேலோன் ஆகின்றான். கீழ்நோக்கிப் போகும் அளவுக்கு மிருகநிலைக்குச் செல்கின்றான்.

''மனம் போல வாழ்வு''
''மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்''
''உள்ளத்தனையது உயர்வு''
''உள்ளம் பெருங்கோயில்''
''மனமெனுந் தோணிபற்றி''
''மனமெனுமோர் பேய்க் குரங்கு''
''மனத்துக் கண்மாசிலனாதல் அறம்''

பெரியார்களுடைய இவ்வாக்குகள் ஆழ்ந்து சிந்தித்தற்குரியவை. சிந்திக்கச் சிந்திக்கத் தெளிவு பிறக்கும்.

''மனம் என்பது சிருஷ்டியில் ஆபத்தான ஓர் அம்சம்'' —தாகூர்

''நம்முடைய மனப்பான்மையே துன்பத்தை இன்பமாகவும் இன்பத்தைத் துன்பமாகவும் எடுத்துக் கொள்கிறது.'' —சந்திரபோஸ்

''கற்ற நூல்களை விளக்கிக் கற்பவன் ஆசிரியன். நூல்கள் மூளையில் இருக்கலாம். வாயில் வரலாம். அதனால் வாழ்க்கை திருந்திவிடுமா? மனம் திருந்தாதவரையில் எந்த நூலும் என்ன செய்யமுடியும்''? மு—வ

''நெல்லைக் குத்தும்போது அவ்வப்போது குத்துவதை நிறுத்திவிட்டு உமிபோயிற்றா என்று பார்ப்பதுபோல் மனத்தை நன்கு சோதித்துக் கொள்ள வேண்டும்.'' —ஸ்ரீராமகிருஷ்ணர்

''உன் உள்ளத்தைப் பயன் படுத்திக்கொள். அதற்காகக் கானகம் செல்லத் தேவையில்லை. உள்ளமாகிய தனி ஆச்சிரமத்தில் அந்த மோனக் குடிசையில் அமர்ந்து அற்ப ஆசைகளுக்கும் அற்ப விஷயங்களுக்கும் இடமளிக்காது உயர்ந்த சிந்தனைசெய்.''

—மார்க்க அரேலியர்.

இத்தகைய மனத்தைப் பண்படுத்தி உலக அரங்கில் சமாதானத்தையும் சாந்தியையும் நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியனைச் சேர்ந்ததாகும். இத்தகைய ஆசிரியப் பெருமக்கள் முற்காலத்தில் கானகத்தில் ஆச்சிரமங்களில் வசித்தார்கள். நாட்டவர்கள் நகரத்தவர்கள் தங்களுக்கு அமைதியும் சாந்தியும் அறிவு விருத்தியும் தேடி ஆச்சிரமங்களுக்குச் சென்றனர். அங்கு எல்லாவிதக்கல்வியும் கற்று எவ்வாறு வாழ வேண்டும் என்பதனையும் அறிந்து கொண்டு ஆசிரியரிடம் ஆசியும் பெற்று வந்து வாழ்க்கை ஆரம்பித்தனர்.

இத்தகைய ஆசிரியர்களிடம் விருப்பு வெறுப்போ அன்றி வியாபார மனப்பான்மையோ அன்றித் தொழிலாளி மனப்பான்மையோ பொருளுக்காகக் கலையை விற்கும் செயலோ இருக்கவில்லை. ஒரு நல்ல பிரஜையை உருவாக்கிவிடுவதே அவர்களுடைய கல்வியின் குறிக்கோளாக அமைந்திருந்தது. இன்னார் எனது மாணவர் என்று சொல்லிக் கொள்வதில் ஆசிரியரும், இன்னார் எனது ஆசிரியர் என்று சொல்லிக் கொள்வதில் மாணவரும் மகிழ்வுகொண்டனர். அத்தகைய முறையில் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் இணக்கம் ஒன்றிருந்தது.

இன்றைய உலகில் பல்கலைக்கழகங்களிலும் மற்றும் வித்தியாலயங்களிலும் அடிக்கடி சச்சரவுகள் நிகழ்வதைப் பத்திரிகைகள் மூலம் அறிகின்றோம். மாணவர்களுடைய இந்த இழிந்த நிலைக்குக் காரணர் யார்? ஆசிரியர்கள் தான் காரணர் என்பதை நாம் முதலில் ஒளிவு மறைவு இன்றி ஒத்துக்கொள்ள வேண்டும். ஒரு ஆசிரியனுடைய விருப்பு வெறுப்பும் கொள்கை வேறுபாடும் மாணவருடைய உள்ளத்திலே பலவிதமாறுபாடுகளை ஏற்படுத்துகின்றன.

'குருவிசுவாசம்' என்பது மாணவரிடத்து இல்லை. இதற்குப் பெற்றாரும் ஓரளவு காரணர். பெற்றாருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் இருக்கவேண்டிய இணக்கம் பலகுடும்பங்களில் காணமுடிவதில்லை. பருவஉணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒழுக்கத்தைப் பாழ் அடிக்கின்றனர். 'குருவிசுவாசம்' என்ற சொற்றொடரிலே 'குருவி சுவாசம்' என்ற தொடரும் அமைந்துள்ளதைக் காணலாம். கிளிக்குப் பேச்சுக் கற்றுக் கொடுப்போனுடைய சுவாசம் கிளியினுடைய சுவாசத்தோடு கலக்கும்போது தான் கிளிபேசுவதற்கு இலகுவில் கற்றுக் கொள்ளுகின்றது. இத்தகையதோர் இணக்கம் ஆசிரிய மாணவர்களுக்கிடையில் ஏற்படும் போது தான் உண்மையான கல்வியைப் பெறமுடியும்.

ஒரு மாணவன் கல்வியைக்கற்று வித்தியாலயங்களையோ பல்கலைக் கழகங்களையோ விட்டு வெளியேறும் வரை அரசியல் போன்ற நாட்டு விவகாரங்களிலும், காதல் போன்ற வாழ்க்கை விவகாரங்களிலும் ஈடுபடக்கூடாது. இது எங்கள் நாட்டில் சட்டபூர்வமாகக் கொண்டுவரப்பட வேண்டும். ஆண்களும் பெண்களும் சலந்து கல்விகற்றலும் கல்வி கற்பித்தலும் தவிர்க்கப்பட வேண்டும். ஆண்களுக்குத் தனிப் பாடசாலைகளும் தனிப்பல்கலைக்கழகங்களும் கல்வி கற்பிப்பதும் அங்ஙனமே அமைய வேண்டும். மாணவர்கள் பிழையான வழிகளில் செல்வதற்கேற்ற சந்தர்ப்பங்களை அளியாதிருத்தல் பெற்றாரினதும் ஆசிரியரினதும் அரசாங்கத்தினதும் கடமையாகும். மனிதவாழ்க்கையில் பிழைசெய்யச் சந்தர்ப்பங்கிடைக்காமையினால் தான் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானோர் நல்லவர்கள் என்ற பெயரைப் பெறுகிறார்கள். பிழை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தால் அவர்கள் பாடும் எப்படியோ? ஆகவே பிழை செய்யச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தாதிருத்தலே முக்கியமாகும்.

ஒரு நல்ல சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுடையதுதான் என்பதை ஒவ்வொரு ஆசிரியனும் முதலில் உணர வேண்டும். இவ்வுணர்வற்றவர்கள் ஆசிரியர்களாக இருந்தும் பலன் இல்லை. எல்லாரும் ஆசிரியர்களாகிவிட முடியாது. தொழில் கிடைத்த பின்பாவது தன்னை ஆசிரியனுக்கிக் கொள்ள முடியாதவன் அத்தொழிலை உதறிவிட்டுச் செல்லுதல் சமூகத்திற்குச் செய்த ஒரு தொண்டாகும். இக்காலத்தில் அரசாங்கம் சேட்டுவிக்கெற்றுக்குச் சம்பளம் கொடுக்கிறதே தவிர ஆசிரியருக்குச் சம்பளம் கொடுப்பதில்லை. சேட்டுவிக்கெற்றுக்குச் சம்பளம் கொடுக்கும் முறை தவிர்ந்து ஆசிரியருக்குச் சம்பளம் கொடுக்கும் முறை அமுலுக்குவருமானால் ஓரளவு நல்ல ஆசிரியர்களைப் பாடசாலைகளில் காணலாம். ஒருவகுப்புக்குள் ஆசிரியர் நுழையும்போது தனதுமகன் அவ்வகுப்பில் இருக்கின்றான். அவன்தான் வகுப்பில் கடைசி மாணவனாக இருக்கிறான் என்ற பாவனையை வரவழைத்துக் கொள்ளவேண்டும்.

ஆசிரியர்கள் எல்லாரும் சம்பளத்திற்காகத் தான் கல்விகற்பிப்பவர்கள் ஆனாலும் தாம் செய்யுந் தொழிலை சேவையாக மாற்றிக் கொள்ளலாம். சேவை மனப்பான்மை உடைய ஒரு ஆசிரியனால் தான் சேவை மனப்பான்மையுடைய ஒரு சமூகத்தை உருவாக்கமுடியும். உடலில் உயிர்போன்றவன் சமூகத்தில் ஆசிரியன், உயிருக்கே ஆபத்து ஏற்பட்டால் உடலை யார்தான் விரும்புவார்கள்?

கமக்காரன் ஒருவன் தலைத்தரமான விதைகளை அடுத்த ஆண்டு விளைவுக்காகத் தெரிவு செய்துவைத்தல்போல அறிவு ஆற்றல் ஒழுக்கத்திற் சிறந்தவர்களே ஆசிரியர்களாகத் தெரிவு

செய்யப் பெறுதல் வேண்டும். அழகிய ஒரு மாளிகையை மண்ணுள் மறைந்து இருக்கும் அத்திபாரக்கற்கள் தாங்குவதுபோல ஒரு நல்ல சமுதாயத்தைத் தாங்கி நிற்பவனும் ஆசிரியனே.

எங்கள் ஆசிரியபரம்பரை முதன்முதல் தட்சணுமூர்த்தியிடமிருந்தே ஆரம்பித்துள்ளது. நால்வருக்குக் கல்லால விருட்ச நீழலின் கண் இருந்து உபதேசத்தை ஆரம்பித்தார். மாணவருடைய உளநிலையை அறிந்து சொல்லாமற் சொல்லி வைத்தார் தட்சணுமூர்த்தி. தட்சணுமூர்த்தி சின்முத்திரையைப் பிடித்த வண்ணம் தாமே யோக நிலையில் இருந்தருளினர். வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. மாணவர்களும் அதனைப் புரிந்து கொண்டு அவ் வண்ணமே இருந்து தமது சந்தேகங்களைப் போக்கிக்கொண்டனர்.

ஆசிரியன் சொல்லைக் குறைத்துச் செயலைக் கூட்ட வேண்டும். புகைத்தல் தீது என்று மாணவர்களுக்குப் போதித்தலிலும் பார்க்க தானே புகையாதிருத்தல் எத்தனையோ மாணவர்களைத் திருத்த ஏதுவாகும். பிறஉயிர்களைக் கொல்லுதல் பாவம் என்பதை உபதேசிப்பதிலும் பார்க்கத் தான் புலால் உண்ணுது விடுதல் பலருடைய உள்ளங்களைத் திருத்த ஏதுவாகும். மதுகொடியது என்று பிள்ளைகளுக்கு உபதேசம் செய்யவேண்டியதில்லை; ஆசிரியரே மதுப்பழக்கத்தை ஒழித்து விட்டால் போதும். கோயில் பழக்கம் அவசியமானது என்று வற்புறுத்த வேண்டியதில்லை. ஆசிரியரே கோயில் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இன்றைய சமுகம் செயலையே எதிர்பார்க்கிறது.

சுபாவத்தைவிடப் பழக்கம் ஆயிரம் மடங்கு வலியுடையது என்பது சேர் ஐசாக் நியூட்டனின் வாக்கு. பழக்கத்தினுல் மாணவர்களை நல்ல உரு ஆக்கலாம். அதற்கு ஆசிரியனது நல்ல பழக்கமே ஆதாரமானது.

''ஆசிரியர்களும் மாணுக்கர்களும் சில குணுதிசயங்களைஉடையவர்களாயிருத்தல் அவசியம். அறிவு வளர்ச்சியில் உண்மையான அவாவும் விடாமுயற்சியும், தூய்மையுமே மாணுக்கனுக்குரிய இலக்கணங்களில் முக்கியமானவை. ஆசிரியனே மறைகளின் மெய்ப்பொருளை உணர்ந்தவனுயிருத்தல் அவசியம். எல்லாச் சமயத்தாரும் தத்தம் வேத நூல்களைப் படிக்கிருர்கள். இந்துக்கள் தத்தம் வேதங்களை உணர்ந்து படிப்பதில்லை. வேதத்தின் மெய்ப்பொருளை அறிவதுதான் உண்மை ஆசிரியனின் இலக்கணம்'' சுவாமி விவேகானந்தருடைய மேற்படி வாக்கியங்கள் ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டியாக அமைவதாக.

---

**குழந்தைகள் எப்போதும் கண்களினுல் கற்றுக் கொள்வதை விடக் காதுகளினுல்தான் அதிகம் கற்றுக் கொள்ளுகின்றன.**

*மகாத்மா காந்தி*

# ஆளுடைப்பிள்ளையின் திருமுறையில் உள்ள சித்தாந்தம்

பேராசிரியர் திரு. **சிறிஸ்கந்தராசா**

சிவநெறியை வளர்த்த செம்புலச் செல்வர்களுள் சமயகுரவர் என்று அழைக்கப்பெற்ற சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் தலைசிறந்தோர். முற்பிறவித் தொடர்பால் கருவிலே அருள்ஞானம் பெற்று மண்ணிலே வாழ்நாள் முழுதும் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெற்றவர்.

''பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப் பக்திபண்ணும் தொண்டர்'' முன் வரிசையிலே ஞானசம்பந்தர் வைக்கப்படுவார். மூன்று பராயம் முடிவதற்குள் அம்மை அப்பரின் திருக்கோலம் கண்டு பாலடிசில் உண்டு சிவஞானம் பெற்றார். அன்றுதொட்டு அவர் உளப்பாங்கில் மாற்றம் ஏற்பட்டது.

*''சூரியகாந்திக் கல்லினிடத்தே செய்ய*
*சுடர்தோன்றி இடச்சோதி தோன்றுமாபோல்*
*ஆரியனும் ஆசான் வந்தருளால் தோன்ற*
*அடிஞானம் ஆன்மாவில் தோன்றும் தோன்றத்*
*தூரியனும் சிவம் தோன்றும்..... ...''* என்ற

அருணந்திசிவாச்சாரியாரின் கருத்துப் பிரதிபிம்பித்தலை நாம் காணலாம்.

முருகப்பெருமானே திருஞானசம்பந்தராய் திருவவதாரஞ் செய்ததனுல் அவருடைய அழுகைக் குரலைக் கேட்கமுடியாத அம்மையப்பர் பாலூட்டினர் என்று கருதப்பட்டது.

*''புழுகொழுகு காழி கவுணியரில் ஞான*
*புனிதனென ஏடு தமிழாலே*
*புனலிலெதிர் ஏற சமணர் கழு ஏற*
*பெருதகவ வீர குருநாதா......''*

என்று அருணகிரிநாதரும்,

*''பூதலமதனில் காழி நன் னகரிற் புண்டரீகன்*
*தடத்தொருசார்*
*மாதவம் புரிவோர் முன்னிளங் கதிர்போல்*
*மதலையாய் வந்தனன் முருகன்''*

என்று சீகாழிப் புராணமும் கூறியது நோக்கற்பாலது.

இஃது இவ்வாறு இருக்க உரோமச முனிவர் ஞானசம்பந்தராய்த் திருவவதாரஞ் செய்தார் என்று புலவர் புராணம் கூறிகின்றது. முன்னொருகாலத்தில் பாசபந்தம் நீங்கித் தூய வழிபாட்டால் இறைவனைத் தொழுத மகான் என்பது சேக்கிழார் கருத்து.

*''பண்டு திருவடி மறவாப் பான்மையோர்*
*தமைப் பரமர்*
*மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டின்*
*அளித்தருள........''*

என்று கூறுகின்றது பெரியபுராணம். ஞானசம்பந்தரும் தம் பழம்பிறப்பைத் தாமே கூறியுள்ளார்.

''பண்டு நான் செய்த வினைகள் பறையவோர் நெறி அருள் பயப்பார்'' என்றும், வேறுபல சந்தர்ப்பங்களிலும் ஞானசம்பந்தரே விளக்கியுள்ளார். இப்படிக் கூறும்பொழுது ஆகாமிய, பிராரப்துவ, சஞ்சித கன்மங்களுக்குச் சான்றுகூறிச் சித்தாந்த நெறியை உறுதிப்படுத்தியுள்ளார்.

*''இறைசத்தி பாசம் எழில் மாயை ஆவி*
*உறநிற்கும் ஓங்காரத்துள்''* என்றும்

*''அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்*
*பொருள்நூல் தெரியப் புகும்''*

என்ற உமாபதிசிவத்தின் வாக்கிற்கிசைய சைவத்தின் முதல் நூலாகிய வேதமும் ஆகமமும் கூறுவது ஓங்காரத்தின் விரிவையே என்பதமையவும் ஞானசம்பந்தரின் வாயில் முதற்றேன்றிய திருமுறை ''தோடுடைய........'' என்பதே.

தேவாரம் தமிழ்வேதம் எனப்படும். வேதம் 'ஓம்' என்ற நாதத்துடன் தொடங்குவது போல திருமுறைகளும் ''தோடு'' என்பதனுல் ஓங்காரத்துடன் தொடங்குகின்றன. 'தமிழ்' என்ற பதத்தின் முதல் எழுத்தாகிய தகர மெய்யுடன் ஓங்காரம் சேர்ந்து ''தோடுடைய'' என்று ஒலிக்கிறது. சேக்கிழார் பெருமான் இதை நன்கு தெளிவுறுத்தியுள்ளார்.

''எல்லையில்லா மறைமுதல்மெய் உடனெடுத்த
எழுதுமறை
மல்லல் நெறிந்தமிழால் இம்மா நிலத்தோர்க்
குரைசிறப்ப ........''

முத்தி பெறுவதற்கு நான்கு பாதைகளைச் சைவசித்தாந்தம் காட்டுகின்றது. ஒவ்வொரு வரும் தமது பக்குவத்துக்கேற்ப அதைக் கடைப்பிடிக்கலாம், உள்ளத்தில் தூய்மை தோன்ற இப்பாதங்கள் வழிகாட்டும். அப் பெருநோக்கை நிறைவேற்றச் சரியை, கிரியை, யோக, ஞானம் என்ற நான்கு பாதங்கள் வகுக்கப்பட்டுள்ளன, சரியையைக் கடைப் பிடித்துத் தாசமார்க்கத்தில் நின்று சாலோக முத்தியை அடையலாம் என்பதை ஞானசம் பந்தர் நன்கு விளக்கியுள்ளார்,

''கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி......''
என்றும்

''துண்ணனென விரும்பும் சரியைத் தொழிலர்
தோணிபுரமாமே''
என்றும் உறுதிகூறியுள்ளார்.

கிரியையாவது சிவலிங்கத் திருமேனியைப் புறத்தும் அகத்தும் பூசனைபுரிந்து வழிபட் டுச் சற்புத்திரமார்க்க வாயிலாகச் சாமீப முத் தியை அடைதலாம்.

''தடங்கொண்டதோர் தாமரைப் பூமுடி
தன்மேற்
குடங்கொண்டடியார் குளிர்நீர்
சுமந்தாட்ட........''

என கிரியாபாதத்தின் பெருமையை வெளிப்படுத்துகின்றார்.

யோகம் என்பது அருஉருவத் திருமேனி யைத் தியானஞ்செய்து உள்ளத்தால் ஐக் கியப்படுதலே. யோகபாதத்தைப் பின்பற்றிச் சன்மார்க்கத்தில் நின்று சாரூபமுத்தியைப் பெறலாம் என்பதை வற்புறுத்தியுள்ளார்.

''சினமலியறு பகை மிகுபொறி சிதைதரு
வகைவழி நிறுவிய
மனனுணர் வொடு மலர்மிசை எழுதருபொருள்
நியதமும் உணர்பவர்
தனதொழிலுறுவது கொடுவடை
தகுபரனுறைவது நகர் மதின்
கனமருவிய சிவபுர நினைபவர் கலைமகள்
தர நிகழ்வரே''

மேற்கூறப்பட்ட பதமுத்திகளிலும் மேலான பரமுத்தியடைவதற்கு ஞானபாதத்தில் சன் மார்க்க நெறியில் நிற்கவேண்டும்.

''ஊனத்திருள் நீங்கிடல் வேண்டில்
ஞானப் பொருள்கொண்டு அடிபேணும்''
என்பதனாலும்

''நுண்ணறிவால் வழிபாடு செய்யுங்கால்
உடையான்''
என்பதனாலும் நன்கு வலியுறுத்தி உள்ளார்.

தடத்தநிலை சொரூபநிலை என இறைவனின் தன்மை இருவகைப்படும். மனத்தால் கற்பனை செய்ய முடியாத நிலை சொரூபநிலை. இதுவே அனாதி முத்த சித்துருவாய் சுயம்பிரகாசமாய் நிற்கும் நிலை.

''இன்னவுரு இன்னநிறம் என்றறிவதேல்
அரிது நீதிபலவும்
தன்னவுருவாம் என மிகுத்ததவன்''
என்றும்

''எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ''
என்றும் இத்தன்மையை விளக்கியுள்ளார்.

இத்தகைய இறைவன் உயிர்கள்மேற் கொண்ட அன்பினால் பஞ்சகிருத்தியத்தைச் செய்வதற்காகத் தடத்த நிலையை எடுக்கின்றார்.

''ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு
அருள் நல்கி'' என்றும்

''மலைமகள் பாகமாக அருள்காரணத்தில்
வருவார்''
என்றும் பாடுகிறார்.

தெய்வ வழிபாட்டின் சிறப்பைப் பல இடங் களிலும் வலியுறுத்தியுள்ளார், அன்பை அடிப் படையாகக் கொண்டது சமயம் என்னும் உண்மையை

''ஒருவன் கழல் அல்லது எனதுள்ளம்
உணராரே'' என்பதனாலும்

''என்உள்ளம் கவர் கள்வன்''
என்பதனாலும் நன்கு விளக்கியுள்ளார்.

''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி
ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்'' என்ற
சித்தியார் கூற்றுக்கமைய ஞானசம்பந்தர்

''பெம்மான் இவன் அன்றே'' எனச் சுட்டிக் காட்டியும்

''அலையாரும் புனல்துறந்த அமணர் குண்டர் சாக்கியர்

தொலையாதங் கலர்தூற்றத் தோற்றங்காட்டி ஆட்கொண்டீர்''

எனவுங் கூறுதலினல் இறைவன் ஆன்மாக் களைத் தேடி அமையும் தன்மை தெளிவாயிற்று.

உயிர்களுக்கு இருவினைப்பயனை ஊட்டு பவன் இறைவன் என்பதனை ஆளுடைப்பிள் ளையார் நன்கு விளக்கியுள்ளார்.

''இனியன அல்லவற்றை இனிதாக நல்கும் இறைவன்'' என்ருர். உள்ளங் கசிந்து வழிபடும் அடியாரை பிராரப்துவ கன்மம் பற்ருது என் பதை

''வந்தித்து இருக்க அடியார்தங்கள் வருமேல் வினையோடு

பந்தித்திருந்த பாவந்தீர்க்கும் பரமர்''

என நன்கு விளக்கியுள்ளார்.

சைவசித்தாந்தக் கருத்துக்களும், புராண வரலாறுகளும், நீதிநூற் கருத்துக்களும், உல கியல் உண்மைகளும் ஆளுடையபிள்ளையார் என்று அழைக்கப்பட்ட திருஞானசம்பந்தரின் பாடல்களில் மிளிர்கின்றன. அவருடைய பதி கங்களில் ஒரு அமைப்பை அல்லது ஒற்றுமை யைக காணலாம். முதலாவது பாடல் தொடக் கம் பதினேராம் பாடலாகிய திருக்கடைக் காப்பு வரை பதிகந்தோறும் இவ்வொற்றுமை தோற்றும். ஆகவே திருமுறைகள் பக்திநூல் மாத்திரமல்ல, சைவசித்தாந்த விளக்க நூலாக வும் அமைந்துள என்பது தெளிவு.

---

நம்மிடம் பிறர் அன்பு செலுத்த வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டும், ஆனல் அதே காலத்தில் நாம் பிறருக்கு எப்போதும் மனத் தாலும் செயலாலும் தீங்கிழைத்துக் கொண்டும் இருப்போமாயின் — அதா வது பிறரை வெறுத்துக் கொண்டும் பகைத்துக் கொண்டும், சாபமிட்டுக் கொண்டும் இருப்போமாயின் நாம் அழிந்துவிடுவோம் என்பதில் ஐயமில்லை.

பாரதியார்

# சைவசமய தத்துவங்கள்

**சைவப்புலவர் வை. இராமகிருஷ்ண ஐயர்**
ஆசிரியர், யாழ் | வேலணை சைவப்பிரகாசவித்தியாசாலை

சைவம் சிவனுடன் சம்பந்தமாவது என்றும் அன்பே சிவம் என்றும் அருளினர் திருமூலர், சிவம் என்ற சொல்லுக்கு நன்மை, மங்கலம் என்ற பொருள்கள் உள. எப்பொருளினிடத்து அமங்கலம் சிறிதுமின்றி மங்கலம் பூரணமாயுள்ளதோ அதற்குச் சிவன் என்று பெயர். சிவன் என்னும் செம்பொருளோடு பசுவாகிய உயிரைச் சம்பந்தப்படுத்தும் நெறியே சைவம்.

உலகத்தில் நெறிகள் பலவாகப் பெருகியிருப்பதற்குக் காரணம் விரிவான அறிவின்மையும், பொருமையுமாகும். இதனை "விரிவிலா அறிவினர்கள் எரிவினற் செய்தாரேனும்......" என்ற அப்பர் தேவார அடிகளால் அறியலாம். "எச்சமயத்தோர் சொல்லும் தீதொழிய நன்மைசெயல்"—என்பது ஔவையார் வாக்கு. தத்தம் மாற்றங்கள் நிறுவிய சமயிகள் பலரும் தத்தமது சமய நூல்கள் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமே அறமென ஒருமுகமாக ஒத்துக்கொள்வர். விதி விலக்குகள் சமயங்கள் தோறும் வேறுபடுகின்றன. ஒரு சமயம், ஊன் பஞ்சமகா பாதகங்களுள் ஒன்ருன கொலையின் மூலம் பெறப்படுவதால் அதை உண்ணுதே என்கின்றது. இன்னெரு சமயம் இவ்வுலகில் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தும் உன் பொருட்டாகவே. ஆதலால் ஊன் உண்பது பாவமாகாது என்கின்றது. இவ்வாறு சமயங்கள் மக்கள் அறிவுநிலைகளுக்கேற்பப் பலபடிகளாக அமைந்துள்ளன. நிலம் முதல் நாதம் ஈருகிய முப்பத்தாறு தத்துவங்களிலும் உலகாயதம் முதல் நிமித்த காரண பரிணும வாத சைவம் ஈருகிய நால்வகைச் சமயங்களின் முத்தித் தானங்கள் நிலைபெறுகின்றன. புறச் சமயங்களிற் சென்று பிறந்த உயிர்கள் அவ்வச் சமயங்கள் விதித்தபடி ஒழுகிய புண்ணிய மேலீட்டினுல் மேல்நிலையாகிய அகச்சமயங்களை அடைந்து அவற்றிலும் ஈட்டிய புண்ணிய வசத்தால் சைவத் திறத்தடைந்து அதிலும் சரியை, கிரியை, யோகம் ஆகிய நிலைகளைக் கடந்து ஞான நிலைபெற்று முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த சாயுச்சியப் பேற்றையடைவர் என்று சைவசித்தாந்த நூல்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. மற்றைச் சமயங்கள் அவ்வந் நிலைகளில் அமைந்திருப்பதை நீதியாகக், காண்கின்றது எதுவோ அதுவே சமயம், என்ற கருத்தில் சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாசாரியார் "...நீதியினுல் இவையனைத்தும் ஓரிடத்தே காணநின்றது யாதொரு சமயம் அது சமயம்..." என அருளிய தொடர் ஈண்டு நம் சிந்தனைக்குரியது. இதனுல் சைவத்துக்கு 'சமரச சன்மார்க்கம்' எனவும் பெயர் உண்டாயிற்று. சோபான முறையில் படிக்கிரமமாக மற்றைச் சமயங்கள் அமைந்திருப்பதை நீதியாகச் சைவம் கண்டமையினுல் "...மேன்மை கொள் சைவ நீதி..." என்று கச்சியப்பரும் "...மௌனமோலி அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம் அழகிதந்தோ..." என்று தாயுமானவரும் கூறிச் சைவத்தின் சமரச நெறியைப் பாராட்டியுள்ளார்.

முதற் பந்தியிற் சைவத்தைப் பற்றியும், இரண்டாம் பந்தியிற் சமயத்தைப் பற்றியும் சுருங்கக் கூறினும். இனி தத்துவங்களைப் பற்றிக் குறிப்பிடுவாம். தத்—அது, துவம்—நீ தத்துவமசி என்ற வேதாந்த மகா வாக்கியம் அது நீ ஆகிருய் என்று பொருள்படும். இதன் உண்மைப் பொருளை உணரமாட்டாத மாயாவாதிகள் அல்லது ஏகான்மவாதிகள் பசுவாகிய ஆன்மாவைப் பதியாகிய பிரமமே எனக் கருதுகின்றனர். சைவசித்தாந்தம் சித்தமல

மறிந்தால் சீவன் சிவனுகும் என்கின்றது. சீவன் சீவன் ஆனுலும் சிவத்தின் ஐந்தொழில்களைச் செய்யாது அதன் இன்பத்துள் அழுந்தி பேரின்பமொன்றனையே அனுபவிக்கும் என்பது சைவ சித்தாந்த நெறி. இதனை "உம்பர் பிரான் உற்பத்தியாதிகளுக் குரியன் உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" என்ற சித்தியார் வரிகளால் அறியலாம். தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மையென்ற பொருள் இருப்பதால் அடிப்படையான ஒருண்மையைச் சுருக்கமாக விளக்குகின்ரும்.

இறைவன் இவ்வுலகிலும் உலகிலுள்ள இயங்கியற் பொருள் (சங்கமம்) நிலையியற் பொருள் (தாவரம்) ஆகிய எல்லாப் பொருள்களிலும் கலந்து நிற்கும் முறையை (பொற்பணிபோல் அபேதம்) பொன்னும் ஆபரணமும் போல வெவ்வேருயிருப்பினும் அவை பொருள் தன்மையால் ஒன்ருதல்போல அபேதம் எனவும், (இருள் வெளிபோற் பேதம்) இருளும் ஒளியும் போல வெவ்வேருன பொருள்களாக அமைதலின் பேதம் எனவும், (சொற்பொருள்போற் பேதாபேதம்) சொல்லும் பொருளும் என இரண்டாக நிற்கையில் பேதமாகவும் சொல்லாலும் பொருளாலும் குறிக்கப்படுவதொன்றே யாகலின் அபேதமாகவும் இருக்கும் சொற்பொருள் போல (ஒருகால் பேதமாயும் ஒருகால் அபேதமாயும் தோன்றும்) பேதாபேதம் எனவும் மூவகை நிலைகளாக உதாரண முகங்களால் விளக்கிக் கூறுவர்.

இவ்வாருன அபேதக் கொள்கை சங்கரர் வகுத்த அத்வைத நெறியிலும், மாயாவாதம் அல்லது ஏகான்மவாதம், வேதாந்தம் ஆகிய நெறியிலும் பேதக் கொள்கை மாத்துவர் கண்ட பேதாபேதக் கொள்கை இராமாநுஜர் காட்டிய விசிட்டாத்வைத நெறியிலும் அமைந்தமை காணலாம். இறைவனது கலப்பு இம்மூன்று தன்மைகளாகவும் அமைந்தன அல்ல என்பது சைவ நூல்கள் கண்ட உண்மை. சைவ சித்தாந்த நூல்கள் இப்பிறிவரிய கலப்பை 'அத்துவிதம்' என்றே குறிக்கின்றன. 'அத்துவிதம்' என்ற வடசொல்லின் பொருளை இரண்டறக் கலத்தல் என்று கூறினுலும் பொருள் முழுமையாக விளங்காது. முழுமையாக விளக்க வேண்டுமாயின் ஒன்ருய், வேருய், உடனுய் என விரிக்க வேண்டும். பின்வரும் உதாரணங்களால் இந்நிலையை ஒருவாறு உணர்த்தலாம். (உடலுயிர்) உடலுயிர் போலக் கலப்பினுல் ஒன்ருயும்; (கண்ணருக்கன்) கண்ணொளியும் கதிரொளியும போல பொருள் தன்மையால் வேருகியும்; (அறிவொளி) ஆன்ம போதமும் கண்ணொளியும் போல உயிர்க்குயிராதல் தன்மையால் உடனுகியும் அத்துவிதமாகக் கலந்துள்ளான். (குறிப்பு:- இறந்தவனுடைய கண்ணொளி சில விநாடிகளுக்கு அவன் கண்ணை விட்டு நீங்குவதில்லை. ஆன்மபோதமாகிய உயிரறிவு இன்மையால் காட்சியும் அவனுக்கு புலனுவதில்லை. கண்ணொளி கெடமுன் அக் கண்ணை கண் சத்திர வைத்திய நிபுணர்கள் அகற்றிப் பாதுகாத்து உயிரறிவு உள்ள கண்ணொளியற்ற இன்னொருவனுக்குப் பொருத்திக் காட்சியைப் புலனுக வைக்கின்றனர். இதனுற் கண்ணொளியும் உயிரறிவும் உடனுய் இருக்கும்போதே காட்சி புலனுகின்றமை தெளிவாகப் பெறப்படுகின்றது.)

இவ்வாறு இறைவன் பெத்த நிலையிலும் ஆன்மாக்களுடன் அத்துவிதமாய்க் கலந்து நின்ருலும் உயிர்கள் இதனை உணராமல் பெத்த நிலையில் ஆணவத்தோடு அத்துவிதமாயும், முத்தி நிலையில் சிவனேடு அத்துவிதமாயும் கலந்து நிற்கின்றன.

> ''ஆணவத்தோ டத்துவித மானபடி
> மெய்ஞ்ஞானத்
> தாணுவினே டத்துவிதஞ் சாருநா
> ளெந்நாளோ"

என்ற தாயுமானவர் பாடலால் இக்கருத்தை அறியலாம். தாணு—சிவன்.

> ''பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
> பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்''

என்று சைவத் திருமுறைகளுள் பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்தில் சைவசித்தாந்தியாகிய உங்கள் திருமுலர் எங்கள்

'பொற்பணி' யாகிய அபேதக் கொள்கையை அல்லது அத்வைத நெறியையே விளக்கியுள் ளார் எனச் சிலர் சைவ சித்தாந்த நெறியை மறுக்கு முகமாக ஆதாரங் காட்ட முற்படுகி ன்றனர். அவர்கள் 'பொற்பணி' என்ற சொல் மாத்திரையான மேற்போந்த அடிகளை மாத் திரம் எடுத்துக்காட்ட வருகின்றனர். இது அபேத நிலையை எடுத்துக் காட்ட வந்த உதாரணமன்று. உலகில் இறைவன் கலந்து ள்ள அத்துவிதக் கலப்பை உணர்த்த வந்த உதாரணமே.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை"

"பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்"

என்ற உவமைகளும் அத்துவிதக் கலப்பை விளக்க எடுத்தாளப்பட்டமையை உற்றுநோக்க வேண்டும். "பார்முதற் பூதங்களாகப் பிரபஞ் சத்தை நோக்க பரம்பொருள் 'மறைந்து விடும். பிரபஞ்சத்தைப் பரம்பொருளாக நோக்க பார்முதற் பூதம் பரம்பொருளில் மறைந்து விடும்'' என பரம்பொருள் பார் முதற் பூதங்களோடு இரண்டறக் கலந்து நிற் கும் முறையினைத் தெருட்டியமை காண்க. "பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத் துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே…" "…பிறங்கொளிசேர் விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி…" "…ஒன்று நீயல்லை யன்றி யொன்றில்லை யாருன்னை அறியகிற் பாரே" என்ற திருவாசக அடிகள் இந்த இரண்டற்ற அத்துவித நிலையை நமக்கு நன்கு தெளிவாக்குகின்றன.

அநுட்டானங்கள், பூர்வ அபரக் கிரியை கள், திருக்கோவிலில் நடைபெறும் நித்திய நைமித்தியங்கள், தெய்வத் திருவுருவங்கள் யாவற்றிலுமே சைவ சமய உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. இவற்றில் எதை எழுதுவது எதைத் தவிர்ப்பது. "அவையே தானேயாய்" என்ற சிவஞானபோதச் சொற் றொடர்ப் பொருளை அவையேயாய்-ஒன்றாய் எனவும், தானேயாய் - வேறாய் எனவும், அவையே தானேயாய் - உடனாய் எனவும் சிற்றறிவுக் கெட்டியவாறு விளக்கியதுடன் விரிவஞ்சி நிறுத்திக் கொள்கின்றேன்.

---

கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை நிரூபித்துக் காட்ட முடியாது, அது தேவையுமில்லை. கடவுள் ஒருவர் உண்டு என்பதை நாம் உணராவி டின் அதனால் நமக்குத்தான் ஊறுபாடு.

*மகாத்மா காந்தி*

உ
சிவமயம்
முருகன்துணை

# காதல்

இக்கட்டுரை பலாலி ஆசிரிய கலாசாலைச் சைவமாணவர் மன்ற ஆண்டுச் சஞ்சிகையில் இடம் பெறுவதாயிருந்தாலும் குறித்த கலா சாலையின் கிறிஸ்த, முஸ்லீம் மாணவர் மன்றங் களும் விரும்பி வரவேற்றெப்புக் கொள்ளு மென்ப தெனது நம்பிக்கை.

—ஏனெனில்

இனம், மதம், மொழி, நாடு என்கின்ற எவ்வித பாகுபாடு மின்றிப் பூவுலகம் முழு வதிலு முயிர்வாழுகின்ற மக்கட் குலத்தவர் களில் குடும்ப வாழ்க்கை நடத்துகின்ற அனை வரும் பெறவேண்டிய;

**"துதிவாணி வீரம் விசயஞ்சந் தானந்**
**துணிவு தனம்**
**மதிதா னியஞ்சவு பாக்கியம் போகம் வடிவழகு**
**புதிதாம் பெருமை யறங்குலம் நோயகல்**
**பூண்வயது"**

ஆகிய பதினறுவகைப் பேறுகளுள்ளே சிறந்த தாகிய மகப்பேற்றைப் புத்திக் குறைவு, பிணி, அற்பாயுள், அங்கவீனம், துராசாரமாகிய குறை பாடுகளற்ற நன்மகப் பேறுயடைவதற்கேற்ற வழிவகைகளை விபரிக்கின்ற "குடும்ப வாழ்வில் அத்துவிதம்" என்னும் நூலின் பன்னிரண்டு அத்தியாயங்களு ளொன்ருகிய காதல் என் கின்ற அருமருந்தன்ன உத்தமப் பண்பைப் பற்றிய தாதலின் எவருமிதனைப் பொதுத்தரும மாக ஏற்றுக் கொள்வார்களென்கின்ற துணி பாலென்க.

காதலென்பது குடும்ப வாழ்க்கையிலுபயோ கிப்பதற்காகச் சிருட்டி தத்துவத்தாலமைக்கப் பெற்றிருக்கின்ற ஒரு தெய்வீகப்பண்பு.

அது ஆச்சிரமங்கள் நான்கும் முறையாக அனுட்டிக்கப் பெற்றுவந்த காலத்தில் முதற் கண்ண தாகிய பிரமசரிய காலத்தில் எடுத் தாளப் பெறுமல் கிருகஸ்தாச்சிரம காலத்தில் மாத்திரமே தேவை கருதிக் கையாளப் பெற்று வந்த ஒரு சேமநிதி போன்ற சற்குணமாகும்.

மனம், வாக்கு, காயமாகிய முக்கரணங்களுட் சிறந்த மனத்தினிடமாக நிகழுவது காதல்.

மகிழ்ச்சி, அன்பு, காதலாகிய மூன்று குணங் களும் ஒன்றன்பின் னென்ருக நிகழ்ந்து பயன் தருவன. தம்பதிகளுக்கு.

காதலினுடைய அருமை, பெருமைகளையும் அது உபயோகமாகும் இடம், காலங்களையும் சிந்தித்துணரக் கூடிய விவேகமில்லாதவர்கள் அக்காதலைத் தகாவிடத் தள்ளிவீசி யவம்புரி வதால் அதுகாரணமாகக் காதலினுடைய விலையை அறிஞர்கள் சிலர் குறைத்து மதிப் பதுமுண்டு.

இரும்பு, செம்பு, காரீயம் முதலான கடின லோகங்களைச் சிந்தூரம், பஸ்மம் ஆக்குவதற் குக் கையாளும்படி வைத்திய சாத்திரங்களிற் கூறப்பெற்றுள்ள. செயநீர்போல மனமாகிய பண்டத்தை உருகச் செய்கின்ற அமுதரசம் காதல்.

மகிழ்ச்சி, அன்பு, காதலாகிய மூன்றும் அடுத்தடுத்துப் பிரதிபலிப்பவை.

**முதலாவது மகிழ்ச்சி உள்ளத்தை நிறையச்**
**செய்யும்**
**அடுக்க அன்பு உள்ளத்தை இளகச் செய்யும்**
**பின்பு காதல் உள்ளத்தை உருகச் செய்யும்**

உருகித் திரவத்தன்மை யடைகின்ற இரு உள்ளங்களை ஒன்ருக்குவது மிக இலகு.

அப்படியொன்ருகின்ற நிலைமையைக் குறித் துப் பாவிக்கப் பெற்று வருகின்ற சொல்லுத் தான் "கலவி"

பாராயணஞ் செய்பவர்களுக்கு மெய்ஞ் ஞானத்தை யுதிக்கச் செய்து வீடுபேற்றை வழங்கவல்ல திருவாசகங்களைப் பாடியருளிய மாணிக்கவாசக சுவாமிகளை இறைவன் அகப் பொருட்டுறைகளையுடைய கோவைப் பிரபந்தத் தைப் பாடும்படி ஏன் பணித்தருளினரென் பதைச் சிந்தித்துணருகின்றவர்களுக்கு அகத் துறையின் இன்றியமையாமையினிது புலனு கும்.

''சொற்பா லமுதிவள் யான்சுவை'' எனவும்
''ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயிரீருருக் கொண்டு'' எனவும்

"காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ, ராகத்து ளோருயிர்'' எனவும் வரு கின்ற திருச்சிற்றம்பலக் கோவையின் செய் யுட் பாகங்களும்,

''பிணைவிழைச் சூழ்தந் துய்ப்ப'' எனவரு கின்ற கந்தபுராணச் செய்யுட் பாகமுஞ் சுட்டு கின்ற அத்துவித நிலையை யாக்கி வைக்கின்ற கையாயுதந்தான் காதல்

நன்குகச் சமையற்கலை தெரிந்த ஒருவர் கறி சமைப்பதற்குரிய ஏதேனுமொரு காய்வகையை யும், அந்தக் காயின் அளவுக்குத் தேவையான அளவு பச்சைமிளகாய், வெங்காயம், தேங்காய், காரத்தூள், உப்பு, புளி யாகியவைகளையும் கொடுத்து ஒருவரைக் கறி சமைக்கும்படி பணித்தால்; அப்படிப் பணிக்கப் பெற்றவர் தம்மிட மொப்புவித்த பச்சைமிளகாய் முத லான பண்டங்களிற் சிறிது குறைத்துபயோ கித்தாலும். அந்தக்கறி முழுவதும் தள்ளிவிடக் கூடியதாயிராது. ஆனல்;

உப்பை மாத்திரங் குறைவாக உபயோகித் தால் அந்தக்கறி யுதவாமலேயிருக்கும்.

இந்த உப்பையே நிகர்த்தது காதல்.

காதலை விலைக்கு வாங்கவோ, கைமாற்றுகப் பெறவோ முடியாது.

பெண்மணிகள் பிள்ளைப் பேற்றுக்குத் தகுதி யாவது முதல். அத்தகுதியற்றுப் போகின்ற நடுக்கட்ட காலத்தில் மாத்திரம் உபயோகப் படக் கூடிய அளவுடைய காதல்தான் சிருட்டி தத்துவத்தாலமைக்கப் பெற்றிருக்கின்றது தம் பதிகளிடம்.

நல்லொழுக்கம், கல்வி, செல்வம், தேகசுகம், பூரணயுள் ஆகிய இவைகளைத் தங்கள் பிள்ளை கள் எய்தி வாழ வேண்டுமென்று அவாவாத தாய், தந்தையர்கள் இப்பூமியிற் கிடையாது;

அந்த அவா அனுகூலமடையில் காதலைத் துஷ்பிரயோகஞ் செய்யாமல், குடும்பவாழ்க்கை நடத்தித் தங்களுக்கும், சமுகத்துக்கும் நன்மை புரிவார்களாக.

வணக்கம்

அன்பும், பணிவுமுள்ள
சி. சின்னையா புலவர்

# மகாவித்துவான் கணேசையரும் அவரது சைவப் பணியும்

பொன்நகராம் நாம் வதியும் யாழ் நகர். அந்நகரின் வடக்கின்கண் எண்மையில் தூரத்தில் புன்னாலைக்கட்டுவன் என்னுமூர் இருக்கின்றது. இயற்கை வளமும் பொருளாதார விருத்தி புரியும் கமத்தொழிலும் அத்தொழில் செழிப்புறுவதற்கு ஏற்ற செம்மண்வளமும், காலநிலையும் உடையதாயும் அருஞ்சுவை நீரும் தமிழ் அறிவும், இந்து மத வளமும் தன்னகத்தே கொண்டதாக புன்னை நகர் திகழ்கின்றது. இந்நகரில் வதியும்காசிப கோத்திரத்தின்கண் உதித்த சைவப் பிராமண குலத்தில் தோன்றிய சின்னையருக்கும் அவர் வாழ்க்கைத் துணைவி கற்பிற் சிறந்த சின்னம்மாளுக்கும் ஈசுர ஆண்டு பங்குனித் திங்கள் பதினெந்தாம் நாள் (1. 4, 1878) புத்திரனாக கணேசையர் அவதரித்தார். கணேசையருக்கு முதல் நால்வரும் புத்திரிகள். இதனால் மனம் வருந்திய ஐயர் புத்திரப் பேறுக்காக தமது குல தெய்வமான விநாயகப் பெருமான்மீது தவம் புரிந்தார். அதன் பேறாக (ஐந்தாவது பிள்ளையாக) அடுத்த பிள்ளையாக கணேசன் உதித்தான், விநாயகன் அருளால் பிறந்தமையால் ஐயர் அவர்கள் மகனுக்கு கணேசன் என்னும் நாமத்தைச் சூட்டினார்கள்.

ஐயர் அவர்கள் தவப் புதல்வன் கணேசனுக்கு வித்தியாரம்பம் (கற்கத் தொடங்கல்) மயிர் கழித்தல். உபநயனம் (பூனூற் சடங்கு) முதலிய பிள்ளைச் சடங்குகளை அவ்வக் காலத்தில் திறம்படச் செய்து முடித்தார், மகாவித்துவான் சி. கணேசையர் அவர்கள் முதன் முதலாக தமது பெரிய தந்தையாராகிய கதிர்காமஐயர் அவர்களிடம் அரிச்சுவடி தொடக்கம் எட்டாம் தரம் வரையும் நன்கு ஐயம் திரிபறக் கல்வி கற்றார், இக்காலத்திலேயே ஐயர் அவர்கள் (கணேசையர்) சமயம், இலக்கணம் இலக்கியம், வரலாறு, கணிதம் முதலிய பாடங்களில் மற்றவர்களைப் பார்க்கிலும் திறமையாக விளங்கினார். இதன் பின் ஐயர் அவர்கள் தமது இலக்கண அறிவைப் பெருக்க விரும்பி மகாவித்துவ சிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளை அவர்களிடம் வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் குரு மறைந்திரு பிச்சுவையர் அவர்களின் வீட்டுத் திண்ணையில் இருந்து கல்வி பயின்றார், இவர் இறந்தபின் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் சில காலம் கல்வி பயின்றார். பின்பு புலவர் அவர்கட்கு ஒரு ஆலோசனைத் துணைவராக இருந்து வந்தார்.

உயர்திரு வேலுப்பிள்ளை அவர்களால் நடத்தப்பட்டு வந்த விவேகானந்தா வித்தியாசாலையில் மறைந்திரு சி. கணேசையர் தமது இருபத்திரண்டாவது வயதில் முதன் முதலாக தமிழ்ப் பேராசிரியராகக் கடமை புரிந்தார், பின்பு ஐயர் அவர்கள் வயாவிளான், வண்ணை புன்னாலைக்கட்டுவன் குரும்பசிட்டி முதலிய ஊர்களில் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றினார்கள். இவர் தமது 32-ம் வயதில் அருந்ததியன்ன அன்னலக்குமியம்மையை தமது வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார்.

மறைந்திரு கணேசையர் அவர்களின் தமிழ்ப் பெருக்கையும் சமய ஆற்றலையும் அறிந்த தமிழ் அறிஞர்கள் ஐயரவர்கட்கு "மகாவித்துவான் என்னும் பட்டம் கொடுத்தார்கள். ஐயர் அவர்களின் 60ம் வயதுப் பூர்த்தியில் (8-10-1938) அன்னாருக்கு ஒரு பொற்கிழி விழா வைத்தார்கள் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தார் 1-12-1952ல் "வித்துவ சிரோன்மணி" என்னும் பட்டத்தை அன்னாருக்கு வழங்கினர்.

மகா வித்துவான் இளமையிலிருந்தே கடவுள் பக்தியுள்ளவராக இருந்தார், விசேட தீட்சை பெற்று ஐயரவர்கள் சிவாகம விதிப்படி சிவ பூசை செய்து வந்தார். ஐயரவர்களின் நெற்றியில் எப்போதும் திரிபுண்டலமாகத் தரிக்கப்பட்ட வெண்ணீறும் அதன் நடுவில் நறுமணம் கமழும் சந்தணப் பொட்டும் ஒளி

பொருந்தியதாகக் காணப்படும். தமது வாழ்க்கைத் துணைவியார் இறந்ததும் மறுமணம் புரியாது விநாயக பக்தியில் ஈடுபட்டிருந்தார். இவர் வருத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் ஓர் ஆச்சிரமத்தை ஏற்படுத்தி அங்கே வாழ்ந்து வந்தார்,

ஈழத்தின் காவியக் கழஞ்சியமாகத் திகழ்ந்த ஐயா அவர்கள் பல சமய நூல்களையும் தமிழ் நூல்களையும் இயற்றி உள்ளார். இவர் தமிழையும் சமயத்தையும் ஒருங்கே வளரச் செய்வதற்கு அரும்பாடுபட்டார். ஈழ நாட்டுப் புலவர் சரிதம் குமாரசாமிப் புலவர் சரிதம். குசேல சரித்திர உரை, இரகுவம்ச உரை, தொல்காப்பிய உரைவிளக்கம் (குறிப்புகள் உட்பட) முதலிய தமிழ் நூல்களை இயற்றியுள்ளார்.

ஐயா அவர்கள் சமயம் வளர பின்வரும் சமய நூல்களை இயற்றியுள்ளார். புன்னாலைக் கட்டுவன் விநாயகர் ஊஞ்சல், வருத்தலைவிளான் விநாயகர் அந்தாதி, வருத்தலைவிளான் மருதடி விநாயகர் இருபா இருபஃது, கலிவெண்பா, கலிநிறைத்துறை ஊஞ்சல் முதலிய நூல்களேயாம்.

மருதடி விநாயகர் இருபா இருபஃதில் வெண்பாவும் அகவல்பாவுமாக இருபது பாடலகள் உண்டு. அகவல் பாக்கள் சங்க காலச் செய்யுட்களைப் போன்ற சொற்செறிவும், பொருளாளமும், ஓசைநயமும், தன்மை நவிற்சி அணியும் அமைந்துள்ளன. இந்நூல் விநாயகர் கயமுகன் என்னும் அசுரனை அழித்தமையும் ஒளவையாருக்கு அருள் புரிந்தமையும், அச்சு முரித்தமையும், விசுவரூபம் கொண்டமை பற்றிய சுருக்கங்களும் விநாயகன் வழிபாடும், அவனை வழிபட்டோர் பெறும் திருவருளையும், தைப்பூசச் சிறப்புக்களும் அடங்கியுள்ளன. இருபா இருபஃது என்னும் அகவற்பா ஒன்று வருமாறு:-

கனிந்துள முருகிநின் கழலடி பாவிப்
பூசனை புரிந்த மாசிலா வுலத்தின்
ஒளவை தனக்கிங் காண்டுபல வாழும்



நாளுஞ் ஞானமு நல்லுடல் வலியும்
புவியா ளரசரும் போற்றும் புலமையும்
யாவு மளித்தனை யிமையவர் வேண்டக்
கயமுகற் செற்று வயமது பெற்றனை
மன்னிய வன்பொரு வழிபட் டேத்தும்
பாண்டுதன் புதல்வ ராண்டிட வையம்
வரமது கொடுத்தனை மற்றுஞ் செயல்கள்
அளந்திட முடியுமோ வடியேன் றனக்கும்
நெஞ்சத் திடத்து நீடுவா சனைகள்
போக்கிநின் னடிக்கா ளாக்கி யாளுவை
பன்னகள் சூளும் பருமரு தடியின்
நன்னிய மதமா முகவொண் மணியே.

வருத்தலைவிளான் மருதடி விநயகர் கலிவெண்பாவில் விநயகப் பெருமானின் திருவுருவத்தை ஒரு சொல்லோவியமாக வைத்துப் பாடியுள்ளார். விநாயகப் பெருமானுக்குப் பூசைசெய்யக் கிடைப்பது பெரும் பாக்கியம் என்றும், அப்படிப் பூசை செய்வதால் வரும் பயனையும் இக் கலி வெண்பாவில் கூறியுள்ளார். விநாயகர் ஊஞ்சலில் விநாயகருடைய புகழையே பாடியுள்ளார். அடுத்து விநாயகர் அந்தாதி பாடியுள்ளார். இந்நூலில் முகவுரையில் ஐயரவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார் ''அப்பெருமான் தன்னை வழிபட்டு வருபவர்களுக்குச் செய்யும் திருவருளையானும் சிறிதளவு அனுபவித்துள்ளேன். ஆதலின் அக்கடவுளுடைய திருவருளைப் பூரணமாகப் பெற்று இனிப் பிறந்திருந்து இளையாதிருக்க வேண்டுமென்ற சிறந்த கருத்தை உட்கொண்டே இவ்வந்தாதியை அக்கடவுளின் மேற் பாடியுள்ளேன்'' ''கறியாமை நீக்குலும் கல்வி……… ''என்ற தொடக்குடைய அந்தாதிச் செய்யுளால் விநாயகன் அருள் முழுவதையும் பெற்று பிறப்பிறப்பு இல்லாமலிருக்க வேண்டுமென்று மறைந்ததிரு கணேசையர் அவர்கள் கூறியுள்ளார்.

8. 10. 1938ல் அன்னாரின் 60 ஆண்டுப் பூர்த்தி விழாவில் அளிக்கப்பட்ட 2000 பொற்காசுகளையும் விநாயகனுக்குப் பொன் முடியும் பீடமும் வாங்கிச் சாத்தினர். விநாயக தொண்டனான ஐயர் அவர்கள் புன்னை

ஆயாக்கடவைச்சித்தி விநாயகப் பெருமான் ஆலயத் திருப்பணி செய்து கும்பாபிஷேகமும் செய்தார்.

வருத்தலை விளான் மருதடி விநாயகர் ஆலயத்தின் முதலாம் வீதியின் வடக்கருகில் பெருமானுக்குத் தினமும் அபிஷேகம் செய்வதற்காகத் திருமஞ்சனக் கிணறு ஒன்றை வெட்டுவித்தார். அயலிலுள்ள கிணறுகளிலும் பார்க்க மிகவும் ஆழமாக வெட்டியும் நீர் வரவில்லை. நீர்வராததையிட்டு ஐயரவர்கள் மனத்துயரத்துடன் தனது ஆச்சிரமத்தில் துயில் கொண்டார். அன்றிரவு விநாயகப் பெருமான் சொற்பனத்திலே தோன்றி 'நாளையதினம் நீ ஒரு பாட்டுப் பாடிவிட்டு உனது வேலையாட்களைக் கிணற்றுள் விட்டு ஆயுதத்தால் கொத்து உடனே நீர் வந்து விடும்'' என்று ஐயரவர்களுக்குக் கூறி மறைந்தார். மறுநாட் காலை எழுந்து திருமஞ்சனக் கிணற்றடியில் நின்று.

''ஆட்டாதே யெங்க ளரனார் திருமகனே
கோட்டாலே குத்தியிந்தக் கூபமதை
-நாட்டிடுவாய்
மாமருதி லீசா மதமா முகத்தோனே
காமுறுவேற் குள்ளங் கனிந்து''

என்ற பாடலைப் பாடி முடித்தார். உடனே தமது கிணற்று வேலையாள் ஒருவனைக் கிணற்றுள் இறக்கினார். வேலையாள் தனது கொந்தாலியாற் கிணற்று அடியில் ஒரு கொத்துக் கொத்தினார். உடனே கிணற்று நீர் பெருகியது. இதிலிருந்து மகாவித்துவான் பிரம்ம ஸ்ரீ. சி. கணேசையர் அவர்களின் விநாயக பக்தியையும், அடியார்க்கெளியானான விநாயகனின் திருவருட் டிறத்தையும் நன்கு அறியலாம்.

தமது ஆச்சிரமத்தில் வாழ்ந்துவரப் பக்தியும் கூடிக்கொண்டே போயின. அகமும் புறமும் கடவுள் பக்தியாக இருந்தார். இந்நூலில் விளம்பி ஆண்டு ஐப்பசித் திங்கள் 23ம் நாள் காலை 6மணி 30 நிமிடமளவில் (8-11-1958) இவ்வுலகை விட்டு நீங்கி இறைவன் பாதம் சேர்ந்தார்.

விநாயகன் அருளால் பிறந்து ஒழுக்கமும் கல்வியும், சமயமும் ஒருங்கே சிறந்து விளங்கிய பெருமான்மாட்டு பேரன்பு வைத்த கணேசன் நற்குண நற்செயல்களைப் பின் பற்றுவோமாக.

தமிழ் வாழ்க! சைவம் வாழ்க!!

க. திருச்செல்வவிநாயகமூர்த்தி
(வர்த்தகம் முதலாமாண்டு)

---

*பிரார்த்தனை என்பது கடவுளிடம் எதையாவது வேண்டுகிற விஷயமல்ல; ஆத்மாவின் ஆவல்தான் பிரார்த்தனை ஆகும்.*

— காந்தியடிகள்

உ

# சமய வாழ்வின் குறிக்கோள்

[பண்டித வித்துவான், சைவப்புலவர், பாவலர்
இ. திருநாவுக்கரசு]

மனித்தப் பிறவி வேண்டும் என்கிறார் அப்பர். 'மற்றைய பிறப்புக்கள் வேண்டாம்' என்பது அதன் அருத்தாபத்தி. அருத்தாபத்தி என்பது அருத்தம் + ஆபத்தி எனப்பிரிக்கப்படும். அருத்தம் பொருள்; ஆபத்தி - அதனிற்றோன்றுவது. அதாவது ஒரு வாக்கியத்தில் உடன் பாட்டுப் பொருள் ஒன்றும் மறுதலைப்பொருள் இன்னொன்றுமாக இருபொருள் தோன்றுமிடத்துப் பின்னையது அருத்தாபத்தி அளவை நியாயம் எனப்படும்.

காரைக்கால் அம்மையார் 'பிறவாமை வேண்டும்' என்று இறைவனை வேண்ட அப்பர் சுவாமிகள் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்று குறிப்பிடுவதை ஒப்பிட்டு நோக்கின் ஒன்றுக்கொன்று மாறுபாடாகத் தோன்றும். அதனால் சைவசமயக் கோட்பாட்டில் பிறழ்வு அதிகமெனக் குற்றந்தெரிவார் முடிவுக்கு வந்துவிடுவார். உற்று நோக்கில் பிறழ்வின்மை புலனாகும். மனிதப்பிறவி எதற்காக வேண்டும் என்கின்றாரென்று நோக்கினால் இறைவனது நடிப்புக்கேற்க வளையும் புருவங்களும் கொவ்வைக்கனிபோன்ற சிவந்த வாயினின்று விகசிக்கும் குமிழ்த்த புன் முறுவலும் கங்கையும் மதியும் சார்வதால் குளிர்ந்த சடாபாரமும் செம்பவள மேனியில் உத்தூளனமாகப் பூசப்பெற்ற பாலொழுக்கனைய திருநீற்றழகும், பிறவிப்பிணிக்கு மருந்தாகி இனிக்கின்ற கருணைபாலிக்கின்ற குஞ்சித பாதமாகிய தூக்கிய திருவடியும் விழித்திருக்கின்ற கண்ணாகிய ஆன்மாவிற்குக் காணக்கூடியதோர் பாக்கியமும் இம் மானிடச்சட்டை தாங்கி உலகில் வாழக் கிடைத்த நாள் அஸ்தமிக்கு முன் கிடைக்கத்தவம் உண்டானால் மட்டும் மனிதப்பிறவி வேண்டும் என்பது அப்பர் சுவாமிகள் கருத்து.

'குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண் நீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''

இது அப்பர் தேவாரம்

அப்பர் சுவாமிகளின் கருத்தை அநுவதிப்பதுபோலக் காரைக்கால் அம்மையார் "மீண்டும் பிறப்பு எனக்குப் பழைய கர்மங்களின் தொடர்ச்சியால் வரநேருமானால் இறைவனே! யான் உன்னை என்றும் மறவாத மானிடப் பிறவியினிடத்து உய்த்து அருள் செய்ய வேண்டும்'' என்கிறார். அவ்வாறு ஆண்டவனை என்றும் மறவாதிருப்பதற்கு மூலமாக அமைந்தது அன்பு - அதாவது பேரன்பு; அதனைக் காரைக்கால் அம்மையார் "இறவாத இன்ப அன்பு'' என்கிறார் - அந்தப் பேரன்புதலைப்பட்டால் பிறவா யாக்கை நிச்சயம் - பழவினையால் பிறப்பு உண்டேல் அதனை விலக்க ஏது இல்லையேல் "இறைவா நின்னை மறக்காதிருக்க அறிவறிந்த மனிதப்பிறவி வேண்டும்'' அப்பிறவிதானும் வினை உடலோடு ஏக - இடையே தோன்றிய சஞ்சித ஆகாமிய வினைகள் நினது திருவருளினால் தகிக்கப்பட இக் காயமழிய அறவடிவான கடவுளே! நினது அநவரததாண்டவமாகிய - ஊர்த்துவ தாண்டவத்தினை நாயடியேன் நின் அடியின் கீழிருந்து தரிசித்து அதனால் வரும் பேரின்ப ஊற்றினை நுகர்ந்து - நுகர்ந்து எனைநானென்பதுணராது - பகல் இரவாவதுமறியாது நிரதிசய இன்பத்திலிருக்க அருள் தருக என்கின்றார்.

'இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்
டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ்
இருக்க வென்றார்'

சேக்கிழார் பெரியபுராணம்

இவ்விரண்டு பாடல்களையும் ஒப்பு நோக்கின் சைவசமய வாழ்வின் குறிக்கோள் இனிது புலனாகின்றது. குறிக்கோளோடு கூடிய மனித வாழ்வு தேவர் வாழ்வினும் மேலானது - தேவர்களே மானிடராகப் பிறக்க ஆசைப்படுகின்றார்கள். ஏனெனில் 'இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு' என்கின்றார் மணிவாசகர். குறிக்கோளில்லாத சூத்திரப் பாவை போல இறைவன் தாளை வணங்காத்தலை பயனற்றது.

கோளில் பொறியிற் குணமிலவே எண்
குணத்தான்
தாளை வணங்காத் தலை.

என்பது வள்ளுவர் வாக்கு.

ஆகவே மக்களாகிய நாம் குறிக்கோளோடு வாழவேண்டும்.

'அவன் தன் குறியே குறிக்கொண்டு
போமாறமை மின் பொய் நீக்கிப் புயங்கன்
ஆழ்வான் பொன்னடிக்கே'

என வழிகாட்டுகின்றார், மேலும் மணிவாசகர்

'மானிடப் பிறவிதானும் வகுத்தது மன
வாக்காயம்
ஆனிடத் தைஞ்சாடும் அரன்பணிக்
காகவன்றே
வானிடத் தவரும் மண்மேல் அரன்றனை
அர்ச்சிப்பர்மற்
றானெடுத் துழலும் ஊமர் ஒன்றையும்
உணரா ரந்தோ''

என்னும் பாடல் இதனை மேலும் வலியுறுத்துகின்றது. உண்டுறங்கி வாழும் விலங்கனைய வாழ்வு கொண்ட மக்களை "ஊனெடுத்து உழலும் ஊமர் ஊமைகள் என்கிறார் - ஊமையென்பது வாய்விடாச் சாதி என்பது பொருள்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கல்லாரோடு ஏனையவர்

என்பது வள்ளுவர். இலங்கு நூல் கல்லாதவர் விலங்குக்கு நிகராவார்கள், ஏனைய கற்றோர்- குறிக்கோளுடையவர்கள் மக்கள் அனையர் என்பது இதன் பொருள்-

கற்றவர் பலர் தாம் எல்லாம் அறிந்தவரெனத் தருக்கித் தலையால் நடப்பர் - இதனை மணிவாசகர் நோக்கி இரங்கித்,

தனித்துணை நீநிற்க யான் தருக்கித்
தலையால் நடந்த
வினைத்துணையேனை விடுதிகண்டாய் ''

என நீத்தல் விண்ணப்பத்தில் விண்ணப்பம் செய்கிறார். அப்பர் சுவாமிகளும் இரண்டு வினாக்களுக்கு விடைசொல்ல உலகில் யாருக்குமே தெரியாதென்கிறார்.

அவ்விரண்டு வினாக்களில் ஒன்று "எமக்கு எப்போது சாவுவரும்? என்பது, மற்றது 'எமக்குப் பூமியில் வாழக்கிடைத்திருக்கும் நாள் எத்தனை' என்பது இவ்விரு வினாக்களுக்கும் விடைசொல்ல யாராலும் முடியாது.

'' நீ நாளும் நன்னெஞ்சே நினை கண்டாய்
யாரறிவார்
சாநாளும் வாழ் நாளும் சாய்க்காட்டெம் பெரு
மாற்கே,
பூ நாளும் தலை சுமப்பப் புனைநாமம் செவிகேட்ப
நா நாளும் நவின் றேத்தப் பெறலாமே நல்
வினையே''

—என்பது அப்பர் தேவாரம்

வாழக் கிடைத்த நாளும், சாவு வரக் குறித்திருக்கும் நாளும் யாமெவரேனும் அறிய வல்லோமல்லோம். ஆகவே நல்வினை செய்யுங்கள் - இறைவன் தன்னை வாழ்த்தவாயும் - நினைக்க நல்ல நெஞ்சையும் - வணங்கத் தலையையும் தந்திருக்கின்றான் -

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் சூடித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன் நெடுங் காலமே,

— அப்பர் தேவாரம்

இவ்வாறு மானிடப்பிறவி தந்து - வாய் தந்து மனந்து வணங்கத்தலை தந்து எம்மை வாழ்வித்த இறைவனை மறந்து வீணாக இத்துணை நாளும் மறந்து இருந்தேனே; என இரங்குகிறார்- இறைவன் கனியினும் நல்லவன். கற்கண்டிலும் நல்லவன்- பருவ நலம் ததும்பும் மங்கையர் இன்பத்திலும் நல்லவன்- முடிசூடி அரசாளும் செல்வத்தினும் நல்லவன் என்கிறார் அப்பர்-

கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனி மலர்க் குழற் பாவை நல்லாரினும்
தனி முடிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே -

— அப்பர் தேவாரம்-

ஆகவே மனிதர்களே! உங்களுக்கு மாம்பழத்திலே தான் ஆசை- மாம்பழத்திலும் இனிய கனி யொன்றுண்டு அக்கனியைத் தருகிறேன்- அதனை உண்ண உங்களுக்கு வல்லமை உண்டா? என்கிறார்- அது என்ன கனியென்று கேட்க நானுந்தான் ஆசைப்படுகிறேன். திராட்சை, அப்பிள்- தோடை, பலாப்பழம் அல்ல- இறைவனென்னும் கனி அது உண்டவர்க்கு மிக மிக இனியது நல்லது.

"மனிதர்காள் இங்கு வம் ஒன்று சொல்லு கேன்
கனிதந் தாற்கனி உண்ணவும் வல்லிரே
இறைவனென்னும் ஒரு பெருந் தீங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே-

— அப்பர் தேவாரம்-

இவர் நெடுக அப்பர் - அப்பர் - என்கிறோம் அவர் யார்? அவர் தான் திருநாவுக்கரசர் - அவர் நானற்ற ஞானசம்பந்தருக்கு அப்பரான திருநாவுக்கரசு நாயனர்- என்பதறிஞுறிவார்.

பாலனய்க் கழிந்த நாளும்-
பனிமலர்க் குழலார் தங்கள்
மேலனய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்பு வந்து
கோலனய்க் கழிந்த நாளும்
குறிக் கோளிலாது கெட்டேன்-
சேலுலாம் பழன மூதூர்த்
திருக் கொண்டீச் சரத்துள் ளானே-

— அப்பர் தேவாரம்-

மக்காள்! குறிக்கோளுடன் படியுங்கள் படித்துப் பின்னர் வாழுங்கள்-

---

மனிதனின் மனத்துக்குள்ளே இருட்டுக்கும் வெளிச்சத்துக்கும் இடையில் ஒரு துவந்த யுத்தம் நடந்துகொண்டே வருகிறது; வழிபாடு என்ற உயர்ந்த பாதுகாப்பை நம்பாதவன் அந்தப் போராட்டத்தில் இருட்டுக்கு அடிமையாகி விடுகின்றுன்.

— காந்தியடிகள்

# தேவார மூவரின் திவ்ய தமிழமுதம்

சி. கிருஷ்ணபிள்ளை, கணிதம் 1-ம் வருடம்

பன்னெடுங் காலமாகப் பாராண்ட செந்தமிழ் பல்திசையும் தன் செல்வாக்கைப் பரப்பிய அக்காலத்தில் சைவ சமயப் பனுவல்களை அறிந்த மேனுட்டார் தமிழ்மொழியைப் பக்தியின் மொழி எனக் கூறினர். அந்தக் காலத்திலேயே மொழிகளின் தன்மை அறிந்து, திறன் தெரிந்து, சிறப்புணர்ந்து, சீராக ஆராய்ந்து ஆங்கிலத்தை வர்த்தகத்தின் மொழி எனவும், லத்தீனைச் சட்டத்தின் மொழி எனவும் செப்பிய அறிஞர்கள் தமிழ் மொழியைப் பக்திக்குரிய மொழி என உரைத்தனர். உள்ளத்தைக் கவர்கின்ற ஆற்றல் மொழிகள் பலவற்றிற்கும் உண்டெனினும், உள்ளத்தை நெகிழவைக்கும் திறன், கல்லினுங் கடிய உள்ளத்தைக் கனிவித்து எம்பெருமான் ஈசனுக்கு இனியவனுக்குகின்ற இயல்பு தமிழ்மொழிக்கேயுண்டு என்பது, 'பக்தியின்மொழி' என்று நந்தமிழ் மொழிக்கு நாமங்கொடுத்தவர்களின் கருத்தாகும். இங்ஙனம் பக்தியின் மொழி எனப் பாராட்டப்படுவதற்கு ஏற்ற முறையிலே தமிழ் மொழிமூலம் பக்திநெறி வளர்த்த அடியார்கள் பலர். அன்னவருள் திருவாசகம் தந்த மணிவாசகரை அடுத்துக் கூறத்தக்க பெருமை வாய்ந்தவர்கள் அப்பர், சுந்தரர், அருள்ஞான சம்பந்தரென்ற மூவருமாவர்.

தமிழை அமிழ்தமென்றும் சொல்லலாம்; இதனாலன்றோ தமிழகத்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

"தமிழுக்கும் அமிழ்தென்றுபேர் - அந்தத்
தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்குநேர்"

என்று உணர்ச்சியுறப் பாடினூர். இப்படிப்பட்ட களிப்பூட்டும் தமிழமுதம் தந்த தமிழ்மக்கள் பலபேருள்ளும் மூவர் தமிழ் என்று சொல்லத்தக்க பக்தித் தமிழமுதம் தந்தவர்கள் இம்மூவருமேயாவர். இத்தமிழமுதம் உண்ண உண்ணத் தெவிட்டாததாய், உள்ளத்தை உருக்குவதாய், உலகை உருவாக்கிய முழுமுதற் பொருளை அடைவிப்பதாய் விளங்குகின்றது.

தமிழ்நாடு ஒருகாலத்திலே, குறிப்பாகச் சங்ககாலத்திலே சமயப் பூசலின்றி இருந்தது. ஆனால் அதை அடுத்த சங்கமருவிய காலத்திலே தமிழ் நாட்டிலே சமணசமயம் தலையெடுத்தது. அது சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சைவசமயத்தையும், விஷ்ணுவே முதற்றெய்வமெனக் கருதும் வைஷ்ணவ சமயத்தையும் விழுங்கிவிடக் கூடிய செல்வாக்குப் பெற்றிருந்தது. பாராண்ட மன்னரும் அம்மதத்தைத் தழுவலாயினர். பைந்தமிழ்நாடு காத்த பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனும் சமணத்தைச் சார்ந்தான். 'அரசனெவ்வழி குடிகளுமவ்வழி' என்ற ஆன்றோர் மூதுரைக்கொப்ப மக்களும் அம்மதத்தில் மயங்கலாயினர். தலைமுறை தலைமுறையாகச் சிவனை வழிபட்டு வந்த அப்பர்கூட அதனைத் தழுவினுரென்றுல் அச்சமயம் பெற்றிருந்த செல்வாக்கின் நிலைபற்றி இன்னும் விளக்கவேண்டிய அவசியமில்லை.

இத்தனைபேர் மாறியிருந்தும் நின்றசீர் நெடுமாறனின் மாண்புடை மனைவியாம் மங்கையர்க்கரசியார், அறிவுடை அமைச்சர் குலச்சிறையார், அப்பரின் தமக்கையார் திலகவதியார் முதலிய சிவனடி மறவாச் சிந்தையர் செய்வதறியாது திகைத்தனர். எம்பெருமானை எண்ணி எண்ணி, இரங்கியிரங்கி, கண்ணீர் சொரிந்து மக்களைச் சமணப்படுகுழியினின்று விடுவிக்குமாறு வேண்டினர். எம்பெருமானும் உளமிரங்கினூர். உலகெலாம் கண்டிராத உயர்ந்த ஒப்பற்ற கோலமதில் உறைந்திருக்கும் ஆற்றல்களை அடியவர்கள் மூலம் காட்ட எண்ணினூர். அதன்விளைவாகவே அறுபத்தினுன்கு நாயன்மாரும் அவனியிலே சமயத் தொண்டாற்றினர். சைவத்தின் நிலைதளர்ந்த அந்த நேரத்திலேதான், அதன் அத்தி

பாரமே ஆட்டம் கண்ட அந்தச் சமயத்திலே தான் இத்தேவாரமூவரும் தோன்றினர்.

இவர்கள், சமணம் மக்களைக் கவர்ந்த காரணம் எதுவெனச் சிந்தித்தனர். அந்தக் காலத்திலே தமிழ் நாட்டிலே அடிக்கடி நிகழ்ந்த போர்களால் கணவனை இழந்த கைம்பெண் களும், தனயரை இழந்த தாய்தந்தையரும், பற்பல இழப்பினால் மனம் நொந்தோராகிய இவர்களெல்லாம் வாழ்வின் நிலையாமையை உணரக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. நிலையாமைக்கு நிரம்ப விளக்கந்தரும் சமண சமயத்தின் பிரச்சாரங்கள் அவர்களின் கவனத்தை ஈர்த்தன. ஆனால் சமணசமயத்தில் குறை யொன்று இருக்கத்தான் செய்தது. சமணம் அறிவுநெறி. அது அன்புநெறியைப் பின் பற்றுவதில்லை. மனைவி, மக்கள், உற்றாரோடு வாழும் மாந்தர் அன்புநெறியைப் புறக்கணிக்க முடியாதவர்கள் உலகியல் வாழ்விற்கு முதற் கண் வேண்டப்படுவது அன்பு. அது ஆண்டவனிடம் எம்மை இழுத்துச் செல்லக்கூடியது. இதனைப் போற்றாத சமணத்தின் பலவீனத்தை உணர்ந்தனர் சைவநாயன்மார். எனவேதான் அவர்கள் தமிழால் தமிழிசையால் அன்பு நெறியில் மக்களுள்ளத்தை மாற்ற எண்ணினர். இதற்காக இறைவனை நினைந்து, மனம் கசிந்து உருகினார்கள். இவர்களின் உருக்கத்தினைக் கண்ட மக்கள் பக்திச் சுவையின் பான்மை தெரிந்தனர். ஆற்றல் மிக்க அவர்களின் அற்புதச் செயல்களும், தத்துவக் கருத்துக்களும், அவர்கள் சிந்தையில் உறைந்திருந்த அறியாமை இருளைப் போக்கிற்று. இங்ஙனம் மக்கள் மனந்திருந்த, உண்மை யுணரக் காரணமாயிருந்தது இவர்கள் பாடிய தேவாரமெனும் திவ்ய தமிழ்மறையாகும்.

'இசைக்குருகார் எவருமிலர்' என்பது எல்லோரும் அறிந்த விடயம். ஆலயந்தோறும் சென்ற அம்மூவரும் கல்லுங் கசிந்துருகும் வகையிலே செந்தமிழ் இசையிலே சிவபெருமான் புகழ் பாடினர். மக்களுள்ளத்தைக் கவராத சமணம், கண்ணீரை வருவிக்காத சமணம் போலன்றி அவர்களுள்ளத்தை ஊடுருவியது. மனதைக் கரையச் செய்தது. கண்ணீரைச் சொரிவித்தது. இதனால் சிவவழிபாடும், மற்றும் சிறப்புமிக்க வழிபாடுகளும் பெருகலாயின. சிவபெருமானின் அருட்டிறத்தையெல்லாம் அடியார்கள் கண்ணாரக் கண்டார்கள்.

இம்மூவருள்ளும் ஆண்டில் இளையவராய், பக்தித் தரத்திலே பக்குவம் மிக்கவரென அப்பரால் போற்றப்பெற்றவராய் விளங்குபவர் சீர்காழியிலுதித்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாராவர். இவர் பதினாறுவயது வரை வாழ்ந்த இளைஞர், குழந்தையுள்ளம் கொண்டவர். இளமைப் பருவத்தினராய் இருந்தவராதலால் அவர் பாடல்களிலே நிலையாமை பற்றிய உணர்வுகளையும், கவலைகளையும் காணல் அரிதேயாகும். துடிப்பும், களிப்பும், இனிமையும், அழகும் பொருந்தியன அவர் திருப்பதிகங்கள். மூன்று வயதினராய் இருக்கும்போதே தோணியப்பரை நினைந்து பாடிய, "தோடுடைய செவியன்" என்ற தேவாரமும், ஈசன் நாமங் கேட்க ஆவல் கொண்டு பசுங்கிளியைப் பார்த்துப் பாடிய, "சிறையாரும் மடக் கிளியே" என்ற திருப்பாடலும் இவற்றிற்குச் சான்றாக விளங்குகின்றன.

பச்சிளம் பாலனெனப் பலராலும் விளிக்கப்பெற்ற சம்பந்தரது பாடல்கள் செய்த அற்புதங்கள் பல. சமணரோடு பொருதிய வாதினிலே புனலிலே திருவேடு எதிரேறிச் சென்றது; புத்தரோடு வாதிட்ட சமயத்திலே புத்தர்களின் தலைகளில் இடிவிழச் செய்தது; திருமறைக் காட்டிலே அப்பரால் திறக்கப் பெற்ற திருக்கதவினை அடைக்கச் செய்தது; ஆண்பனைகளைப் பெண்பனைகளாகமாறச் செய்தது; என்பைப் பெண்ணுருவாக்கியது முதலான எத்தனையோ அற்புதங்களை தேவாரத்திருமறையால் செய்து எம்பெருமான் இறைவனின் வல்லமையை மக்கட் குணர்த்தினர்.

சம்பந்தருக்கடுத்ததாய் சிறிது கூடிய வயதுவரை வாழ்ந்தவர் சுந்தரமூர்த்தி நாயனர். சேரமான்றோழர், வன்றொண்டர் என்றெல்லாம் பெயர் பெற்ற இவர் மூவாறு ஆண்டுகள்

வாழ்ந்தவர். சம்பந்தரிலும் வயதிற்கு மூத்தவரெனிலும் காலத்தால் மிகவும் பிற்பட்டவர். சிவபக்தியோடு சிவனடியார் பக்தியும் சைவத்தை வளர்க்கும் நெறியாகும் என்பது இவர் வாழ்க்கை காட்டும் உண்மையாகும். இறைவனோடு தோழமைபூண்டு நண்பரென்ற முறையிலே ஆண்டவனோடு பழகினர். இவர் தன்னை இறைவன் தடுத்தாட்கொண்டபோது பாடிய, ''பித்தா பிறைசூடி'' என்ற பாடலே இவரது நட்புறவுக்கு ஒரு திறவுகோலாக அமைகிறது. இவர் உலகியலில் ஈடுபட்டாரெனினும் சிவனடி மறவாச் சிந்தையோடு வாழ்ந்தவர். சிவனடியார்கள் போன்று செம்மனமுடையவர். இவர் திருத்தொண்டத்தொகை என்னும் திருத்தமிழ் நூலைச் செய்தமையாலன்றே. இன்று நாம் சேக்கிழார் சுவாமிகள் தந்த திருத்தொண்டர் புராணத் தேனமுதம் காண்கின்றோம்.

சுந்தரர் தேவாரமும் பல அற்புதங்களைச் செய்தது. முதலையுண்ட பாலகனை மீளச் செய்தது. பரமசிவனைப் பரவையாரிடம் தூது செல்ல வைத்தது. ஆற்றை வழிவிடச் செய்தது. செங்கற்களைப் பொன்கட்டிகளாக மாற்றியது. இப்படி எத்தனையோ அதிசயங்களை மக்களுக்கு கண்கூடாகக் காட்டியது.

தேவாரம் பாடியமூவருள்ளும் வயதில் முதிர்ந்தவராக, அனுபவம் மிகுந்தவராக, நிலையாமையை நிரம்ப உணர்ந்தவராக, சமணசமயத்தையும் நன்கு தெரிந்தவராக விளங்குபவர் அப்பரென அழைக்கப்பெறும் திருநாவுக்கரசு சுவாமிகள். இவரது பாடல்கள் கேட்போருள்ளத்தைக் கொள்ளை கொள்ளக்கூடியன. இதனாலன்றே இவரது ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' என்றமுதலையுடைய முதற்பாடலைக் கேட்டதுமே இறைவன் மகிழ்வுற்று அசரீரி வாக்காக,

*''பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளர்*
*பதிகத்தொடை பாடிய பான்மையினால்*
*நாவுக் கரசனென்றுல கேழினு நின்*
*நாமம் நயப்புற மன்னுக''*

என்று கூறினரென சேக்கிழார் சுவாமிகள் தம் நூலின் வாயிலாகத் தெரிவிக்கின்றார்.

இறைவனுடைய நாமங்களை இனிமை சொட்ட அடுக்கித் தாண்டகம் பாடுவதில் வல்லவர் நாவுக்கரசர். அதனாற்றான் தாண்டக வேந்தன் எனப் போற்றப்படுகின்றார். இவர் ஆண்டவனுக்கு அடிமையுறவில் நின்றொழுகினர். இவரது பாடல்களும் பல அற்புதங்களைச் செய்தன. சமண அரசனூட்டிய நஞ்சு அமுதாகிற்று. தழல் தடாகமாகியது; கொல்ல வந்த யானை குனிந்து வணங்கியது. கருங்கல்லைத் தெப்பமாக மிதக்கச் செய்தது. இன்னும் எத்தனையோ.

இங்ஙனம் தேவாரமூவர் எனத் திருநாமம் பெறும் இம்மூவரும் பாடிய எத்தனையோ திருப்பாடல்களில் செல்லரித்தவைபோக இன்று எம்மிடையே எஞ்சிநிற்பவை சில. இவற்றை இராச இராச சோழன் கட்டளைக்கிணங்க நம்பியாண்டார் நம்பி திருமுறைகளுள் வகுத்துத் தந்திருக்கின்றார். இத் தேவாரத் திருப்பதிகங்களை முறையாக ஓதிப் பயன்பெற்ற பாக்கியசாலிகள் பலர். சம்பந்தரின் திருநீற்றுப்பதிகம் பாடி நோய் நீங்கி வாழ்ந்தவர் பலரென்று நூல்கள் நவில்கின்றன. அன்றொருநாள் எட்டுக் கோள்களும் ஒருங்குகூடி ஒருவீட்டில் புகுந்தபோதுகூட, மக்கள் சம்பந்தரின் கோளறுபதிகம் பாடி ஆண்டவனை வணங்கிப் பயன்பெற்றதை நாமறிவோம். இத்தகைய உயர்வான - சிறப்பான - ஆற்றல் மிக்க - மகிமை நிறைந்த மூவர் தேவாரங்களையும் நாம் முறையாக ஓதி, சைவச்சீலர்களாக வாழ்ந்து, சமயத்துறையின்கண் சீராக ஒழுகி இறையருள் பெற்று இன்புறுவோமாக.

# அருணகிரிநாதரின் வாழ்க்கை யற்புதங்கள்

வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள்

ஆறுமுகப் பெருமானின் அருள் பெற்ற அருந்தவச் செல்வருள் தலை சிறந்தவர் அருணகிரிநாதர். தமிழ் மொழியில் முன்னொருபோது மில்லாத பல புதிய சந்தப்பாக்களை அமைத்துப் பாடிய பெருமை அருணகிரி நாதருக்குரிய தனிச்சிறப்பாகும். அவரது பதினாயிரக் கணக்கான பாடல்கள் முருகப்பெருமானின் பொருள் சேர் புகழை அள்ளிப்பருக விரும்பும் அடியார்களுக்கு அமிழ்தாகச் சுரந்தூறி உள்ளத்தில் அழியாத இன்பத்தை நிறைவிக்கும். அத்தகைய பெரியாரின் வாழ்க்கையற்புதங்களை அறிய வேண்டியது சைவநன்மக்களின் தலையாய கடனாகும்.

பதினைந்தாம் நூற்றாண்டில் பிரபுடதேவமன்னர் ஆட்சிக் காலத்தில் நினைத்தாலே முத்தியருளும் தலமாக விளங்கிய திருவண்ணாமலையில் உருத்திர கணிகையர் மரபிலே அருணகிரியார் அவதரித்தார். தாயார் பெயர் முத்தம்மையார். நாவுக்கரசரை நல் வழிப்படுத்தத் திலகவதியார் அக்காவாக அமைந்தது போல அருணகிரியாருக்கும் ஆதி என்ற அக்கா இருந்தார். முத்தம்மையார் அருணகிரியார் மேல் அளவுகடந்த அன்புடையவராய், அவருக்கு சிறுவயதிலேயே தேவாரம், திருமந்திரம், திருமுருகாற்றுப்படை, திருக்குறள் ஆகிய நூல்களைக் கற்றுக் கொடுத்தார். இளமைப்பருவத்திலே அருணகிரியாரின் தாயார் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தறுவாயில் மகளை அருகில் அழைத்து "ஆதி! அருணகிரிக்கு இனி நீதான் தாய் தந்தை. அவனுக்கு முருகன் அருள்புரிவான். அவனை நீ மனிதனுக்கு" என்று கூறியவாறே குமரனடி சேர்ந்தாள்.

ஆதி அக்காவின் அரவணைப்பில் வளர்ந்த அருணகிரியார் வாலிபப்பராயத்தை அடைந்தார். வாழ்க்கையில் தம்மனம்போன போக்கெல்லாம் நடக்கத்தலைப்பட்டார். தகாதவர் நட்பும், தரங்கெட்ட சேர்க்கையும் உடையவராய அருணகிரியார், கணிகையர் இல்லமே கதி எனக்கிடந்தார். அதனால் அவர் உடல் இளைத்து, உணர்வு குன்றியநேரத்திலும் ஊரூராக அலைந்து திரிந்தார். இவற்றையெல்லாம் கண்ட தமக்கையாரான ஆதி அம்மையார் ஆறாத் துயருற்றாள். தனது தம்பியின் தரங்கெட்ட செயலைக்கண்டு தணலில் மெழுகென உள்ளமுருகினாள். முருகனை நினைத்து, நினைத்து அல்லும் பகலும் வழிபட்டாள். சேற்றில் சிக்கிய அருணகிரிநாதரின் திருமேனி அழுகி நாற்றமெடுக்க தமக்கையாரே தஞ்சமென மீண்டு வந்தார். கண்ணீர் பெருக தன் அன்புக்கரங்களால் தமக்கையார் தம்பியை வரவேற்றுப் படுக்கையில் கிடத்தி பத்தியம் கொடுத்து பாதுகாத்து வந்தார். "அருணகிரி உன்னை இந்த நிலையிலாடா நான் காணவேண்டும். நமது அம்மா கண்ட கனவென்ன? நீயிருக்கும் நிலையென்ன? தாசிகள் நேசம் தகாதென்று இப்பொழுதாவது உணருகிறாயா தம்பி" என்று அவரை அணைத்துக் கொண்டு கண்ணீர் சிந்தினாள் ஆதியக்கா. அருண

கிரியாரின் நோய் மேன்மேலும் வளர்ந்தது. அருணகிரியாரின் உடலெல்லாம் அழுகி நாற்றம் வெகுதூரம் வீசிற்று. யாரும் அவரருகில் செல்லவே அஞ்சினர். அக்காவோ அருவருப்படையாமல் தன் அருமைத்தம்பியை அல்லும் பகலும் அன்புடன் கவனித்து வந்தார். இந்த நிலையிலும் அருணகிரியாரின் உள்ளம் பழையநிலையிலேயே இருப்பதைக்கண்ட அம்மையார், "தம்பி உனக்கு நம்குலதெய்வமாகிய முருகப்பெருமானின் அருள் கிடைக்க வேண்டும். இல்லையேல் நீ அழிந்து போகவேண்டும்" என்று ஆவேசமாகப்பேசினுள். வடிவேலனின் வரம் கிடைத்தால் நின்வாழ்வு மலரும் என்ருள்.

தமக்கையாரான ஆதி தம்பிக்கு வேண்டிய எவ்வளவோ நல்லுபதேசங்களைச் செய்தும் அருணகிரியார் தம்வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தார். முருகன் இனிமேல் நமக்கு அருள் புரியமாட்டான். இந்த ஈனவாழ்வு வாழ்ந்து அக்காளுக்கு அல்லல் கொடுக்காமல் அழிந்து போவதே நல்லது. நாம் யாருக்கும் தெரியாமல் இறந்து விடுவதே மேல் என்று உள்ளம் உருக, உணர்ச்சி பெருக தன்னைத்தானே நொந்து கொண்டார் அருணகிரியார். அக்காளின்றித்தனித்திருந்த நேரத்தில் அருணகிரியார் முடிந்த மட்டும் மூச்சுப்பிடித்து எழுந்து, திருவண்ணுமலைத் திருக்கோயிலைநோக்கி ஓடினுர். கம்பத்து இளையனுர் கோயிலிலுள்ள கோபுரத்தின் மேல் விரைந்து ஏறினுர். உச்சிக்குச் சென்றதும் தம் உயிரை மாய்த்துக் கொள்ளும் பொருட்டு முருகா என்று கூறிய வண்ணம் கீழே குதித்தார். கருணையே வடிவான கந்தன் கீழே எழுந்தருளி தம் திருக்கரங்களால் அருணகிரியாரைத் தாங்கித் தரையில் விட்டார், கந்தப்பெருமானின் கை பட்டதும் அருணகிரியாரின் அழுகிய உடல் அழகிய உடலாயிற்று. பிணி மாறிப் பணி தொடங்கிற்று. முருகப் பெருமான் அருணகிரியை நோக்கி "நம் திருப்புகழை உலகம் உய்யப் பாடு" என்று திருவாய் மலர்ந்தருளினுர். "முருகப்பெருமானே! எட்டும் இரண்டும் அறியாத இந்த எளியவன் ஏட்டிலடங்காத தங்கள் திருப்புகழை எப்படிச் சுவாமி பாடுவேன்" என்று மலைத்துநின்ருர், அதுகண்ட ஆண்டவன் வெற்றிவடிவேலால் அருணகிரியாரின் நாவில் ஆறெழுத்தாகிய ஓம் சரவணபவவை எழுதி அருளினுர். 'முத்தித் தரு பத்தித் திருநகை' - ஆறுமுகனே அடி எடுத்துக் கொடுக்க கடல் மடை திறந்தது போல கவின்மிகு தமிழில் எழில்நடை மிக்க இனிய பாடல்களைப் பாட ஆரம்பித்தார் அருணகிரிநாத சுவாமிகள்.

அருணகிரியார் முருகப்பெருமான் மேல் ஆற்ருெழுக்குப் போன்ற அருமையான திருப்புகழைப் பாடினுர். இவற்றையெல்லாம் கண்ட ஊரார் மகிழ்ந்தனர். ஆதி அம்மையாருக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டானது. பெண்முகத்தையே கண்டவன் சண்முகத்தைக் கண்டு விட்டான் என்று பெருமைப்பட்டார். பிரபுடதேவ மன்னனும் அருணகிரிநாதரின் புகழைக் கேள்விப்பட்டு சுவாமிகள் மேல் அன்பும் பக்தியும் கொண்டான். ஒருநாள் பிரபுடதேவ மன்னனுக்கு கண்பார்வை குன்றியது. அவன் அருணகிரிநாதரிடம் சென்று "தாங்கள் முருகன் கருணையால் விண்ணுலகஞ்சென்று பாரிசா

தமலர் கொண்டுவந்தால் அடியேனுக்கு மீண்டும் கண்ணொளி கிடைக்கும்'' என்று இரந்து வேண்டினன். மன்னன் கருத்துப்படி சுவாமிகள் தம் உடலை கோபுரத்தில் கிடத்திவிட்டு அங்கே இறந்து கிடந்த ஒரு கிளியின் உடலில் புகுந்து விண்ணுலகஞ் சென்றார். பிரபுடதேவ மன்னனுக்கு நண்பனுகவும் மந்திரியாகவும் இருந்த சம்பந்தாண்டான் என்பவன் அருணகிரியார் இறந்துவிட்டார் என்றுமன்னனுக்குக் கூறி, கோபுரத்திலிருந்த அருணகிரியாரின் உடலை எடுத்துப் புதைப்பித்தான். கிளிவடிவிற் சென்ற அருணகிரியார் பாரிசாத மலரோடு வந்தார். அவரது வருகையால் மன்னனும், ஏனைய கண்ணற்றவர்களும் கண்பெற்றுப் பேரானந்தத்தில் அமிழ்ந்தினர். மன்னன் அருணகிரிநாதரின் பூதவுடல் புதைக்கப்பட்டமைக்காகப் பெரிதும் வருந்தினன்.

அருணகிரிநாதர் கிளியுருவாய் வந்தமர்ந்த கோபுரத்தை திருவண்ணமலையில் இன்றும் கிளிக்கோபுரம் என்று கூறுகின்றனர். தமது பூதவுடல் புதைக்கப்பட்டதை அறிந்த அருணகிரியார் ஆனந்தப்பட்டார். பின்னர் அருணகிரிநாதசுவாமிகள் தன்பழையவுருவைக் காட்டி அனைவருக்கும் அருள்புரிந்து ஆனிமாதம் மூலநட்சத்திரத்தில் தேவியின் திருக்கரத்தில் கிளியுருவில் அமர்ந்து முருகப்பெருமானின் திருவடியை அடைந்தார்.

---

மனிதர்களாகிய நாம் மிருக வலிமையுடன் பிறந்துள்ளோம். ஆனல் இருதயத்தில் குடிகொண்டுள்ள கடவுளை அறிவதற்காக மனிதராய்ப் பிறந்திருக்கிறோம். அதுதான் மனிதனின் விசேஷப் பிறப்பாகும்.

—காந்தியடிகள்

# "பட்டினத்தடிகளும் பாவையரும்"

"கடவுளைக் காணமுயன்றவர்கள் பக்தர்கள்; கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்" என்பது தேவாரம் நவிலும் நல்லிலக்கணம். சித்தர்கள் என்போர் உடல்வாடி வருந்தி, உயர்நெறி சேர்ந்து வீடுபெற்ற மேலவர். "ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து தூங்காமல் தூங்கிச் சுகங் கண்ட யோகிகள். தன்னை அறிந்து இன்பமுறவும், இறையைக் காணுமற் கண்டு கருத்தோடும், களிப்போடும் இருக்கவும், ஒரு தந்திரம் கண்ட தவவலிமையாளர்.

இச்சித்தர்களில் தமிழ் மக்களால் முதன்மையானவராக பெரிதும் பேசப் படுபவரும் கொண்டாடப்படுபவரும் பட்டினத்தார் ஆவார். இவரது வரலாறும் ஏனைய சித்தர்களது வரலாறுகளும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு இன்றுவரை தெளிவாகக் கிடைக்காத போதும், இவர்கள் செய்தருளிய ஞானப்பாடல்கள் ஆத்ம இருளோட்டும் ஒளிப்பிழம்புகளாக விளங்குகின்றன. பட்டினத்தார் இயற்றியதாகக் கூறப்படும் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமலமும் மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது ஆகிய நூல்கள் சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள் பதினோராம் திருமுறையிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஞானச் சுடரொளியான பட்டினத்தார் அருளிச்செய்த ஞானப்பாடல்களில் பல்வேறு இடங்களில் பெண்களைப் பற்றிப் பேசப்படுகின்றது. பெண்குலத்தை இழித்தும் கண்டித்துந் தான் பட்டினத்தார் பாடியுள்ளாரெனுங் கருத்து பலரிடத்தும் பரவலாக வேரூன்றியுள்ளது. இக்குற்றச்சாட்டில் எத்துணை உண்மை பொதிந்துள்ளதென்பதனைக் காண்போம்.

பட்டினத்தார் ஒரு சித்தர். 'ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் மெய்ஞ் ஞானி. இவர் அருளிய ஞானப் பாடல்களைத் துருவி ஆராயப்புகின் இவரிடத்தில் காணப்பெற்ற பற்றற்ற தன்மையையே மூலமாகக் கண்டு தெளிய முடிகின்றது. "உடை கோவணமுண்டு; உறங்கப் புறந்திண்ணையுண்டு; உணவிங்கு அடைகாய் இலை உண்டு; அருந்துணைக்கே விடையேறும் ஈசர் திருநாமம் உண்டு............" எனக்கொள்ளும் பட்டினத்தார் உலகை ஒருமாயை எனக்கருதினர். இம் மாயையில் கட்டுண்டு மாள்வதற்கு ஆசைகள்தான் காரணமென உணர்ந்தார். எனவே,

"சூதுற்ற கொங்கையும் மானுர்கலவியும் சூழ்பொருளும்
போதுற்ற பூசலுக்கு என்செயலாம்?"

என்றும்,

"வேதத்தின் உட்பொருள் மண்ணாசை மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலையோ? செய்த புண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன்போல வெளிச்சம் தாம் பொழுது
காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே"

என்றும்பாடி, மண்ணாசை, பொன்னாசை,பெண்ணாசைஆகியமூவாசைகளையும் சாடியுள்ளார். இப்பாடல்களிலும் இவைபோன்ற பாடல்களிலும் பிறவிக்குக் காரணமான ஆசைகளைக் கண்டிக்க வந்தவிடத்து ஆசைகளுள் ஒன்

ருன பெண்ணுசையைப் பற்றியும் கூறியுள்ளாரே அன்றிப் பெண்குலத்தைப் பட்டினத்தார் தனியாகக் கடிந்து கூறவில்லை.

இவை போன்ற பாடல்களைத் தவிர்ந்த ஏனைய பாடல்களில் பட்டினத்தார் எவ்வாறு பெண்களை நோக்குகின்ருர் என்பதைச் சற்று அவதானிப்போம்.

''காதளவோடிய கலகப் பாதகக்
கன்னியர் .........''

''மாயநட்போரையும் மாயமலமெனும் மாதரையும்''

''வரிக்கோல வேல்விழியார் அநுராக மயக்கிச் சென்று''

''காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டி என்கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட
தூதென்று........''

''பெண்ணுகி வந்தொருமாயப் பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணுல் வெருட்டி.........''

''பட்டப்பகலில் வெளிமயக்கே செய்யும் பாவையர்மேல்
இட்டத்தை நீ தவிர்ப்பாய்'''

''கண்காட்டும் வேசியர்தம் கண்வலையில் சிக்கி மிக
அங்காடிநாய்போல் அலைந்தனையே நெஞ்சமே''

''கைப்பிடி நாயகன் தூங்கையிலே அவன் கையையெடுத்து
அப்புறந்தன்னில் அசையாமல் முன்வைத்து அயல்வளவில்
ஒப்புடன் சென்று துயில் நீத்துப்பின் வந்து உறங்குவளை
எப்படிநான் நம்புவேன்? இறைவா! கச்சி ஏகம்பனே!''

இவ்வாறு வெவ்வேறிடங்களில் ஒவ்வோர் விதமாகப் பெண்ணைச்சாடிய போதும் இவற்றுள் உள்ளடங்கித் தொனிக்கும் பொருள் ஒன்றே. கலகத்தை மூட்டுகின்ற கண்களை உடையவர்களும், மாயாமலம்போல மயக்கத்தை ஊட்டுபவர்களும், காதென்று கண்ணென்று காட்டி மறலிவிடு தூதென்று வருபவர்களும், மாயப் பிசாசுபோலப் பின்தொடர்ந்து கண்ணுல் வெருட்டி வலை வீசுபவர்களும், பட்டப்பகலில் வெளிமயக்குச் செய்பவர்களும், அயல்வீடு சென்று துயில் நீத்துப் பின் வந்து உறங்குபவர்களும் பெண்களெனப் பிறவி எடுத்திருப்பினும் பெண் குலத்துள் பிறிதோர் கூட்டம். அவர்கள் வேசியர்கள்; விலைமாதர்கள்; நடத்தை கெட்டவர்கள். இவர்தம் கண்வலையிற் சிக்கினுலே அங்காடிநாய்போல் அலைய நேரிடும். எனவே பட்டினத்தார் சாடுவது ஒழுக்கக் கேடான மாதர்களையேயன்றி மாதர்குலம் முழுவதையுமல்ல. பட்டினத்தாரும் ஒரு தாய்க்கு பிள்ளை என்பதை, ஒரு சித்தரான இவரே உணரத்தவறவில்லை. பற்றற்ற பட்டினத்தாரையும், தாய்மையின் பாசம் பற்றிப் பிணைத்ததென்பதற்கு, அவர்தம் தாயாருக்குத் தகனக்கிரியை செய்யுங்கால் பாடிய பாடல்கள் சான்று பகருகின்றன. ''எப்பிறப்பில் காண்பேன் இனி?'' எனவும், ''விறகிட்டு மெய்யிலே எப்படி எரியத்தழல் மூட்டுவேன்'' எனவும், ''அன்னை இட்டதீ அடிவயிற்றிலே'' அவரைச் சுட்டெரிக்கின்றதெனவும், ஏங்கித் துடியாய்த் துடிப்பதன் மூலம், தாயிடத்து அவர் கொண்டிருந்த பற்று புலப்படுகின்றது. ''ஊரும் சதமல்ல; உற்ருர் சதமல்ல; உற்றுப் பெற்றபேரும் சதமல்ல'' எனக்கருதும் பட்டினத்தார், மாதர் குலத்தை இழி

வாகக்கருதுபவராகஇருந்தால், தாயாரை ஒருபொருட்டாகக் கொண்டு இரங்கவேண்டியதில்லை. பெண்ணாக வந்த மாயப்பிசாசம்'' என ஒதுக்கித் தள்ளியிருக்கலாம். இது மாத்திரமல்ல இன்னோர் பாடலில் ''ஓயாமல் பொய் சொல்வார் நல்லாரை நிந்திப்பார்; உற்றுப்பெற்ற தாயாரை வைவர்...... (இவர்) இருந்தென்ன போயென்ன?'' எனக் கேட்கின்றார். பெண்களை வைபவராகப் பட்டினத்தார் வாழ்ந்திருந்தால், தாயாரை வைபவரை இங்கு கண்டித்திருக்க நியாயமில்லை. எனவே பட்டினத்தார் பெண்களைத் தூற்றவில்லை என்பது வெள்ளிடைமலையாகும்.

''பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து
இட்டபிச்சையெல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோல் உழன்று
நன்மங்கையரைத்
தாய்போல் கருதித் தமர்போல் அனைவர்க்கும்
தாழ்மைசொல்லிச்
சேய்போல் இருப்பர்கண்டீர் உண்மைஞானம்
தெளிந்தவரே!''

இப்பாடலிலும் பட்டினத்தார் மங்கையரைக் குறிப்பிடுகின்றார். இங்கே நன்மங்கை பற்றிச் சொல்லுகிறார். நன்மங்கையர்களைத் தாய்போல் கருதும் அவர்தம் கருத்துப் பெறப்படுகின்றது. நன்மங்கையரெல்லோரும் தாயாவரென்பதனால் துன்மங்கையரையே தூற்றியுள்ளார் என்பதும் தெட்டத் தெளிவாகின்றது.

எனவே பட்டினத்தார் பெண்குலத்தைத் தூற்றும், இழித்துரைக்கும் ஒரு சித்தரல்லர். ஆன்ம ஈடேற்றத்துக்குத் தடையாக நின்று மாயைச் சேற்றில் மடக்கி வீழ்த்தும் விலைமாதர்க்கே அவர் விரோதி. ''வானத்தின் மீனுக்கு வன தூண்டில் இட்ட வகையது போல்'' பட்டினத்தார் பாடல்களைப் படித்த வெளி மயக்கில் பெண்குலத்தைச் சாடுவதற்குப் பட்டினத்துச் சித்தர் செய்த பாவகையில் உதாரணம் காட்டும் அஞ்ஞானம் அழிந்தொழிய வேண்டும். ''நன்மங்கையரைத் தாய்போல் கருதி சேய்போல் இருப்பர் கண்டீர்'' அவர் பாடல்களில் மெய்ஞ்ஞானம் தெளிந்தவரே!

க. நவரத்தினம்
விஞ்ஞானம் — முதல் வருடம்

# "ஆடும்பிரான்"

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழந்தமிழ் வாசகங்களில் ஒன்று. அதுவே தமிழ் மக்களின் ஆணித்தரமான கொள்கைகளில் ஒன்ருகிவிட்டதில் வியப்பில்லை. ஔவை அருளிய "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்னும் அமுத வாக்கை, அறியாப் பருவம் முதலே ஆயிரம் தடவைக்கு மேல் நாத்தழும்பேற நவின்றதின் பயனாக வந்ததோ அந்த அரிய தமிழ்ப்பண்பு!

ஆலயங்களில் சிறந்தது எது? இதற்கு அப்பர் அருளும் பதில்,

*"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக*
*வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக*
*நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய ஆட்டிப்*
*பூசனை ஈசனுர்க்குப் போற்றவிக் காட்டினோமே!"*

ஆம். ஆன்மாவே கோயில். அதுவே இறைவன் வாழும் இல்லம். ஆன்மா அவனிடத்தே ஆணவத்தைப் பலியிட்டு லயிக்கும் இடமே ஆலயம். சைவநெறி தழைத்தோங்கும் இடமெல்லாம் ஆயிரமாயிரம் கோயில்கள் உண்டு. ஆயினும் **'கோயில்'** என்னும் தனிச்சிறப்புப் பெயர் பெற்றது, அம்பலவன் ஆடும் ஆனந்தத் தில்லையே! அவ்விடத்தே அரிய நடம் 'ஆடும்பிரானின் அழகு வடிவிலே சிந்தையைப் பறிகொடாத அன்பருண்டா? ஆனல் அவருள் அந்தத் திருவடிவின் தத்துவம் என்ன என்பதை உண்மையாக அறிந்தவர் எத்தனைபேர்?

ஐம்புலன்களின் துணையோடு அறியப்படுவது இவ்வுலகம். இவ்வுலகை எவன உள்ளபடி காண்கிருனே அவனே கடவுளைக் காண்கிருன். அன்புவழி சென்று 'அன்பே' வடிவாம் சிவத்தைக் கண்டுகொள்கிருன். சிவம் வேறு சக்திவேறு அன்று; சிவம் மெய்ப்பொருள். அதனிடத்து என்றும் பிரியாது நிலைத்த விபூதி சக்தி. பாலில் வெண்மையுண்டு. மணியில் ஒளியுண்டு. ஆனல் பாலில் உள்ள வெண்மையையும், மணியில் உள்ள ஒளியையும் எவ்வாறு பிரிக்கமுடியாதோ, அவ்வாறே சிவத்திலிருந்து சக்தியைப் பிரிக்க முடியாது. அன்பு வடிவான சிவத்திலிருந்து, ஆக்க சக்தியான வல்லமை உண்டாகிறது. அவ்வற்புத சேர்க்கையினல் அண்டசராசரங்கள் உருவாயின. அவற்றில் அனந்தகோடி உயிரினங்கள், பிறந்தன! அன்னை ஆடும் திருநடனத்தினல் இயங்கின! மணிவாசகர் அருளியவாறு,

*"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்*
*பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*
*கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்*
*வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்*
*செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்*
*எல்லாப் பிறப்பும்"*

பிறந்து இளைத்தன! பிறவிதோறும் உழன்று புடமிட்ட தங்கமென மலமறுத்து முத்திநிலை அடையத் துடித்தன! அந்த உயிர்த் துடிப்பு அதிகமாக ஆக, அன்னை ஜகத்மாயை பின்னணிக்குச் சென்று விடுகிருள். அன்பு வடிவாம சிவத்தோடு இரண்டறக் கலந்து விடுகிருள். அன்னையின் திருநடனத்தில் ஆரம்பிக்கும் ஆன்மாவின் வாழ்க்கை, அப்பனின் திருநடனத்திலே முத்திநிலை பெற்று முடிவடைகிறது. இயற்கை என்னும் சுடுகாடே சக்திக்கு ஆடும் தலம். 'சித் அம்பரம்' என்னும் அறிவு வெளியாம் சிதம்பரமே ஐயனின் ஆடரங்கம். ஆகையால் சிதம்பரமேகோயில்! அம்பலவனே அருந்தெய்வம்!

அவனது ஆடரங்கம் என்ன சாமான்யமானதா? அகிலாண்டமும் கூடியல்லவா அந்த அரங்காகின்றது. அங்கு ஆடுகின்ற எம் பெருமான் எவ்வாறு ஆடுகிருர் என்று பார்க்கலாமா?

"'நிர்த்த கணபதி தேவர் நின்ருடநின்ற
யன் மாலுடன் இந்திரனுட
முப்பத்து முக்கோடி தேவருடனே முனிவரும்
நின்று ஆட
மெய்பக்தி மேவும் பதஞ்சலியாட வியாக்ர
பாதரும் நந்தியுமாட
கொப்புற்ற காதாள் சிவகாமியம்மையும்
கூடவே நின்ருட''

ஆடுகின்ருராம் நம்பெருமான் நடராஜன் என்று உவந்து பாடுகின்ருர் முத்துத்தாண்டவர். அந்த அருள் திருவடிவின் தத்துவங்கள் தான் யாவை? அதோ! ஆடுகிருன் அம்பலவன்! அவன் திருவடிகளிலிருந்து ஆரம்பித்தால் படிப் படியாகப்புரியும் அத்தததுவங்கள் யாவும்.

அவன் திருவடியொன்றின் கீழ் அகப்பட் டிருக்கிறவன் **'முக்குணமாயை'** ஆகிய முய லகன் என்னும் அரக்கன். 'மனிதனே! மாயைக்கு அடிமையாகாதே. அதனை உதைத்துத்தள்ளி விடு' என்று அழுத்திக்காட்டுகிறது **முயலகனை மிதிக்கும் திருவடி**. விழிப்பு, கனவு, உறக்கம் என்னும 'முப்பாழைக்' கடந்த நிலை **துரியநிலை**. அதனை நினைவூட்டுகிறது குஞ் சிதபாதமாகிய **தூக்கிய திருவடி**. 'அகங்கா ரம், என்னும் கொடிய புலியைக் கொன்று விடு' என்று புத்தி புகட்டுகிறது அவன் திருமேனியில் அணிந்த **புலித்தோல்**. 'துள்ளி யோடும் மானுகிய **மனத்தைக்** கட்டுப்படுத்திக் கொள்' எனச்சாற்றுகிறது **மானைப்பிடித்த கரம்**. நாதம் என்னும் விந்துவிலிருந்து உலக னைத்தும் உண்டாயிற்றல்லவா! நாதமயமான இசையிலை நாதப்பிரம்மமான நாதனை அடை யலாம். என்னும் நல்ல பாடத்தைக் கற்பிக் கிறது நாதம் தரும் **உடுக்கை ஏந்திய கரம்**. நல்லவையோ தீயவையோ, அத்தனையை யும் எரிக்க வல்லது தீ, **'சிவஞானம்'** ஆகிய தீ கன்மத்தையும், கன்மத்தில் உருவான உலகையும் அழிக்கவல்லது என்பதைச் சுட் டிக்காட்டுகிறது, சுட்டெரிக்க வல்ல **கனல் ஏந்தியகரம்**. அந்த அமுதமயமான சிவ ஞானஒளியிலே சாந்தத்தின் தண்மை யும் இனிமையும் இரண்டறக் கலந்துள்ளன என்பதை இயம்புகிறது, ஐயன் திருமுடி யில் இலங்கும் **பிறைமதி**. அபினயம் பிடிக்கும் ஒரு கரம் திருவடியைச் சுட்டிக்காட்டுகிறதே! ஏன் தெரியுமா? "அன்பர்களே! என்திருவ டியை அடைக்கலமாகக் கொள்ளுங்கள்." என்று சொல்வதற்கே. அடுத்த கரமோ வேருெரு அறி வுரையைத் தருகிறது. 'என்திருவடியை **அடைக்கலமாகக்** கொண்டு' சிவாய நம வென்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை. ஆகவே அஞ்சாதீர்! இதோ நான் **அபயம்**தருவேன்' என்று தைரியமளித்து அங்கை காட்டுகிறது ஐயனின் அபயகரம்.

ஆகா! எவ்வளவு அரிய தத்துவங்கள் வாய்ந் தது தில்லை நடராஜனின் அற்புத வடிவம்! அவ்வடிவோடு அவன் புரியும் **நடனமோ** படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறை தல் என்னும் **ஐந்தொழில்** நடனமாகும். இதையே,


"ஆக்கி அளித்துலகை நீக்கி மறைத்தருளி
ஐந்தொழில் புரிந்திடும் அம்பலவாணனே"

என உருகிப்பாடுகிருர் ஒரு அன்பர். ஆனல் அன்பருக் கன்பராம் மணிவாசகப் பெருமானே,

''ஆடகச்சீர் மணிக்குன்றே இடையருு அன்புனக்
கென்
ஊடகததே நின்றுருகத் தந்தருள் எம் உடை
யானே''

எனப்பலவாருக, கல்லும் கனிய, உளம் கனிந்து பாடித் திருவாசகத்தேனை அள்ளித் தருகிருர். அச்செந்தேனில் திளைக்கும் அன் பரே, நடராஜப்பெருமானின் இணையடி நிழலை எய்த வல்லார்.

**கமலா பெரியதம்பி**
**ஆங்கிலம் விடுகை வருடம்,**



பலாலி ஆசிரிய கழகம் சைவமாணவர் மன்றம் - 1970
சஞ்சிகைக் குழு உறுப்பினர்கள்



பலாலி ஆசிரிய கலாசாலை சைவமாணவர் மன்றம் - 1970
பேராசிரியர்களும், செயற்குழு உறுப்பினரும்

# தேனும் வண்டும்

அன்றொருநாள மாலேநேரம் நறு மணம் கமழும் மலர்கள் நிறைந்த பூங்கா ஒன்றில், மாணிக்கம் ஒரு மர நிழலில் இருந்தார். அந்தப் பூங்காவிலே அவர் கண்ட காட்சிகள் யாவும் அவருடைய உள்ளத்தைத் தொட்டுத் தொட்டு நின்றன.

அந்தத் தாமரைத் தடாகததின் சுவர்க் கட்டிலே இருந்தபடி காதற்சோடி ஒன்று தண்ணீரை அள்ளி ஒருவருக்கொருவா எறிந்து விளையாடிக் கொண்டிருந்தது.

அங்கிருந்த முல்லைப் பந்தரின் கீழ் இருந்த ஒரு கூட்டம் அந்த முல்லை மலர்களின் அழகையும் அவற்றிலிருந்து வீசிக்கொண்டிருந்த நறுமணத்தையும் வியந்து ஏதேதோ எல்லாம் பேசிக்கொண்டிருந்தது.

ஒருவரோடொருவர் முண்டி அடித்துக்கொண்டு நான் முந்தி, நீ முந்தி என்று சறுக்கீசில் ஏறி விளையாடிக்கொண்டிருந்தது சிறுவர் கூட்டம் ஒன்று.

இவர்கள் எவரையும் காணுது தனது கற்பனைச் சிறகு கொண்டு கவிதா உலகில் பறந்துகொண்டிருந்த கவிஞன் ஒருவன் தன கையில் இருந்த கடதாசித்துண்டில் ஏதோ கிறுக்கிக்கொண்டிருந்தான்.

கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்த படியே சிக்...... சிக்...... என்று துடித்துக்கொண்டு பூங்காவின் வாயிலேயே பார்ததபடி இருந்த வாலிபனுக்கு அங்கு தோனறும் காட்சிகள் யாவும் ஆத்திரத்தை ஊட்டிக்கொண்டிருந்தன.

இத்தகைய மக்கள் கூட்டத்தின நடுவே கெம்பீரமாக ரீங்காரஞ் செய்து கொண்டு வண்டினம ஆங்காங்கு பறந்து திரிந்தன. அந்த ரீங்காரம், சோம்பலின்றித் தமது தொழிலே இடையருது செய்துகொணடிருக்கும் வண்டினம இந்த மக்களைப் பார்த்து ஏளனம் செய்வது போலிருந்தது.

மரநிழலில் இருந்த மாணிக்கம் இவற்றை எல்லாம் உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவருடைய உள்ளத தடாகத்தில் எழுந்த சிந்தனை அலைகளில் இந்த மக்களும் வண்டினமும் மாறி மாறி மிதந்துகொண்டிருந்தன. அந்த வண்டுகளும் மக்களும் ஒரே விஷயத்துக்காக அங்கு காணப்படுவதை உணர்ந்தார். வண்டுகள் சிறிதளவு தேனுக்காகவும் மக்கள் சிறிது நேர இன்பப் பொழுது போக்குக்காகவும் அங்கு தோன்றியிருப்பதைக் கண்ட மாணிக்கத்துக்கு இவர்கள் மீது அனுதாபம் ஏற்பட்டது. பெரியோர்களாயின் சிறியோர்கள குற்றங்களைச் செய்யும்போது கோபிக்க மாட்டார்கள். அந்தச் சிறியோருக்கு ஆண்டவன் போதிய அறிவைக் கொடுக்கவில்லையே என்று அனுதாபப்படுகிருர்கள். அவ்வாறே மாணிக்கமும் அனுதாபப்பட்டார். அவர் எம்மைப் போனறு அவ்வளவில் நின்றுவிடவில்லை அந்த வண்டுகளை அழைத்துச் சில வார்த்தை கூறுகின்றுர். எப்படி,

> "தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேனுண்ணுதே
> நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தோ
> றும் எப்போதும்
> அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன சொரியும்
> குனிப்புடை யானுக்கே சென்றூ தாய் கோத்
> தும்பி"

என்று அவருடைய மணிவாசகம் முடிகின்றது.

வண்டுகள் மீது கொண்ட இரக்கத்திஞல் அவற்றை நோக்கித் 'தினையளவு தேனையுண்டு மகிழ ஆசைப்பட்டு அலைகின்றீர்களே. அதனை உண்ண ஆசைப்படாதீர்கள். நினைக்குந் தோறும், காணும் தோறும், பேசுந்தோறும், எப்போதுமே எலும்பெல்லாம் நெகிழ்ந்து விடக்கூடிய அளவு ஆனந்தத் தேனைச் சொரிந்து கொண்டிருக்கும் அந்தக் குனிப்புடையானிடம் சென்று பாடுங்கள்' என்று கூறி அவற்றுக்கு வழிகாட்டுகின்றுர்.

அந்த வண்டுகளைப் போன்ற மக்களுக்கு மணிவாசகப் பெருமான் எடுத்துக் கூறும் பேரின்பம் பெறும் மார்க்கம் மிகச் சிறந்த ஒன்ருகும். அவர் கூறும் அந்த ஆனந்தத்தேன எமக்கு எவ்வாறு இனிமையைக் கொடுக்கின்றது என்பது இங்கு சிந்திக்கற்பாலது.

நாம் உணவுப் பொருள் ஒன்றை நாவினால் சுவைக்க வேண்டுமாயின் அதனை நாம சிறிது முயற்சி செய்து எமது வாய்க்குக் கொடுக்கவேண்டும். ஆனால் மணிவாசகர் கூறும் அந்த ஆனந்தத் தேனைச் சுவைப்பதற்கு எவ்வித முயற்சியும் வேண்டியதில்லை. சும்மா நினைத்த மாத்திரத்தே அது எமது வாயில் புகுந்து, ஊனுடன கலந்து, உடம பெல்லாம் செறிந்து, உள்ளே உள்ள என் பெல்லாம நெகும் வண்ணம் இனிமை அளிக்கக் கூடியது. நினைத்தல் என்பது எமது உடல் உறுப்புக்களின் தீவிர தொழிற்பாடின்றி, மிகக் குறைந்த அளவு சக்தியுடன் செய்யக் கூடிய ஒன்றும். கதிரையில் இருந்த படியே எமது சிந்தனை சந்திர மண்டலத்துக்கும் சென்று வருவதை நாம் அறிகின்றோம். இவ்வாறு கூறும்பொழுது கேட்பவர்களுக்குச் சிந்தித்தல் என்பது மிக இலகுவாகப் படினும் இங்கு சிந்தித்தல் என்பது இடையருது நினைத்தல் என்பதைக்குறிக்கின்றது என்று அறிய வேண்டும்.

நினைத்தொறும் இன்பம் என்று கூறிய மணிவாசகனுர், காண்தொறும் இன்பம் என்றுர். காண்பதற்கு எமது கண்களுக்குச் சக்தி இருக்கவேண்டும். அதாவது மரணப் படுக்கையிலே புலன்கள் அடங்கிய நிலையிலே இருக்கும் நோயாளி ஒருவன் நினைவிழக்காமல் இருக்கலாம். ஆனுல் அவன் பக்கத்திலே உளள ஒரு பொருளைக்காண்பதற்கு அப்பொருள் உள்ள பக்கமாகத் தன் தலையைத் திருப்பிக் கண் இமைகளைத் திறந்தால் மட்டுமே காண முடியும். அவ்வளவுக்கு அவனுக்குச் சக்தி இருக்கவேண்டும். ஆகவே நினைத்தலுக்கு வேண்டிய சக்தியிலும் சற்றுக் கூடிய அளவு சக்தி காண்பதற்கு வேண்டும் என்பது புலனுகின்றது.

அடுத்து, பேசுந்தோறும் இன்பம் என்றுர். நினைத்தல, காண்டல் ஆகிய இரண்டுக்கும் தேவைப்பட்ட சக்தியிலும் பார்க்க இதற்கு அதிகமான சக்தி வேண்டும். அந்த நோயாளி சிந்திக்கின்றுன். காணுகின்றுன் ஆனுல் அவனுல் பேசமுடியவில்லை. பேசுவதற்கு அவன் வாயைத்திறந்து, உதடுகளைக்கூட்டி, நாவை அசைத்து, வாயினூடே காற்றை வெளிவரச் செய்யும் அளவுக்கு அவனுக்குச் சக்தி வேண்டும். அவ்வளவில் அவனிடம் சக்தியில்லை. ஆகவே இதிலிருந்து காண்டல் பேசுதல் ஆகியவற்றுக்கு வேண்டப்படும் சக்தியிலும் பார்க்க மிகக்குறைந்த அளவு சக்தி நினைத்தலுக்குப் போதுமானது என்பது புலனுகின்றது.

இக்கால மக்கள் சும்மா இருந்து சாப்பிடுவதையே பெரிதும் விரும்பி வாழ்கிறுர்கள். உடலைவருத்தி உழைப்பவர்கள் மிகச்சிலரே. மணிவாசகப் பெருமான் இத்தகைய ஒரு சமுதாயம் அமையும் என்பதை அனறே உணர்ந்தார் போலும், மிகக் குறைந்த அளவு சக்தியுடன் செய்யக்கூடிய அந்த நினைத்தலுக்கு மக்களை அழைக்கின்றுர். எவ்வித மெய் வருத்தமுமின்றி அவனைச் சிந்திக்க மாட்டாத மக்கள் மெய்வருந்தி ஆண்டவனை அடைவார்களா? ஒருசொற்ப நேர நிலையற்ற இன்பத்துக்காக எமது உடலை வருத்திப் பொருளைச் செலவிட்டு அலைகின்றோம். ஆனுல் நிலையான பேரின்பத்துக்காக உடல் வருத்தமோ, பொருட் செலவோ இன்றிச் செய்யும் சிந்தித்தலை - சதா இறைவனையே நினைத்தலைச்-செய்யமுடியாதவர்களாக இருக்கின்றோம். ஏன்? அதற்கும் அவன் அருள் வேண்டும்.

அந்த வண்டுகளைப் போன்று அலையும் எம்மை அழைக்கும் மணிவாசகப் பெருமானின் திருவாசகத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் தித்திக்குந் தேனுகும். இதனுலன்றே "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்று கூறியுள்ளார்கள். மேலும்,

"தொல்லை யிரும்பிறவி சூழும்தளை நீக்கி
அல்லல் அறுத்தானந் தமாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்"

என்று, திருவாசகத்தைத் தேன் என்றே கூறிவிட்டார்.

தேனை விரும்பாத வண்டில்லை, ஆயினும் சில வேளைகளில வண்டு மலத்தை விரும்புகின்றது. மலத்தை விரும்பிய வண்டு நிலத்திலே ஊர்ந்து சென்று மிதிபட்டு நெரிபட்டு அழிகின்றது. ஆனல் தேனை விரும்பும் வண்டு அதனை நாடி மேலே மேலே பறந்து ரீங்காரம் செய்து கொண்டு வாழ்கின்றது. இவ்வாறே மலத்தினுல் பீடிக்கப்பட்டிருக்கும் மக்களும் உலக இன்பதுன்பங்களில் நசுக்குண்டு மாழ்கிறார்கள். உலக இன்ப துன்பங்களை விடுத்து ஆனந்தத் தேன் சொரியும் ஆண்டவனை நாடும் மக்கள் முத்தி இன்பத்தைப் பெற்று அழியா வாழ்வு பெறுகிறார்கள்.

குழந்தைக்கு மருந்து கொடுப்பதாயின் அந்த மருந்தின் கசப்பை நீக்கி இனிப்பை உண்டாக்கி, குழந்தையை விருப்போடு குடிக்கச் செய்வதாயின் அந்த மருந்துடன தேனைக் கலக்கின்றோம். அதே போல எமது வாழ்க்கையிலேற்படும் கசப்பை நீக்கி இனிமையை, அமைதியை உண்டாக்க இறைவனுகிய தேனை எமது வாழ்க்கையில் கலக்கவேண்டும். தேனை எவ்வளவுக்குக் கலக்கின்றோமோ அவ்வளவுக்கு மருந்தின் கசப்பு நீங்கி இனிப்புண்டாகும். அவ்வாறே இறைவனை எவ்வளவுக்கு எமது வாழ்க்கையில் கலக்கின்றோமோ அவ்வளவுக்கு வாழ்க்கை இனிமை பெறும். தேனை அதிகமாகக் கலந்தால் எவ்வாறு மருந்தின் கசப்பு முற்றாக நீங்கி மருந்து தேனுக மாறிவிடுகின்றதோ அவ்வாறே எமது வாழ்க்கைமுழுவதிலும் இறைவனுடைய கலப்பு ஏற்படுமாயின் அது தூய்மை பெற்று இந்த உலகமே பேரின்ப வீடாய்விடும். இதனை,

''பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே'' என்றும்

'வழுக்கி வீழினும் உன் திருப்பெயர் மறவேன'' என்றும்

''நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது நின்மலர்த்தாள்'' என்றும்

' சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை'' என்றும்

''நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
என்றும் நினை சிவன் தாள் இணை'' என்றும்

''பண்ணேறு மொழியடியர் பரவி வாழ்த்தும் பாத
மலரழகினை இப்பாவி பார்க்கில்
கண்ணேறுபடு மென்றோ கனவிலேனும் காட்
டென்றுல் காட்டுகிலாய் கருணையீதோ''

என்றும் பலவாறுக அடியார்கள் பாடியிருக்கிறார்கள்.

உலகிலே இன, மத, மொழி, நிற வேறுபாடுகள் நிறைந்த பல்கோடி மக்கள் இருக்கிறார்கள். எந்த வேறுபாடுகள் இருப்பினும் மக்கள எல்லோரும் விரும்புவது ஒன்றுண்டு. அது ஆனந்தம. ஆனந்தத்தை விரும்பாத ஓருயிர் எங்குமேஇல்லை எனலாம். எனவே எமது வாழ்க்கையைச் சமயவாழ்க்கையாக அமைத்து ஆனந்தத்தேன் சொரியும் ஆண்டவனை நாயகமாகக் கொண்டு திருவாசகத் தேனுல் அவனை அர்ச்சித்து உலக இன்ப துன்பங்களினின்றும் விடுபட்டுப் பேரானந்த மடைய அவனடி வேண்டி நிற்போமாக.

முற்றும்

க. கனகரத்தினம்
வர்த்தகம்
2ஆம் வருடம்

# கிழக்கிலங்கையில் கண்ணகி விழா

பழமைக்கும் பண்பாட்டிற்கும் புகலிடமாய் விளங்குவது கிழக்கிலங்கை. சைவநெறியில் வாழும் இந்நாட்டு மக்கள் வைஷ்ணவ வழிபாட்டுடன், கண்ணகி வழிபாட்டையும் பண்டு தொட்டுக் கடைப்பிடித்து வருகின்றனர். இதன்மூலம் இவர்கள் சமய. சமரச உணர்வு நன்கு புலனாகிறது.

வீரபத்தினியாகிய கண்ணகிக்கு விழாவெடுக்கும் வழக்கம் கிழக்கிலங்கையில் பண்டு தொட்டு இன்று வரை நிலவுகின்றது. சோழநாட்டில் பிறந்தாள். பாண்டிநாட்டில் கணவனை இழந்தாள். சேரநாட்டில் தெய்வமானாள். ஈழநாட்டின் கிழக்குப்பகுதியில் இன்றும் பூசிக்கப்படுகிறாள். கற்புக்கரசியாம் கண்ணகி. சேரமன்னனாகிய செங்குட்டுவன் வடவரை வென்று, இமயஞ்சென்று கல்லெடுத்து, கங்கையில் நீர்ப்படை செய்து, கனகவிசயரின்சிரமிசைஏற்றிக் கொணர்ந்து, வீரபத்தினிக்குச் சிலைவடித்தான். அவ்விழாக் காண்பான் கருதி கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னனும் ஆங்குச் சென்றான். அப்போது அவ்வேந்தனாலேயே ஈழநாட்டிற் கண்ணகிவழிபாடு கொண்டுவரப் பட்டதென்பது வரலாறு. இவ்வழிபாடு அன்று தொட்டு இங்கு நிகழ்வதாயிற்று. சிங்கள மக்கள் 'பத்தினித் தெய்யோ'' எனக்குறிப்பிட்டு வீரபத்தினியைப் பூசிப்பர்.

சரித்திர காலந்தொட்டுக் கிழக்கிலங்கையும், சிங்கள இராச்சியமும் நெருங்கிய தொடர்புடையன. அதிலும் கண்டிநாடு மிக அண்மையில் உள்ளதால் அந்நாட்டுடன் பல்வேறு வகையிலும் தொடர்புடையதாயிருந்தது. இதன் காரணமாகப் போலும் சிங்கள மன்னரால் கைக்கொள்ளப்பட்டு வந்த இவ்வழிபாடு இங்கும் பெருவழக்காகக் கைக்கொள்ளப்பட்டு வருகிறதெனலாம். எது எப்படி இருப்பினும் பிறந்தநாட்டில் இல்லாத இவ்வழிபாடு கிழக்கிலங்கையிலுள்ள பல கிராமங்களில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறதென்பதை எவரும்மறுக்கமுடியாது.

''பிறந்த இடத்தன்றிப் பிறிதொரு தேசத்தே
செறிந்த இடத்தனரே சிறப்பு.''

வைகாசித் திங்களில் நிறைமதி நாளன்று கண்ணகி விழா பூர்த்தியடையும். இதைக் குளுத்தி (ஆடுதல் குளிர்ச்சி) என்பர். இதற்கு முந்தி ஐந்து அல்லதுஏழு நாட்களாகப் பூசைகள் நடைபெறும். மட்டக்களப்பில் இவ் விழாக்காலத்தில் படிக்கப்படும் குளுத்திப்பாடலில்

''வைகாசித் திங்கள் வருவேனென்று
வருகைக் கிசைந்து விடைகொடுத்தார்.''

எனவரும் அடிகள் மூலம் கண்ணகிக்கு விழா எடுக்குங்காலத்தை அறியலாம். கயவாகு மன்னன் இவ்விழாவை ஆடிமாசத்திலேயே கொண்டாடிவந்தான். இதன் மாறுபட்ட தோற்றமே இப்போது நடைபெறும் கண்டிப் ''பெரஹரா![1]'' பத்தினித்தெய்வத்துக்காக எடுக்கப்பட்ட பெரஹர, இன்று புத்த தந்தப் பவனியாகப் பரிணமித்துள்ளது. கஜபாகு மன்னன் கி. பி. 2ம் நூற்றாண்டிலேயே ஈழத்தின் பல ஊர்களிலும் கண்ணகிக்கு ஆலயம் எழுப்பினான். ஆனால், இப்போது கிழக்கிலங்கையிலேயே

பல ஆலயங்கள் விளங்குகின்றன. ஏனைய சில இடங்களில் அவை இருப்பினும் வழிபாட்டு முறையில் வேறுபாடுகள் உண்டு. இங்கு நடைபெறும் வழிபாட்டு முறைகள் இந் நாட்டிற்கே உரித்தானவையாம்.

வைகாசித் திங்கள் வந்ததும் கிழக்கிலங்கையே ஒரு புத்துணர்ச்சியுடன் தோற்றமளிக்கும். சிறப்பாசு விழா வெடுக்கும் ஊர்களோ மகிழ்ச்சிக்கடலில் பொங்கும். மக்கள் மனதிலே புனிதத்தன்மை காணப்படும். ஆண்கள், பெண்களின் வாயில் விழாப் பேச்சு ஆரம்பித்து விடும். வைகாசித்திங்களின் நிறைமதிக்கு முந்திய ஐந்து, அல்லது ஏழு நாட்களுக்கு முன் கதவு திறத்தல் ஊர்காவல் பண்ணுதல் என்னும் நிகழ்ச்சிகளுடன் விழா ஆரம்பமாகும். இவ்விழாவை இந்நாட்டவர் ''சடங்கு'' எனக் குறிப்பிடுவர். இது, ஷட் + சங்கம் என்னும் வடமொழித்திரிபாகும்.

ஊரவர் யாவரும் குடிவழியாகப் பிரிந்து நின்று இச் சடங்கினை நடாத்துதல் மரபாகும். இதில் பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டு நடாத்தும் வகையில் போட்டிகள் ஏற்படுவதுண்டு. கன்னிக்கால் நாட்டும் விழா முக்கிய ஒரு விழாவாகும். ஊர்களில் இதற்கென வளர்க்கப்பட்ட தடிகளை, பல வாத்தியங்கள் முழங்க. காவியம் ஒலிக்க பக்தர்கள் பவனியாகச் சென்று வெட்டி ஆலயத்துக்குக் கொண்டு செல்வர். பின்னர் அவற்றைக் கோயிலுள் நட்டு வண்ணப்புடைவைகளால் அலங்கரிப்பர். அதன் பின் தேவிக்கு விசேட பூசைகள் நடைபெறும்.

ஏனைய ஆலயங்களில் கைக்கொள்ளப்படாத பூசைமுறைகளே இங்கு நடைபெறும். பிராமணர் அல்லாத சைவக்குருக்களாலோ, அன்றேல் சன்மார்க்க சீலரான சிவனடியாரராலோ இது நடைபெறும். இவர்கள் 'கட்டாடியார்'' என அழைக்கப் படுவர். பூசை முடிவில் இதற்கென இந்நாட்டுப் பண்டைய புலவர்களால் இயற்றப்பட்ட ''உடுக்குச்சிந்து'' ஆகிய கண்ணகி காவியம் பாடப்படும். பகல், இரவு வேளைகளில் ''கண்ணகி வழக்குரை'' என்னும் பிரபந்தம் ஏட்டுச் சுவடிகளிலிருந்து பாடப்படும். அப்போது பத்தி சிரத்தையுடன் அடியவர்கள்கேட்டுப் பரவசமுறுவர். பூசை நேரங்களில் விசேட அம்சமாக விளங்குவது மாதரின் குரவை ஒலியாகும்.

கண்ணகி ஆய்ச்சியர் பாடியில் தங்கியிருக்கும்போது கோவலன் கொலையுண்ட துர்நிமித்தம் காரணமாய் ஆய்ச்சியர் குரவைக்கூத்தாடிய செய்தி சிலப்பதிகாரத்தில் காணக்கூடியதாகும். ஆனல் குரவைக்கூத்தின் மாறுபட்ட நிலையே இன்று மட்டக்களப்பில் கண்ணகி கோயில்களில் ஒலிக்கும் குரவை ஒலியாகும். இவ்வொலி ஒலிக்கப்படும் போது கேட்பதற்கு அது இன்னேசையாய் இருக்கும். இக் குரவைஒலி போடும் வழக்கம் இந் நாட்டிலேயே வழங்குங் காரணத்தால் பழமையின் சின்னம் இங்கு உயிர் வாழ்வதை அறியலாம்.

பூசையின் முடிவில் பாடப்படும் ஊர் சுற்றுக்காவியத்தில் இந்நாட்டில் கண்ணகி கோட்டம் அமைந்துள்ள ஊர்களனைத்தும் இடம்பெற்றுள்ளன. தம்பிலுவில், காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, கல்லாறு, பட்டிமேடு. களுவாஞ்சிக்குடி, எருவில், செட்டி

பாளையம் முதலிய தென்கிராமங்கள் தொடக்கம் வந்தாறுமூலை, சிற்றாண்டி முதலிய வடதிசை ஊர்களனைத்தும் பாடப்பட்டுள்ளன. பின்வரும் பாடல்கள் அவற்றுள் சிலவாகும்.

1. கார்பெற்ற விரிதிரைக் கடல்மீது பெட்டகம்
   கண்டுமா ணுகருடன் மாசாத்து வாரும்
நேர்பெற்ற பெட்டகம் எனக்கெனவும்
   உள்ளான
   நிதியெனக் கென்னமா ணுகரு முரைக்க
பேர்பெற்ற மாசாத்தாரைக் கண்டு நாணிமிகப்
   பின்னிடவும் மாணுகர் முன்னிட மயங்கி
சீர்பெற்ற தமபிலுவில் நகர்வாழ வருகின்ற
   செல்விகண் ணகையை ஒருநாளு
   மறவேனே.

2. மேருவரை யுற்றதன பாரமா தவிதந்த
   மெய்யன்பு தீரவொரு கைமுதலில் லாமல்
பாரமா நூபுரம் தனைவிற்க வெனறே
   பன்னுதமிழ் மதுரைமன் பதியதனில்
   வந்து
மாரவேள் ஒத்தவடி வானகோ வலன்றன்
   மதுரைமன் கொன்றபழி வாங்கிவருகின்ற
காரைதீ விற்கோயில் கொண்டுவாழ் கின்ற
   கண்ணகை கமலபதம் கனவிலுங்
   கருதுவனே.

3. எத்திசையும் மெய்க்கவே தேருடன் திருநாள்
   என்றுமோராண்டினில் நடத்தியா
   வரையும்
குற்றமற முக்குகர்கள் எல்லாரையு ம்தினம்
   குறைவற நடத்துமொரு குணரட்ண
   மயிலே
கொற்றவனை வாதாடி அன்றுவென் றேஆயர்
   கோமகனை அஞ்சலென் றிடும்அன்ன
   மின்னே
உற்றபுகழ் சேர்கின்ற வெற்றிசெறி
   பாண்டிருப்
   பூர்வாழ வந்தருளும் உலகமாதாவே.

4. காரணி நாரணி காளிகங் காளி
   கண்ணன் சகோதரி வண்ணமா மாரி
பூரணி முக்கண்ணி வேதநா யகியே
   புகழான மாணுகர் மகளான திருவே
ஏரணி முக்கண்ணி வேதநா யகியே
   ஏழையடி யார்களனை ஈடேற்று வாயே
வீரமா காளியே தெட்சண காளியே
   மேவரிய கல்லாறு வாழும்நா யகியே.

5. சிந்தைதனி லேஅதிக கோபமது கொண்டு
   செப்பரிய ஆயர்மனை தனையும்விட் டேகி
வந்துமன வேகமுடன் பாண்டிய னிடத்தில்
   வாதாடி நின்றுபரி புரமதை எடுத்து
பந்திதனில் நிற்கின்ற பாண்டியன் றன்னையும்
   பண்பில்லாத் தட்டானை யும்எரி செய்த
கந்தமிகு களுவாஞ்சி நகர்குளக் கட்டில்வாழ்
   கண்ணகை என்னவினை காதபோ
   டிடுமே.

6. தாயும்நீ தந்தைநீ அல்லாம லெங்களிட
   சஞ்சலந் தீர்ப்பதற் கேயொருவருண்டோ
நீயல்லால் வேறுதுணை தமியேனுக் குண்டோ
   நிச்சயம் தாகஅருள் தந்துதவி புரிவாய்
ஏயதோர் செல்வமும் செந்நெல்லின்
   விளையும்
   இன்பமுட னேதந்து எங்கள்துயர்
   தீர்ப்பாய்
காயாம்பூ மேனியன் தங்கையென வந்தநீ
   களுவாஞ்சிநகரிலுறை கின்ற கண்ண
   கையே.

மேற்படி பாடல் மட்டுமல்லாது வழக்குரைக் காவியங்கள், கண்ணகி அகவல், குளுத்திப் பாடல் முதலிய பல இலக்கியங்களும் கண்ணகி இலக்கியங்களாக இங்கு விளங்குகின்றன. இவற்றுட் பல அச்சு வாகனமேறி வெளிவந்துள்ளன. சில இன்னும் ஏட்டுச் சுவடிகளிலும், பலரது மனதுள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இவைகளையும் அச்சேற்றி யாவரும் பயன்கொள்ளச் செய்யவேண்டியது அறிஞரின் கடனாகும், இவையனைத்தும் இந்நாட்டுப் புலவர்களால் காலத்துக்குக் காலம் பாடப்பட்டனவாகும். இவற்றின் தன்மைகளை நோக்கும்போது சமீப காலத்தனவாகவே காணப்படுகின்றன. ஏறத்தாழ பதினைந்தாம் நூற்றாண்டிற்கு உட்பட்டனவென்றே கூறலாம். இவை அனைத்தும் இன்னோசையும், பொருட்செறிவும் மிக்கன. போதியளவு யாப்பிலக்கண அறிவற்ற கிரா

மியப் புலவர்களாலே பாடப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளரின் முடிவு.

ஒருமுலே திருகி மதுரையை எரித்துக் கனல் பிறக்கும் ஆவேசத்துடன் வந்த கண்ணகியின் சீற்றந்தணித்துச் சாந்தமடையச் செய்தற்காகவே குளுத்தி நடைபெறும். குளுத்திப்பாடலும் இதே பொருளில் அமைந்துள்ளன.

'' ஒரு பிழையும் செய்யாத உலகுபுகழ்
கோவலரைப்
பெருமழுவாற் கொல்லுவித்த பிழைபிறன்
தனை வதைத்து
கருதரிய ஆயர்மனை கனல்மூளச் சாபமிட்டு
இருமுலையுங் குளுந்த கதை.......

எனக் குளுத்திப்பாடல் காப்பு கூறுகின்றது. கண்ணகி சடங்கு முடிந்து குளுத்தி பாடிக் கதவடைப்பு நிகழ்ந்த பின் மழைவளம் பெற்று, நாடு செழித்துத் துன்பங்கள் அகலும்.

இங்கு கண்ணகி ஆலயங்களில் பாடப்பட்டு வரும் கண்ணகி வழக்குரை என்பது ஒருபண்டைய இலக்கியச் செல்வமாகும். இதில் கண்ணகியின் பிறப்புத் தொடக்கம் தெய்வமானமை வரை பாடப்பட்டுள்ளது. ஏட்டுருவில் இருந்த இப்பாடல்கள் இந்நாட்டுப் பேரறிஞர் பண்டித வி. சீ. கந்தையா அவர்களின் அயரா உழைப்பினுல் அச்சாகி வெளிவந்துள்ளது. பழமைச் செல்வம் அழியா வண்ணம் பாதுகாத்த அன்னருக்கு நாடு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கைத் தமிழ் மக்களுக்குக் கண்ணகிதேவி ஒரு விசுவாசம் மிக்க குலதெய்வமாகும். எந்த ஒரு இன்னல் ஏற்படும் போதும் கண்ணகிக்கு நேர்த்திக்கடன் வைத்துத் துன்பம் அகற்றுதல் இந்நாட்டவரின் பரம்பரைப்பண்பாகும். கண்ணகியென்றுல் யாவர்க்கும் உள்ளூரப்பயம் உண்டாகும். கண்ணகி குற்றம்பொறுக்காத ஒரு தெய்வமென்பது இவர்கள் கருத்து. இதை வலியுறுத்துதற்குப் போலும் எந்த ஊரிலும் கண்ணகி ஆலயம் அமைந்துள்ள இடம் ஊரின் எல்லைப் புறங்களை அடுத்து, மக்கள் வசியாத பகுதிகளாகும். விழாக்காலம் ஆரம்பித்ததும் அந்த ஊரே மிக்க தூய்மையாகக் காட்சிதரும். மச்ச மாமிசங்களை உண்ணவோ, விற்கவோ எவரும் துணியார். ஆசௌசமான பெண்களும் ஆலய எல்லையிலிருந்து வெகு தூரத்துக்கப்பால் குடிபெயர்ந்து விடுவர். எந்தத் தெய்வத்துக்கும் அஞ்சாத மக்கள் கண்ணகிக்கு அஞ்சுவார்கள். கண்ணகி ஆலயத்தின், சன்னிதானத்தில் எவரும் அகங்காரம் கொள்ளமாட்டார்கள். இவ்வாறு இந்நாட்டு மக்கள் மட்டற்ற பயமும், அளவிலாப்பக்தியும் கொண்டு வாழ்வர்.

ஆலயங்களில் வழிபாடாற்றுவதோடு அமையாது, வீடுகளிலும் கண்ணகிக்குப் பொங்கல், பூசைகள் செய்து வழிபடுவர். இதைச் ''சர்க்கரை அமுது'' கொடுத்தல் என்று கூறுவர். பத்து வயதுக்குட்பட்ட பெண்பிள்ளைகள் ஐவர், அல்லது எழுவரைத் தம் சுற்றத்தவரில் தெரிந்தெடுத்து, அவர்களையே சக்திகளாகக் கொண்டு நீராட்டி உடை அணிந்து வேப்பிலை கைப்பிடித்துப் பொங்கல் வீட்டுக்கு வரச்சொல்வர்' அவர்களை மஞ்சள் நீரால் கால் கழுவி; கண்ணுக்கு அஞ்சனந் தீட்டி, நெற்றியில் நீறணிந்து, திலகமிட்டு வீட்டினுள் இருத்திச் சர்க்கரைச்சாதத்தைப்படைத்து அவர்களை

உண்ணச்செய்வர். அவர்கள் உண்ணு முன் 'கண்ணகி அம்பாள் உங்கள் யாவரையும் ஒரு துன்பமும் வராது காப்பாள்' என்று நல்வாக்குக் கொடுப்பர். இதைத் தேவியின் வாக்காக ஏற்று அவ்வீட்டில் உள்ளார் மனத்திருப்தி அடைவர். இப்பூசையும் ஆண்டில் ஒருமுறை தவருது வீடுகளில் நடைபெறும். கண்ணகி வழிபாட்டிற்கு, மஞ்சளும், வேப்பிலையும், அவசியம் வேண்டப்படும் பூசைப்பொருட்களாகும். சின்னமுத்து, பொக்குளிப்பான், கூகைக் கட்டு முதலிய தொற்று நோய்களிலிருந்து தம்மைக் காப்பாற்றுதற்காகவே தேவி பூசை நடாத்துவதாகும், மேற்படி பூசைப் பொருட்கள் நோய்க்கிருமிகளைக் கொல்லும் ஆற்றல் உள்ளவை என்பது கவனித்தற்பாலது. சைவசமயச் சம்பிரதாயங்கள் பல இவ்வாறு சுகாதார சம்பந்தமாக இருப்பது நோக்கற்பாலதாம்.

வேறும் ஒருவகையில் இந்நாட்டில் கண்ணகி வழிபாடு நடந்துவருகிறது. இவ்வழிபாட்டு முறைபல ஆண்டுகளாகக் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. முற்ருக அழிந்து விடாது நம் பாரம்பரியங்களைக் காத்தல் இந்நாட்டு மக்கள் கடனும்.

இளவேனில் முதுவேனில் காலங்களில் இந்நாட்டில் வெப்பநிலை மிக அதிகமாகும். இதனல் கண்ணோய், வயிற்ருேட்டம், வாந்திபேதி, வைசூரி முதலிய உஷ்ணரோகங்கள் தலைகாட்டுதல் வழக்கம். இவற்றிலிருந்து பாதுகாக்கவும், மழைவளம் பெறவும், விளைவு சிறக்கவும் வேண்டிக் கண்ணகிக்கு விழா எடுப்பர், இது "கொம்பு முறித்தல்" எனும் விளையாட்டுத் தழுவிய பெருவிழாவாகும்.

மக்கள் வடசேரி, தென்சேரி என இரு பிரிவினராக வகுக்கப்பட்டுள்ளனர். தந்தை எப்பிரிவைச் சேர்ந்தவரோ மகனும் அதே பிரிவைச் சேர்ந்தவர். வடசேரியார் கோவலன் கட்சி என்றும், தென்சேரியார் கண்ணகி கட்சி என்றும் கூறப்படுவர். "கரையாக்கு" எனும் மரத்திலிருந்து வெட்டப்பட்ட வளைந்த கொம்புகளைப் "பில்லி" என்னும் நீண்ட தடிகளிற் கட்டி பெரிய மரங்களிற் கட்டப்பட்ட வடத்திற் பூட்டி நூற்றுக்கணக்கான மக்கள் கூடி நின்று ஒருமித்து இழுப்பர்.

அப்போது ஏதாவதொரு கொம்பு முறித்தால் மற்றைய கட்சியார் வெற்றி கொண்டாடுவர். அன்றிரவு அம்பாளை ஊர்வீதிகடோறும் எழுந்தருளச் செய்து ஆங்காங்கு "வசந்தன்கூத்து" என்னும் ஆட்டத்தை ஆடுவர். இதில் முப்பத்திரண்டுவகைக் கூத்துக்கள் இடம்பெறும். தேவியை வழிபட்டு ஆடுவதோடு அமையாது, மக்களின் தொழில்கள், பண்பாடுகள் முதலியவற்றை விளக்கும் பல்வேறு பாடல்களையும் கொண்டன இவ்வாட்டங்கள் இவையனைத்தும் 'வசந்தன் கவித் திரட்டு" என நூலுருவில் வெளிவந்துள்ளன என்பதை இலக்கியரசிகர்களுக்காக நினைவூட்டற்குரியதாகும்.

இவ்வாறு ஒருமாதம்வரை கொம்பு முறித்துத் தேர்க்கலியாணம் எனும் நிகழ்ச்சி நடைபெறும். ஒவ்வொரு சேரியாரும் மிக உயரமான தேர்ப்புரை எனப்படும் கொட்டில்களை எதிர்முகமாக அமையுமாறு கட்டுவர். அதனுள் ஒவ்வொரு தேர் கட்டப்படும். அந்நாட்களில் முறிக்

கப்படும் கொம்பு "ஏடகத்து மரம்' என வழங்கப்படும். அவற்றைத் தேர்களில் வைத்து பூசைநடத்தி வழமை போல் மரங்களில் பூட்டி முறிப்பார்கள். அம்பாளுக்குரிய கொம்பாகிய தென்சேரிக்கொம்புக்கு வெற்றி உண்டாகும் வரை இவ்வாறுகொம்புமுறித்தல் நடைபெறும்.

ஈற்றில் கண்ணகிக்கும் கோவலனுக்கும் கலியாணம் நடைபெறுவதான தேர்க்கலியாணம் நடந்து குளுத்தி பாடி ஊர்வலமாக அம்பாளை எழுந்தருளச் செய்து விழாவினை முடிப்பர்.

சேரநாட்டு மக்களிடம் காணப்படும் பல பழக்கவழக்கங்கள் மட்டக்களப்பு மக்களிடமும் காணப்படுகின்றன என்று பல இந்திய நாட்டு அறிஞர் கூறுவர். மந்திரம், காலைக் குளிப்பு, தேங்காய் நெய் பூசுதல், தாய்வழிக்குடி என்பன இவற்றுட் சில. ஆகவே, இவர்களுடைய பரம்பரை பண்டைக் காலத்தில் சேரநாட்டிலிருந்து வந்து குடியேறி இருக்கலாமோ என எண்ண இடமுண்டு. இவர்களது கண்ணகி வழிபாடும் அவ்வாறே அங்கிருந்து அவர்கள் வரும்போது உடன் கொண்டு வந்திருக்கலாம். மலையாள நாடு என இக்காலம் கூறப்படும் சேரநாட்டில் "கிரங்கனூர்'' என்னுமிடத்தில் செங்குட்டுவனுற் கட்டப்பட்ட கண்ணகி கோட்டமும், சிலையும் இப்போதும் இருக்கிறதாகப் பேராசிரியர்கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் அவ்வாலயம் இப்போது இராசராசேஸ்வரி அம்பாள் கோயிலாக மாறியுள்ளதாயும், சைவாசார முறைப்படியே நைவேத்தியங்கள் நடைபெறுவதாகவும் கூறியுள்ளார். ஆங்கு சில ஊர்களில் ஒரு முலைச்சி அம்பாள் கோயில் எனச் சிலகோயில்களும் உளவாம். இவற்றை நோக்கும் போது தாய்நாட்டிலும் அக்காலத்தில் கண்ணகி வழிபாடு பெருவழக்காக இருந்ததென்றும், காலகதியில் அவை படிப்படியாய் மாறிவிட்டன என்றும் கிழக்கிலங்கையிலே மாத்திரம் அன்றுபோல் இன்றும் நிலவுகின்றதென்றும் அறியலாம்.

இ. சிங்கநாயகம்
வணிகம் விடுகை வருடம்

---

# எம்மதத்திற்கும் சம்மதமான இரு திருப்பாடல்கள்

வெண்ணீறணிந்து தொண்டர் கூட்டம் புடைசூழ திருநாவுக்கரசுப் பெருமானும் திருஞானசம்பந்தப் பெருமானும் திருப்புகலூரில் இரு எதிர்த் திசைகளிலுமிருந்து ஒருவரை ஒருவர் அன்பொழுகச் சந்திக்கின்றனர். அதனை உவமையுடன் விளக்குமிடத்து "இரண்டு நிலவின் கடல்கள் ஒன்றாகி அணைந்தனபோல் இணைந்த அன்றே" (திருநாவுக்கரசு நாயனார் புராணம் 233) என்று இருவர் சந்திப்பையும் இரு திருப்பாற்கடல்கள் ஒன்றுதல் போல என்கிறார் சேக்கிழார். சீர்காழிப் பதியில் இவ்விரு பெருமக்களும் ஒன்றுசேர்ந்து வணங்கப் புகுந்தபோது சேக்கிழார் திருக்கண்களுக்கு அவ்விருவரும் சைவத்திற்கு வாய்த்த வலக்கண்ணும் இடக்கண்ணும் - இறைவர் திருவருளும் சக்தியின் பேரருளும் - போலவே தோற்றுகின்றனர் (திருநாவுக்கரசர் புராணம் 185). சைவநெறி தான் பெற்ற புண்ணியக் கண்ணிரண்டு போன்ற இரு பெருமக்களும் அருளுந்த அழகொழுகத் தேவாரப் பாக்கள் பல தந்தனர். அத் தேவாரங்களின் பெருமையை அவர்களுக்குப் பின் வாழ்ந்த சுந்தரர் தமது தேவாரங்களில் காட்டுகிறார். இவ்விரு பெருமக்களின் அருமைப்பாடல் ஒவ்வொன்றும் அவர்தம் விரிந்த சமரச நன்னோக்கத்திற்கு உதாரணமாக அமைந்திருத்தலைப் பார்ப்போம்.

அப்பர் ஈசன் எந்தை இணையடி நீழலுக்கு ஐந்து பொருட்களை உவமையாகக் காட்டுகிறார். இது உள்ளத்துக்கு மகிழ்வூட்டுகிறது. மாசில் வீணை, மாலைமதியம், வீசுதென்றல், வீங்கிளவேனில், வண்டுகள்பாடி பூவில் விழும் நன்னீர்த்தடாகம் இவ்வைந்தும் ஒருங்கு ஒரேவழிக் கலந்தாற் போலிருக்கிறது அப்பருக்கு ஈசன் திருவடி. மாலை வேளையிலே பூரணமதியக் காலப் பொய்கைக் கரையில் வண்டுகள் இசைபாட இனிய தென்றல் வீசும் உணர்வு ஈசன் திருவடிபற்றி நினைக்கும்போது இச்சிவ அன்புச் செல்வருக்கு உண்டாகிறது. சொல்நயமும் பொருளுணர்ச்சியும் பொருந்தவரும் அவர் அருட்பாடல் நாம் பலகாலும் கோவிலயலிற் குழந்தைகள் பாடிக் கேட்ட ஒன்றுதான்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிளவேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

இப்பாடலினிமை எம்முளத்தோடு ஒன்றிவிடுகிறது. தேவாரச் சொற்றொடர்களாலேயே அப்பரனுபவத்தைச் சேக்கிழார் "........... வீங்கிள வேனிற்பருவம்

தைவருதண் தென்றல் அணை
தண்கமுநீர்த்தடம்போன்று
மெய்யொளி வெண்ணில் வளர்ந்து
முரன்ற யாழ் ஒலியினதாய்
ஐயர் திரு அடிநீழல் அருளாகிக் குளிர்ந்ததே

(திருநாவுக்கரசர் புராணம் 98) என்கிறார்.

இறைவனை வணங்கி அப்பரிருந்த மனநிலையை அருமையாகப் பகர வல்லவர் பாவெல்லாம் சிவம் மணக்கும் சேக்கிழார் தானே.

''ஆனந்த வெள்ளத்தின் இடை மூழ்கி
அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு
தெளிவெய்தி''

......... என்றவாறெல்லாம் அப்பர் அருநிலையை பெருமையுறப் பகர வேறு யாரால் முடியும். தேவாரப் பாடலுக்கு சேக்கிழார் அருட்பாடல்கள் வியாக்கியானமாயமைகின்றன. எந்த மதத்தவரும் — தமிழர் எவரும் எம் மதத்தைச் சார்ந்தவராயினும் பாடிப் பாடி உள்ளூர மகிழவாய்ப்புத் தரும் விதத்தில் இத்திருப்பாடல் பொதுவாக அமைந்துள்ளது. சைவருக்கு மாத்திரம் இது சொந்தமானதன்று. ஊர் நடுவிலிருக்கும் நீர்ச்சுனை எவ்வாறு ஊருக்குப் பொதுவானதோ அதுபோன்று இது அமைந்துள்ளது. ஈசன் என்ற சொல் மோட்ச ஐசுவரியத்தைத் தருகின்றவன் என்ற பொருளிலமைந்து பொதுவானதா யமைந்திருத்தல் நோக்கற்பாலது. அப்பர் எடுத்தாளும் வீணை ஒலி, மதியின் ஒளி, மெல்லிளந்தென்றல், வண்டுபாடும் குளிர்நீர்ப் பொய்கை, இவை எல்லாம் உலகில் எல்லோருக்கும் இன்பந்தரும் பொது உடைமைப் பொருள்களாயமைந்துள்ளன. அதே போன்று ஈசன் என்ற சொல்லும் எல்லா மதத்தவரும் கூச்சமின்றி உச்சத் தொனியில் உச்சரிக்கக் கூடிய நாமந்தான் என்பதில் வியப்பில்லை. அதை அடுத்து வரும் (ஈசனுகிய) எந்தை என்ற சொல்லும் எங்கள் பிதா எங்கள் தலைவன் என எல்லோருக்கும் பொதுவான பதமாயமைந்துள்ளது. கூச்சமின்றி இறைவனுகிய குளிர்நீர்ப் பொய்கையில் எல்லோரும் நீராட அருமை வழிகாட்டும் அப்பர் எம்மெல்லோருக்கும் அப்பர் எனக் கூறுவோம். அவர் பாடல் அவர் நாவுக்கரசரே என்பதை எமக்குத் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

இதேபோல எல்லா மதத்தவருக்கும் பொதுவான உலகிற்கே ஆசி வழங்கும் தன்மையிலுள்ளது கீழ்வரும் பாடல்.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே''

வையகத்துக்கு வாழ்த்துக் கூறுவது இத்திருப்பாடல். அந்தணர் பிராமணரைக் குறியாது அழகிய தண்ணளியினை உடையாரைச் சுட்டும் காரணப் பெயர். அத்தண்மை உடையாரே தெய்வத்தன்மை அமைந்த அன்பும் சிவமும் ஒன்றென்ற நிலையிலுள்ளார். அல்லாமலும் தத்தம் மதவேதத்தின் முடிவைக் கண்டவரையும் அது குறிக்கும். ஒவ்வொரு மதத்தவருக்கும் தெய்வத்தன்மை யமைந்த தேவாரங்களைப் பற்றிக் கூறுகிறுர். ஆனினம் நானிலத்தின் பயிர்வளத்திற்கு உர

மூட்டும் பசளையைத் தருவதோடு மக்கள் உடல் வளத்திற்கு திவ்விய பூரண உணவாகிய இனிமைமிக்க பாலைவழங்குவதால் ஆனினத்தின் வாழ்வு அகில உலகிற்கும் வாழ்வு அளிப்பதாகும். மழைவீழ்ச்சியும் வேந்தன்உயர்வுடைச் செங்கோலாட்சியும் உலகின் காவலுக்குகந்தன. தீயதெல்லாம் மறைக என்றது மறை பொருளாக நன்மை சிறக்க என வாழ்த்துவது போலாகிற்று. வையகமும்துயர் தீர்தல் உலகிற்கு ஓர் ஆசீர்வாதமாகும்.

பொது வாழ்த்துக்குரிய கடவுள் நாமத்தையும் மதங்களெல்லாவற்றிற்கும் பொதுவான அரன் என்பதனுற் சுட்டுகிறுர் சம்பந்தப்பிள்ளையார். அரன், பாவமாகிய இரும்பைத் தேய்ப்பவனெனவும் மக்கள் மனத்தைத் தம்பால் ஈர்ப்பவன் எனவும் பொருள்படும் காரணச் சொல்.

ஆகவே இவ்விரு பெரியாரும் ஏழாம் நூற்றுண்டிலே தந்த அருட் பாடல்கள் எந்நூற்றுண்டிற்கும் மத வேற்றுமையின்றித் தமிழர் என்றிருப்போர் எல்லோருக்கும் பொதுவான அருமைப்பாடல்கள் என அறிந்து இறைவனை நாம் அவற்றுல் துதிப்போமாக.

K. S. பாஸ்கரதாசன்
வர்த்தகம் முதலாம்வருடம்

---

மதங்கள் எல்லாம் ஒரே முடிவை அடையும் பல பாதைகள்தானே? நாம் அடையும் இலட்சியம் ஒன்றுய் இருக்கும்வரை, எப்பாதையில் சென்றுல்தான் என்ன?

— காந்தி அடிகள்

# அன்பும் அம்மையாரும்

வித்துவான் பொன் முத்துக்குமாரன் B. O. L. அவர்கள்

அன்பு என்பது ஒரு தெய்வீகப் பண்பு. அது தன்னை உடையவரைத் தெய்வத்தன்மையை உடையவராக்க வல்லது. கல்லைப்பிசைந்து கனியாக்குவது போல நான்என்னும் முனைப்பும் அதனின்றும் பிறக்கும் தன்னலம் பேணலுமாகிய தன்மைகளை மெல்ல மெல்ல நீக்கி, தன்னைத்துறத்தலும் பிறர் நலமே பேணுதலுமாகிய அரிய பண்பினை அன்பானது ஒருவரிடத்து ஆக்கிவிடவல்லது.

ஓர் ஆடவனும் பெண்ணும் மணமாகியதும் கணவன் மனைவி என்னும் பெயரைப் பெறுகின்றனர். அக்கணவனும் மனைவியும் மக்களைப் பெற்றதும் அவர் அம்மக்கட்குத் தாய் தந்தையர் எனக்குறிக்கப் படுகின்றனர். அங்ஙனம் அவர் அப்பிள்ளைகட்குத் தாயும் தந்தையுமாதலோடு அமையாது முன்னறி தெய்வமும் ஆகின்றனர் என ஔவையார் அருளியுள்ளார். ஆடவன், பெண் என்பன இடுகுறிப் பெயர்கள்; தந்தைதாய் என்பன முறைப் பெயர்கள்; ஆயின். முன்னறி தெய்வம் என்பதோவெனில் அது காரணம் பற்றிவந்தபெயர். தமிழ் மக்கள் இறைவனைக் குறித்தும் இல்வாழ்க்கையின் இலட்சியம்குறித்தும் கொண்டிருந்த உயரிய கருத்து அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்னும் அரியமொழியில் அடங்கியுள்ளமை சிந்திக்கத்தக்கது.

இறைவன் தனக்கென ஒரு தொழில் செய்வதில்லை; ஆன்மாக்களின் நன்மைகுறித்தே ஐந்தொழிலியற்றுவன். ஆன்மாக்கள் தன்னை வணங்குதல் வணங்காமைகளால் முறையே விருப்போ வெறுப்போ கொள்ளாதவன்; தான் ஆன்மாக்களுக்குச் செய்யும் நன்மை குறித்து; ஆன்மாக்களிடமிருந்து பிரதிபயனாக யாதொன்றினையும் எதிர்பாராதவன்; ஆன்மாக்கள் தன்னை மறந்தோ மறுத்தோ வெறுத்தோ இருப்பினும் தான் அவ்வான்மாக்களிடத்திற்கொண்ட அன்பிற்சிறிதும் குறைதலின்றி அவ்வான்மாக்களைஈடேற்றிய வண்ணமிருப்பவன்: ஆன்மாக்கள் அடையும் இன்பமே தன்னின்பமாயுள்ளவன். இறைவனது இத்தகைய இனிய குணங்களெல்லாம் ஒருதாயிடத்தில் அவள் தன்பிள்ளைமேல் வைக்கும் அன்பு காரணமாக அமைகின்றன. அதனாலேதான் அவள் அப்பிள்ளைக்குத் தாயாதலோடு தெய்வமும் — முதலில் அறியப்படும் தெய்வமும் ஆகின்றாள். அன்பேவடிவான தாயானவள் நினைப்பதும் சொல்வதும் செய்வதும் பிள்ளைகளின் நன்மைகுறித்தனவேயாகும். அவள் தனக்கென ஓர் இன்பம் ஓர் வாழ்வு கனவிலும் வேண்டுவதில்லை. ஒருகால் தன்பிள்ளை தன்னை மறக்கினும், வெறுக்கினும் தான் அவற்றை ஒரு கணமாயினும் செய்தலின்றி அப்பிள்ளையின் நல்வாழ்வு பற்றி நினைப்பதிலும் செயற்படுவதிலுமே தன்வாழ்வைச் செலவிடுகின்றாள். இவ்விதமான ஒப்பற்ற தாய்தந்தையரது அன்பினை இறைவனிடத்திற் கண்ட சைவசமய குரவர்கள் இறைவனைக் குறிக்குமிடத்து ''அப்பன் நீ அம்

மை நீ'' என்றும் ''அம்மையேஅப்பா'' எனவும் சொல்லித் துதிக்கின்றனர்; காணப்பட்ட பொருளைக் கொண்டு காணப்படாத பொருளைக் காட்டி விளக்குகின்றனர்.

தமிழ்மக்கள் இல்லறவாழ்வில் அன்பு துணையாக மேன்மையெய்தியது போல வே ஆன்மீக வாழ்விலும் அந்த அன் பினையே முதன்மையான சாதனமாகக் கொண்டுஇறைமைத் தன்மையை எய் தினர். அங்ஙனம் அன்பினை — அன் பாகிய ஒன்றினையே அகத்திற் கொண்டு இறைவனை அடைய முற்பட்டவிடத் தும் ஒருபாவனை மாத்திரத்தாலன்றி பல பல பாவனையால் அன்பு செய்து இறைவனை அடையலாம் என்பதனைத் தமது வாழ்வின் மூலமும் அருள் வாக்கின் மூலமும் நமக்குப் புலப்ப டுத்தி யுள்ளனர்.

அன்பே சிவமாய் அமைந்தஅடியார் வரலாற்றிலே காரைக்காலம்மையார் காலத்தால் மிகமுற்பட்டவர். தந்தை யாகவும் தலைவனாகவும் தோழனாக வும் இறைவனைப் பாவித்து அன்பு செய்த சமயகுரவர்களுக்கும் முற்பட் டவர் அம்மையார். காரைக்காலம் மையாரது இயற்பெயர் புனிதவதி யார் என்பது. ஆயினும் அப்பெயரால் அவரையாரும் குறிப்பதில்லை. காரைக் காலம்மையார், பேயார் என்னும் பெயர்களாலேயே அவர் குறிக்கப்பட் டுள்ளார். பிள்ளைப்பேறே இல்லாத அவர் அம்மை (அன்னை) எனக்குறிக் கப்பட்டதும், அவ்வாறு போற்றப் பட்டதும் சிந்திக்கத்தக்கதோர் அற்பு தவிஷயம். அவரை அம்மையாரென அழைத்தவர் சிவபெருமானே யாவர். பேய்வடிவில் வருகின்ற அவரைப்பார் த்து இவர்யார் என உமையம்மை வினவ இறைவன் ''வருமிவள் நம்மைப் பேணும் அம்மை காண்'' என அறி முகப்படுத்தியருள, அதுமுதல் அவர் அம்மையார் எனப் போற்றப் பட்டாளானர்.

இறைவன் அவரை அறிமுகப்படுத் துமிடத்து ''இவள் நம் புதல்வி'' என வோ, ''இவள் நம்மீது பேரன்பினள்'' என்றோ வேறொரு முறையாற் குறிக் காது ''நம்மைப் பேணும் அம்மை'' எனத் தாய்மைப் பெயர் சூட்டிப் பாராட்டியது சிந்திக்கத்தக்கது. ஏனைய அன்பினர் போலக் காரைக் காலம்மையார் இறைவனைத் தலைவ னாகத் தம்மையடிமையாகவோ, இறை வனைத் தந்தையாகத் தம்மைப்புதல்வி யாகவோ, இறைவனைக் காதலனாகத் தம்மைக் காதலியாகவோ பாவித்த லின்றி தாயானவள் தன்பிள்ளையினி டத்து வைக்கும் அன்பினையே இறை வனிடத்துச் செலுத்தி இறைவனிடத் திலிருந்து யாதொன்றினையும் பிரதி பயனாக எதிர்பார்த்தலின்றி, இறைவ னுக்கு நன்மையானவற்றைச் செய் தல், சொல்லுதல் நினைத்தல் ஆகிய வற்றிலேயே தம் வாழ்வைச் செல விட்டவர்.

''இடர்களையா ரேனும் எமக்கிரங்காரேனும்
படருநெறி பணியாரேனும்-சுடருருவில்
என்பறுக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அன்பறுது என் நெஞ்சு அவர்க்கு

என்னும் அருமைப் பாடல் அவரது தாயன் பினைத் தெளிவுறக் காட்டுகின்றது. இறைவன் தமக்கு நன்மை செய்யாது விடுதலேயன்றித் தமக்கு வந்ததீமை யை அகற்றாது அலட்சியமாயிருப் பானாயினும் அதனை ஒரு பொருளாக மதியாது இறைவனிடத்துக் கொண்ட அன்பில் எள்ளளவேனும் குறைத லின்றி இருக்கும் அம்மையார், பிள்ளை யானது தன்தாய்க்கு நன்மை செய்

யாது விடுதலேயன்றி தாய்க்கு வந்த துன்பத்தை நீக்கவும் நினையாது அவளை அலட்சியப் படுத்திய விடத்தும் அப்பிள்ளையிடத்து வைத்த அன்பிற் சிறிதும் குறைவு படாத தாயை ஒத்துள்ளமை காணத்தக்கது.

மேலும், அம்மையாரிடத்தில் அமைந்த தாயன்பு இறைவனது நலன்களை நினைத்தல் பாடுதல், வளர்த்தல் ஆகியவற்றில் அவரைச் செலுத்தியதோடு அவரது ''நான்'' ''எனது'' என்னும் பற்றுக்களையும் அற்றுப் போகச் செய்து விட்டது. ஒரு பெண்ணிடத்தில் தாயன்பு முதிர முதிர அவளிடத்தில் முன்னிருந்த 'தான்' என்னும் நினைவு அகல்வது போல அம்மையாரும் அந்த அன்பு முதிர்ச்சியினாலே தாம் ஒரு மானிடப் பிறப்பினர், பெண்வடிவத்தினர் புனிதவதியார் என்னும் பெயரினர் என்னும் நினைப்புக்களெல்லாம் நீங்கப் பெற்றிருந்தனர். அதனாலேயே, உலகத்தாரால் இகழத்தக்கதும் அஞ்சத்தக்கதுமாகிய பேய்வடிவத்தினை இறைவனிடத்து வேண்டிப் பெறுவாராயினர். அத்துடன், 'நான்' என்னும் முனைப்பு அற்றமையாலேயே இறைவன்யாது வேண்டும் என்று வினவியருளியபோது முத்தியின்பத்தை வேண்டாது அன்பே வேண்டும் என்றார். ஞானத்தாலோ யோகத்தாலோ அடையற்பாலதாகிய பற்றற்ற நிலை- ''நான்'' ''எனது'' என்பன அற்றநிலை- அன்பினால் அடையலாம் என்பதும், புனிதவதியார் அன்பினால் அம்மையாராய் ஈற்றிற் சிவமாந்தன்மையை எய்தினார் என்பதும் நாம் நினைவு கூரத்தக்கன வாகும்.

---

உண்மையான அன்பை வெறும் வாய்ப் புகழ்ச்சியின் மூலம் மட்டும் காட்டிவிட முடியாது; செயலின் மூலமே அதைக் காட்ட முடியும்.

— காந்தியடிகள்

# "மனிதப் பிறவியும் வேண்டுவதே"

உலகின் கண் வாழும் உயிர்கள் யாவும் பல பிறவிகள் எடுத்தாலும் மனிதப் பிறவியிலேயே பிறவிகளினு லாய பயனை அனுபவிக்கின்றன என் பதை மாணிக்கவாசகரின் பின் வரும் பாடலின் மூலம் அறியலாம்.

''புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திருமாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவ னுசைப்
படவுநின் அலர்ந்த மெய்க்கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே''

என்பதிலிருந்து தேவ உலக மக்கள் விருப்பமும், ஆசையும் ஒருங்கே உந் தப் பெறவும், மக்கட் பிறப்பை மதித்து அருள் பாலிப்பவனே! உனது கருணையை என்னென்பது! என வாழ்த்துகின்ருர். மானிடராக இப் பூவுலகில் பிறந்து வாழ்ந்து காட்டிய அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர் முதலிய சமய குர வர்களும் ஏனைய சந்தான குரவர் களும் இறைவன் மனிதப்பிறவியை உய்விக்க எவ்விதம் காட்சி கொடுத்து அருள் பாலித்தார் என்பதை உலகுக் குணர்த்தினரன்றே?

இறைவன் ஆன்மாக்களது வடிவி லேயே அவர்களுக்கு உய்த்துணரும் நிலையில் நின்று அருள் செய்தார் என்பதை திருப்பெருந்துறையில் குரு வடிவாகக் குருந்தை மரநிழலில் இருந்து மாணிக்க வாசகரை ஆட் கொண்டமை.

''அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ?
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே''

என்பதிலிருந்து நாம் அறியக்கிடக் கின்றது. அடியார்களுக்கு எளியவனு கிய இறைவனிடம் நாம் படும் துன் பங்களை எடுத்துக் கூறி அவரது உத வியை நாடித் துன்பத்தைத் துடைக் கலாமென்னும் தளராத நோக்கங் கொண்டு

''.....................................
யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானல்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே'' என்று

இவ்வாறு மாணிக்க வாசகர் பாடி யதிலிருந்து பாரிலுள்ளோர் அறிய லாம்.

மனிதப்பிறவி எடுத்து வந்த திரு ஞான சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டி உய்வித்தமை வியக்கற்பா லதே. அதனாலன்றோ

''என் உள்ளங் கவர் கள்வன்'' என்று அன்பு கூர ஞானசம்பந்தர் பாடிப் பரவசமடைந்தார். இவ்வாறு தாயினும் நல்ல தலைவனைச் சிவபுரா ணத்தில் ''தாயிற் சிறந்த தயாவான தத்துவனே'' என்று புகழ்ந்து பாடிப் பணிந்துள்ளார். இறைவன் மனிதர்க ளையே உய்விக்க வந்தமையால் அவரை ''அப்பன் நீ, அம்மை நீ

அன்புடைய மாமனும் மாமியும்நீ" என்று அழகாக அன்பு மேலீட்டால் பாடினூர்கள்.

திருநாவுக்கரசர் சிதம்பரத்தில் எம் பெருமானது திருநடனக் காட்சியைக் கண்டு அங்கமங்கமாக இரசித்துப் பாடிப் பரவசமடைந்தமை பின் வரும் பாடலில் இருந்து அறியலாம்.

''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவழம் போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும்
காணப்பெற்ருல்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே''

இப்பாட்லிலே நாவுக்கரசர் நடராச ரின் திருநடனக் காட்சி காண்பதற்கு இந்த மானிடப் பிறவி கிடைத்தது. இப்பிறவியை மதிக்கிருர்களில்லை என்ற ஆவேசமிகுதியால் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானி லத்தே" என்று ஆணித்தரமாகக் கூறி யமை காணலாம்.

''கன்மனவீர் கழியுங் கருத்தே சொல்லிக்
காண்பதென்னே''

என்று வேறு குறை கூறி முறைப் பட்டுள்ளார். வீணுக இவ்வுலகத்தில் மாயையின் வலேயில் சிக்கிக் காலத் தைப் போக்க வேண்டாம். சிதம்பர தரிசனத்தை மேற் கொண்டு இறை வன் பாதம் அடையுங்கள். அவரு டன் இரண்டறக் கலந்து விடுங்கள் என்று கூறுகிருர்.

சுந்தரமூர்த்திநாயனுர் இவ்வுலக இன்பத்தை விரும்பியமையால் அவ ருக்கு இவ்வுலகப் பிறப்பை அளித் தார். பின் சுந்தரரின் வேண்டு கோட்படி அவரை அழைத்தார். அப்போ சுந்தரர் இறைவனை 'பித்தா' என்று அன்பினுல் பாடிப் பணிந்தமை ''பித்தாப் பிறை சூடி'' என்னும் முதலேயுடைய பதிகத்திலிருந்து அறி யலாம். இறைவனை அடையும் பக்தி மார்க்கம் அன்பு வழியே என்பதை உணர்ந்த சமய, சந்தான குரவர்கள் இறைவனைப் பலவாறு எண்ணத்தில் வைத்துப் பூசித்து வந்தமையைக் காண லாம்.

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்'' என்னும் பதிகத்தில் நாவுக்கரசர் இறைவனைக் காதலனு கப் பாடியமை காணலாம்.

மனிதப் பிறப்பை உய்விக்கும் வழியைக் காட்டி அருளுகின்ற தன்மை பொருந்திய இறைவன் பல வடிவ மெடுத்து அருள் பாலிப்பார். அவர் தம் துணைவியைப் பாகமாய்க் கொண்டு இப்பூவுலக வாழ்வை வாழ்ந்து காட்டியவர். எனவே வள் ளுவன் வகுத்த இல்வாழ்க்கை வாழ்ந்து இறைவனை அன்பு வழியா கப் பணிந்து அவனருள் பெறுவதற்கு இம்மானிடப்பிறவியைவிட வேறெரு வழியில்லை என்பதுறுதி.

செல்வி N. வேலுப்பிள்ளை
வர்த்தகம் இரண்டாம் வருடம்

# இசையில் இணைந்த இறைவன்

''பண்ணின் இசையாகி நின்ருய் போற்றி
பாலிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி''

நாத ஜோதியான இறைவனை இவ் விதம் பாடிப் பரவசமடைந்தார் நால்வரில் ஒருவரான நாவுக்கரசர். இந்தப் பாவில் பதிந்திருக்கும் பக்தியும், அது எடுத்துக் கூறும் தத்துவமும்தான் என்னே! பண்ணிசையாகப் பரிணமித்துள்ள இறைவன், அதனைப் பாடுவோரின் பாவங்களையும் அறுத்துத் தனது பதமலரையே நாம் அடையும் பாக்கியமும் தந்து விடுகிருன். இதற்கும் மேலாக நாம் அடைய வேண்டிய பெரும் பேறும் ஒன்று உண்டோ?

மெய்ஞ்ஞானப் பொருளான இறைவனை அடைவதற்கு பல முறைகள் கையாளப் படுகின்றன. இதிலெல்லாம் இனிமையானது இலகுவானது என்று நாம் நிச்சயமாகக் கூறக் கூடியது இசையால் இறைவனை அடையும் முறையாகும். இசையில் இணைந்து நிற்கும் இறைவனை, இசையுடன் பாடும் போது அந்த இசையில் ஒரு லயிப்பு ஏற்படுகின்றது. அதுவே இறைவனிடத்து இரண்டறக்கலக்கும் நிலைக்குக் காரணமாகின்றது. இசையுள் இறைவன் கட்டுண்டு கிடப்பதனுல் இசை முறை வழிபாடு எம்மை அறியாமலேயே எமக்கு இறையருளை ஈந்து விடுகின்றது.

பேரின்ப வீடு பெற்ற எமது சமயப் பெருந்தலைவர்கள் நால்வரும், அவர்களைத் தொடர்ந்து மேலும் பல பக்தர்களும் இறைவனுக்கு எண்ணற்ற தேவார திருமுறைப் பாக்களைப் பாடியே அவன் திருப்பாதம் அடைந்துள்ளனர் என்பது யாவரும் அறிந்த உண்மை. இதற்கும் மேலாக அப் பக்தர்கள் ''இறைவன் இசையில் இணைந்தவன்' என்பதைப் பல சந்தர்ப்பங்களில் தமது பாடல் மூலமே வெளிப் படுத்தி யுள்ளனர்.

''மாதர்ப் பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும் பாடி......''

என்று தொடங்கி

''கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்''

என்று பாடுகிருர் அப்பர் சுவாமிகள். இதிலே இறைவனைப் பாமாலை பாடியதனுல், காணக்கிடைக்காத அவன் திருப்பாதத்தைக் கண்டு விட்டதாகப் பாடுகிருர். இசையில் அல்லவா இறைவன் வாசம் செய்கிருன்.

'பண்ணும் பதமேழும் பலவோசைத்
தமிழவையும்—...''

என்ற தேவாரத்தின் முடிவிலே
''விண்ணும் முழுதாளுன் இடம் வீழிம் மிழலையே''
என்றுபாடிய திருஞானசம்பந்தர், பண்ணுக இருக்கும் இறைவனின் இடம் வீழிம்மிழலை என்று காட்டியிருக்கிருர்.

'பக்தராய்ப் பணிவார்கள் அடியார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்...''

இப்படியாக சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுவதன் அர்த்த மென்ன? பரமன் பணி செய்யும் பக்தருக்கு மட்டுமல்ல அவனின் புகழ்பாடும் அடியவர்க்குமே தான் அடிமை என்று காட்டுவதன் மூலம் இறைவனைப் பாடுபவர்களும் அவன் இணையடி பெற்று விடுவார்கள் என்பதைக் காட்டுகின்ருர்.

''பண்ணுளீராய்ப் பாட்டு மானீர்
பக்தர் சித்தம் பரவிக் கொண்டீர்...''

என்று சுந்தரர் பாடும்போது பண்ணும் பாட்டுமாக இருக்கும் இறைவன் அந்த நிலையிலேயே பக்தரின் சித்தத்திலும் பரவி விடுகிறான் என்று விளக்குகின்றார். பண் இசை வடிவான இறைவன் அந்தநிலையில் பக்தரின் சித்தம் பரவுவதில் வியப்பேதுமில்லை. திருவாசகத் தேன் அளித்த மணிவாசகர்,

''பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை ..''

என்று பாடும் போது, எதனைக் கூறுகிறார்? கீதங்கள் பாடுவதாலும், அதனுடன் ஆடுவதாலுமே, இசையில் இணைந்துவிட்ட இறைவனையும் கண்டதாக இருக்குமேயல்லாது, வேறு வகையில் இறைவனைக் கண்டவர்களை நாம் கேள்விப்படவில்லை என்று கூறுகிறார். இது இசையில் இறைவன் இருப்பதையும், இசையால் அவனை அடைவதையும் காட்டுகின்றதல்லவா.

''நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர
நாற்கவியும் பாடும்பணியில் பணித்தருள்வாய்
அம்மா!''

என்று சகல கலா வல்லியாகிய சரஸ்வதியிடம் குமரகுருபர சுவாமிகள் மனமுருகிக் கேட்கிறார். நேரே பேரின்ப நிலை கேட்காது, அதற்கு வழிகாட்டுவதான பாடும் பணியையே பக்தியாகக் கேட்கிறார். பாட்டினிலே இறைவன் பரவசம் அடைந்து விடுவதை இது விளக்குகின்றது.

''ஆடும் பரிவேல் அணிசேவலெனப்
பாடும் பணியே பணியாயருள்வாய்...''

என்று குமரன் முருகனைப் பாடிப் பணிந்த பக்தர் அருணகிரிநாதர் கேட்கிறார். இசையாக நிற்கும் இறைவனை, இசையாலேயே அடைந்து விட்டார் இந்த மெய்யன்பர்.

''நாத ஒளியே நற்றுண சீலா
நாரியிருவோரைப் புணர் வேலா
சோதி சிவஞானக் குமரேசா
தோமில் கதிர் காமப் பெருமாளே''

என்றும்,

''நாதவிந்து கலாதி நமோ நம!''

என்றும் வரும் திருப்புகழ்களில் எம்மிறைவன் நாத ரூபனாக இருப்பது உணர்த்தப்படுகின்றது.

''பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்றில் ஆடுகின்ற
அழகனே...''

இப்படி தாயுமான சுவாமிகள் இறைவனை விளிக்கின்றார். பாடுகின்றவர்கள் தேடுகின்ற செல்வம் இறைவன் என்று இவர் குறிப்பிடும் போது இறைவன் பாட்டிலே பொதிந்திருப்பவன் என்பதையும் பாட்டினால் பெறக்கூடியவன் என்பதையும் காட்டி விட்டார்.

''அருட்சோதி தெய்வம் எனை ஆண்டுகொண்ட
தெய்வம்''

என்று அழகாகப் பாடிய இராமலிங்க சுவாமிகள்,

'தெருப்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும்
தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே
தெய்வம்''

என்று முடிக்கிறார். இதன் விந்தை என்ன? சிற்சபையில் காட்சிதரும் சிவ

பிரான் தனது தெருப்பாடலை விரும்பியதனுல் தன்னையும் சிவமயமாக்கி விடுவாராம் என்று இப்பக்தர் பாடுகிருர். ஆம்! இசையினுலே இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுவதைத்தான் இவர் குறிப்பிட்டு இப்படிப் பாடியுள்ளார்.

வீணைக் கொடியுடைய வேந்தன் இராவணன் அரக்கர் கோனுக இருந்த போதும் இசைப்பிரியனுகையினுல் அந்த இசையினுலே இசைவடிவான இறைவனையே கொள்ளை கொண்டு பல அருளையும் பெற்றிருப்பது நாம் மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். இசையாக நிற்கும் இறைவன் அந்த இசையிலே மயங்குவதும் உண்டு.

> ''நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசனும்
> பாடிய நற்றமிழ் மாலை......''

என்று பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

> ''கல்லியல் மனத்தைக் கசிவித்துக்
> கழலடி காட்டி என்களைகளை அறுக்கும்
> வல்லியல் வானவர் வணங்க நின்றானை
> வலிவலந்தனில் வந்துகண்டேனே''

என்று முடிக்கின்ருர். இதிலே இறைவனைக் கண்ட ஆனந்தத்துக்குக் காரணமானது ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் பாடிய பாமாலைகளே என்றும், அவற்றினுல் தனது கல்மனம் கசிந்து களைகளும் அறுபட்டு விட்டன என்றும் பாடுகிருர். என்னே இசையின் வலிமை! அந்தவலிமை எதனுல் வந்தது? அதனுள் இருக்கும் இறையருளினுலேயே.

நாத சொரூபனுன இறைவன் இசையில் இருப்பவன் என்பதை இப்படியெல்லாம், அவன் பதம் அடைந்த பக்தர்கள் விட்டுச் சென்ற பாக்களின் மூலமாக அறிகிருேம். பண்ணுடன் பாடும்போது, அதனுடன் இணைந்திருக்கும் இறைவனும் எமது மனதில் பதிந்து விடுகிருன். இசையில் லயித்து விடும் நாம் அதனூடு நிற்கும் இறைவனிலே லயித்து விடுகிருேம். இது தான் பேரானந்த நிலை. ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து நிற்கும் பேரின்பநிலை. இசையில் மயங்கி, இசையாகவே தோன்றி இறைவன் எம்மை ஆட்கொள்ளும் இப் பெரும்பேறு இசையினுற்ருன் பெறக் கூடியது. எனவே இறைவன் புகழை இசையுடன் பாடி அவனது இசைமயமான இணையடிகளை அடைவோமாக.

செல்வி கோணேஸ்வரி பொன்னம்பலம்
விஞ்ஞானம் 2-ம் வருடம்

---

# சாபம் பலிக்கின்றது

"...... அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது......" 84.00,000 எனும் எண்ணிச்கை யுடையதாகச சொல்லப்படும் யோனி பேதங்களுக்கு ளெல்லாம் மேலானது மானிடப் பிறவி என்பது. மானிடர்க்கென விஷேடமாகவுள்ள பகுத்தறிவென்னும் ஆருவது அறிவினைக் கொண்டு யாவரும் நன்குணரக் கூடிய ஒன்ருகும். இங்ஙனம் மேலானதாகக் கருதப்படும் மானிடரின் உளத்திற் தோன்றும் அபிலாசைகளோ அனந்தம். ஆனல் அனுபவிக்கும் அபிலாசைகளோ அற்பம். அதிலும் யாவரும் ஒரே விதமான போகங்களை அனுபவிப்பதுமில்லை. ஒரே அளவாக அனுபவிப்பதுமில்லை. ஒரே காலத்தில் அனுபவிப்பதுமில்லை. ஏன்? எமது சைவசமய நூல்கள் நன்கு விடை பகருகின்றன.

நாம் இவ்வுலகின்கண் அனுபவிக்கும் இன்ப துன்பங்களும் அவற்றை அனுபவிப்பதற்குத வியாக அமையும் இடம் பொருள் ஏவல்களும் நாம் ஒவ்வொருவரும் பூர்வ ஜென்மங்களிற் செய்து கொண்ட நன்மை தீமைகளின் பயனுகப் பெறப்படுவதே என்பது எமது சைவ சமயத்தின் அடிப்படையான கொள்கையாகும். இக்கொள்கையானது அநேக சம்பவங்களாலும் கதைகளாலும், சமயாசாரியர்கள் வரலாறுகளாலும் நீதிப்பாக்களாலும் நன்கு உணர்த்தப்பட்டு நிலைநாட்டப்பட்டுள்ளது. குறிப்பாகச் சித்திர புத்திரநாயனுர் கதை, அதில் இடம் பெறும் அமராவதி கதை, சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், பிள்ளையார் புராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்ற நூல்களில் நன்கு வலியுறுத்தப்பட்டிருப்பதை அவற்றைக் கற்போர் உணராமலிருக்க முடியாது. இன்னும் 64 நாயன்மார்கள் சரித்திரம், 28 ஆகமம், 18 புராணம், 6 அங்கம், 4 வேதம் ஆகிய பொக்கிசங்கள் நிறைய எடுத்துணர்த்துகின்றன. மேலும்,

"தாம் தாமுன் செய்தவினை தாமே
யனுபவிப்பர்"

"செய்திவினையிருக்கத் தெய்வத்தை
நொந்தக்கால் எய்தவருமோ"

"தவமும் தவமுடையாருக்காகும்"

எனும் சிறு கூற்றுக்கள் அடிக்கடி வாழ்வில் அடிபடுகின்றன.

இவற்றை எல்லாம் ஆராய்ந்தறியும் சிலர் நாம் அனுபவிப்பது மாத்திரமன்றி அன்ருடு செய்யும் வினைகளும் முன்செய்த கன்மங்களின் பாற்பட்டதே எனத் தவருக எண்ணுகின்றனர். மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் குருமுகூர்த்தத்துடன் எழுந்தருளி வந்து திருப்பெருந்துறையில் திருவடி தீட்சை செய்தபோது உபதேசித்ததாவது.

" களிம்பு தோய்ந்த செம்பென வுனை
மருவுங்கருமை
கூர் மலங் கண்டது கலக்கும்
பளிங்கு போன்ற துன் தன்மை அம்மலத்தின்
பற்றினுலுடல் பல வெடுத்துழன்ருய்
வளங்குலாம் புவனந்தொறும் செய்யுமுன்
வல்வினைப்பயன் வருமுறை நெறியே
அளந்து நாம் தர நுகர்ந்தும் மேல்நுகர்வு
மாக்கியே திரிந்தனை மனவழுக்கால்

இதிலிருந்துணருவதாவது

செம்புள்ள ஞான்றே அதனேடு களிம்பும் கலந்திருப்பது போன்று எம்முடன் ஆணவம் எனும் மலம் கலந்திருக்கின்றது. அதனல் எமது தன்மையானது கண்டவற்றை நேரே எடுத்துப் பிரதி விம்பிக்கும் கண்ணடியின் தன்மை போன்றது, அதாவது காணும், கேட்கும், மணக்கும், சுவைக்கும், உணரும் எல்லாவற்றிலும் ஆசை உண்டாகின்றது. இதனல் நான், எனது எனும் அகங்கார மமகாரங்களுண்டாக அதனல் அழுக்காறு, அவா, வெகுழி எனும் முக்குற்றங்கட்கு முள்ளாகின்ரேம், இதனல் கொலை, களவு, கள், காமம், குருநிந்தையாகிய ஐந்து மாபாதகங்களைச் செய்கின்ரேம். இவற்ருல் பல பிறவிகள் உண்டாகின்றன. ஒவ்வொரு பிறவியிலும் இவ்வளவும் அனுபவிக்கக்கடவதென இறைவனல் அளவை செய்து வழங்கப்படுகின்றது. ஆனல் நாமோ அவற்றை நன்கு அனுபவிப்பதோடு நிற்பதில்லை "மேல்

நுகர்வு மாக்கியே திரிகின்றோம்.'" அதாவது மேலும் அனுபவிப்பதற்கான கன்மங்களைச் செய்கின்றோம். ஆகவே நாம் வினைகளை அனுபவிப்பதுடன் விடுவதில்லை. மேலும் மேலும் புதிய வினைகளையும் இயற்றுகின்றோம்.

இது எல்லாம் புராணக் கதை என இவ்விஞ்ஞானவுலகின்கண் நினைக்கலாம். வாதாடலாம். பரவாயில்லை என ஒருபுறம் விட்டுப் பிரத்தியட்சமாக இவ்வுலக போகங்களை ஆராய்வாம். நாம் ஒன்றை நினைக்க அதன் விளைவு இன்னொன்றாகின்றது. ஒன்றைப்பெறவும் அனுபவிக்கவும் பலமுறை முயல்கின்றோம். இறுதியில் ஏமாற்றமும் கிடைக்கின்றது. இறுதியில் எம்மை அறியாமலே எல்லாம் 'தலைவிதி' 'என்பலன் அப்படியாயிற்று' 'எல்லாம் அவன் செயல்' என எமது நாவே கூறிவிடுகின்றது. இன்னும் எத்தனையோ எதிர் பாராத சம்பவங்கள் நடைபெறுகின்றன. காலையில் சந்தைக்குப் போகின்றவர் வீடு திரும்பமுன் ஆபத்துக்குள்ளாகின்றார். ஏன்? பாலை தீவிற்குப் படகில் போனவர்கள் கடலில் அமிழ்ந்தினார்கள் அல்லவா? இவர்களெல்லாம் என்னென்ன திட்டங்களுடன் சென்றார்கள். எல்லாம் என்னவாயிற்று? இன்னும் ஒருவர் குற்றம் செய்கின்றார். இன்னொருவர் சிறைத்தண்டனை அனுபவிக்கின்றார். இப்படி எவ்வளவோ ஆராயலாம். இவற்றிலிருந்து நாம் முற் பிறவிகளிற் செய்த வினைகளின் பாற்பட்டன வெனபதும், புதிதாக வினைகளைச் செய்கின்றோம் என்பதும் நன்கு புலனாகின்றன.

வினைகளோவெனிற் சடம். அவை அறியவும் கூடவும் மாட்டா. அப்படியாயின் ஒருவர் செய்யும் வினை எவ்வாறு பின் அனுபவிக்க வேண்டியதாக வருகின்றது?

வினைகளைப் புரிபவர்களோ உய்த்தறியவும் வைத்திருக்கவும் விடவும் கூடியவர்கள். உள ஆராய்வுகளின் படி ஒருவர் தமது கவனத்திற் கெடுத்துக் கொள்ளும் விடயங்கள் யாவும் இசைத்தட்டில் பாட்டுப் பதிவது போல் மூளையிற் பதிகின்றன வென்றும், வேண்டும் போது அவற்றைத் திருப்பி எடுக்க முடியும் என்றும் அறிகின்றோம். ஒருவர் தாம் செய்யும் நன்மைகளாற் சந்தோஷப்படுகின்றார். தீமைகளை மேற்கொள்பவர்களும் அவ்வாறு துன்பத்துக் கிடையாகின்றனர். நன்மைகளிலும் பார்க்கத் தீமைகள் கூடுதலாகத் தாக்குகின்றன. இத்தாக்கங்களின் பேறாக அவற்றை அனுபவிப்பதற் கேற்றவாறு. மீளவும் உடல் உண்டாகின்றது. அதுவே மறுபிறவியாகும். இவ்வுண்மைகளும் விஞ்ஞான ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நாள் அதிகதூரத்தில்லை.

நாம் அனுபவிக்கும் வினைகளின் பிரதிபலிப்பாகிய சுகபோகங்கள் முன்செய்த தீவினைகளால் மட்டும் எம்மைச் சார்வதில்லை. நீதியாய் நடத்தல், நன்மை செய்தல், செவ்வனே தன் தன் கடமைகளைச் செய்தல் ஆகிய சிறப்பியல்புகளை யுடையவர்கள் மற்றவர்களிடமிருந்து பெறும் வாழ்த்துக்களாலும் ஆசீர்வதிப்புக்களாலும் வந்து சாருகின்றன. 'எல்லாம் நலமாகட்டும்' 'எல்லாம் வெற்றியாகுக' 'சகலபேறுகளும் உண்டாகுக' 'சீரும் சிறப்பும் பெறுவாயாக' 'நீடுழி வாழ்க' போன்ற இன்னோரன்ன வாழ்த்துக்களும் ஆசிகளும் இன்முகத்துடன் மனம் கனிந்து நல்கப்படுவதால் இவற்றின் சுகபோக அனுபவங்கள் மறுபிறவியின் கண் வந்து சேருகின்றன. நல்ல புத்திரப்பேறு, தொழிற்பேறு, கல்விப்பேறு, உடல் அழகு, இனிய குரல் திடீர் அதிஷ்டம், நல்ல குடும்பம் இன்னோரன்ன யாவும் முற்பிறப்பில் பெரியோர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட ஆசிகளினதும், வாழ்த்துக்களினதும் பிரதிபலிப்பேயாகும்.

வாழ்த்துக்களைப் போலவே ஒருவர் மனம் எரிந்து வருந்திக்கூறும் தீய வார்த்தைகளும் மறுபிறவியில் அனுபவிக்க வேண்டிய வினைகளாகின்றன. தகாதசெயல்களினாலும் அக்கிரமங்களாலும் துன்புறுத்தப்பட்டவர்கள் அத்துன்பத்தைச் செய்தவர்களை விளித்து 'நாசமாய்போவாய்' 'துலைந்துபோவாய்' 'கண்கெடுவாய்' 'தாலிபறுப்பாய்' போன்ற விரும்பத்தகாதவார்த்தைகளினால் திட்டுகின்றார்கள். 'காகம் திட்டி

மாடு சாகமா' என எண்ணிக் கொண்டும், அதனைப் பொருட்படுத்தாமலும் தீமை யிழைத்தவர்கள் செல்கின்றார்கள். அவர்கள் இறந்த பின் மறு பிறப்பில் முன் பெற்ற திட்டுக்களால் ஏற்பட்ட சாபங்கள் அனுபவிக்க வேண்டிய வினைகளாக வந்து பிரதிபலிக்கின்றன. இப் பிரதிபலிப்பால் அற்ப ஆயுள், குடும்ப இழப்பு, புத்திர விருத்தியின்மை, விபத்துக்கள், அங்க பங்கம், வறுமை நோய் போன்ற துன்பத்துக்குரிய அனுபவங்களை பெறுகின்றார்கள். இந்திரன் உடல் முழுவதும் 1000 யோனிகளைப் பெற்றதும், அகலிகை கல்லானதும், சாபங்களின் பிரதிபலிப்பே. தான் பெற்ற சாபத்துக்குப் பயந்தல்லவா சீதையைத் தீண்டாதிருந்தான் இராவணன். கைலாய மலையைப் பெயர்த்துத் திக்குயானைகளை வென்று பல வரங்களையும் பெற்ற இராவணன் கூடத் "தலை வெடித்துச் சாவாய்" என ஒரு பெண்ணிட்ட சாபத்துக்குப் பயந்து பின்நின்றானென்றால் சாபங்களின் வலிமைதான் என்னே!

மனிதர்கள் மாத்திரம் சாபமிடுவது அல்ல பறவைகள், மிருகங்கள், பிராணிகள் கூடச் சாபமிடும் சக்தி படைத்தன. பறவைகள் விலங்கினங்கள் யாவும் மக்களால் வருத்தப்படும் போதும் கொலைசெய்யப் படும் போதும் வருந்தித் துயருறுகின்றன. இத்துயர் சாபமாக மாறி அக்கொலை துன்புறுத்தல்களைச் செய்தவர்களைத் தொடர்ந்து. அவர்களின் மறுபிறப்பில் வருத்துகின்றது. இது பற்றியே வள்ளுவரும்

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" என்றார்

இதிலிருந்து உயிரினங்கள் எல்லாம் எம்மைத் தொழுது வாழ்த்த வேண்டும், அவ்வாழ்த்தினால் நாம் நன்மையடையலாம் என்பது புலனாகின்றதல்லவா? வாழ்த்துப் பிரதிபலிக்குமாயின் அவையிடும் சாபங்களும் எம்மேற் பிரதிபலிக்குமென்பது சொல்லாமலேவிளங்கும். மேலும்,

"அம்மாவெனவலற ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மானுடரெல்லாம் இன்பும் றிருக்கின்றார்'
அம்மா வெனும் சத்தம் கேட்டகன்ற மானிடர்க்கும்
பொய்மா நரகமெனறால் புசித்தவர்க்கென் சொல்வதே"

என அழகாகக் கூறியிருப்பதை நாம் உய்த்துணரின், கொலையினால் ஏற்படும் சாபம் பிரதிபலித்து மறு பிறவியில் வருத்தும் என்பது நமக்கு புலனாகலாம்.

இனிப் பிராணிகள் துன்புறுத்தப் படுதலையும் அதனால் எம்மேற் பிரதிபலிக்கும் சாப வினைகளையும் சிறிது ஆராய்வாம். அங்கபங்கம், சரிரக்குறைவு தொழுநோய் முதலானவற்றையுடைய மானிடர்களிடும் சாபம் எவ்வளவு வலியுடையதோ, பெரியோர்களிடும் வாழ்த்துக்களும் ஆசிகளும் எவ்வளவு சக்தியுடையனவோ அவற்றிலும் பன்மடங்கு சக்திவாய்ந்தவை ஓரறிவினூற் குறைந்த ஐயறிவுடைய பிராணிகளிடும் சாபங்கள். பின்வரும் உதாரணங்களும் உலக அனுபவங்களும் அதனை எமக்கு நன்குணர்த்த நாம் அறிவோமாக.

நெல்லுண்ண வயலில் வரும் கிளிகளைச் சுட்டு வருத்திக் கொலை செய்கின்றார்கள் சிலர். இறக்கும் தறுவாயிற் துன்புற்று வருந்துகின்றன அக்கிளிகள். இத்துயர் சாபமாகிப் பலிக்கின்றது. இதனால் அந் நிலத்தில் அதன்பின் விளைவுகுன்றுகின்றது. எவ்வளவுமுயற்சித்தும் முன்போல் விளைவு பெறமுடியாமல் இருக்கின்றது. இவ்வுண்மையைக் கமக்காரர்கள் அறிவார்கள். இதனாலன்றோ கிளிகள் எவ்வளவு நட்டம் விளைத்தபோதும் அவற்றை வருத்தவோ கொல்லவோ அதிகமான கமக்காரர்கள் முற்படுவதில்லை.

கல்லால் எறிவாங்கிய நாய் நோவுற்று வருந்த அது சாபமாகி எறிந்தவரைத் தொடர்ந்து அவரின் மறு பிறப்பில் அவர் நடந்து போகும் போது எதிர் பாராத விதத்தில் பனம் பழம் விழுதல், தேங்காய் விழுதல், மரம் முறிந்து விழுதல் போன்றன அவர் விட்ட கல்லெறிக்குச் சமானமாகக் கிடைக்க அதனால் நோவுற்று அங்கபங்கமடைந்து வருந்துகின்றார். அவ்வாறே ஆமையை உண்பவர்கள் அதனைபிடித்து உயிருடன் நெருப்பிலிட்டுச் சுடுகிறார்கள், ஆமையிட்ட சாபத்தால் மறுபிறப்பில் தமக்குத்தாமே தீமூட்டுகிறார்கள். முற்பிறவியில் தண்ணீர் குடிக்கவரும் விலங்குகள் பறவைகளைக் கொன்றவர்களை அவ்விலங்குகள் இட்ட சாபம் தொடரப் பெற்றதால இப்பிறவியில் நீர் நிலைகளில் விழுந்து தற்கொலை செய்கின்றார்கள். ஆணும் பெண்

ணுமாக வந்த பிராணிகளைக் கொன்ற சாபம் தொடரப் பட்டவர்கள் இப்பிறவியில் காதலித்து அக்காதல் நிறைவேற முன் தற்கொலைசெய்து கொள்கின்றார்கள். தூண்டிலில் அகப்பட்ட மீன்கள் செய்த சாபத்தால் அதனைப்பெற்றவர்கள் மறுபிறவியில் எவருடைய தூண்டுதலுமின்றித் தாமே செடிற்காவடி, தூக்குக்காவடி, முள்மிதிதடிக் காவடி போன்றவற்றை எடுக்கத் தூண்டப்படுகிறார்கள், மெய்யெல்லாம் வேலாற் குத்துகின்றார்கள். இன்னும் சிலர் உண்ணும போது உணவு விக்கி இறக்கின்றார்கள். ஆடுமாடுகளைக் கட்டி நேரத்துக்குத் தண்ணீர் கொடாது விட அவையிடும் சாபத்தால் வைத்திய சாலையில் குடிக்க நீர் கொடுக்கக்கூடாதென டாக்டர் கூறவும் தாகத்தால் வருந்தி தண்ணீர் கொண்டுவா என்று கதறுகிறார்கள். கூட்டிலிட்ட கிளி வீட்டில் வைக்கப்பட்டு உணவூட்டப் பட்டபோதும் வெளியேற முடியாது வருந்திச் சாபமிடுகின்றது. இதனால் கூட்டிலடைத்தவர் மறுபிறப்பில் தவறு செய்யாமலே சிறையில் வைக்கப்படு கின்றார். பட்சிகளின் கூட்டைப் பிரித்தவர்களையும் தேன்கூட்டை உடைத்தவர்களையும் அச்சாபம் தொடர மறுபிறப்பில் குடியிருக்கும் வீடுவாசல்கள் நெருப்பாலும் நீராலும் அழிவுபட குந்தியிருக்கக் குடிசையின்றித் தவிக்கின்றார்கள். வெட்டியும் குத்தியும் கொலை செய்த சாபங்கள் தொடரப் பெற்றவர்கள் மறுபிறவியில் இயந்திரங்களில் வேலைசெய்யும் போது நசுக்குண்டும் வெட்டப்பட்டும் கால்கை ஒடிந்தும் விபத்துக்களுக்குள்ளாகியும் வருந்தியிறக்கின்றார்கள்.

கொடிய விடத்தையுடைய நாகபாம்புகள் கூடச் சாபமிடுகின்றன. இவை தம்மை அடித்து வருத்துபவர்களையும் கொல்பவர்களையும் சபிக்கும் ஆற்றலுடையவை. இவைகள் பெரும்பாலும் புத்திரசாபத்தைக் கொடுக்கின்றனவெனச் சோதிட நூல்கள் எடுத்தியம்புகின்றன. நீண்ட காலம் பிள்ளைப்பேறில்லாத குடும்பங்களில் நாகசாப சாந்தி செய்யப்பட்டபின் புத்திரப்பேறு கிடைத்திருப்பதாக நாம் கேள்விப்படுகின்றோம். ஆனால் சில குடும்பங்களில் அச்சாந்தி செய்யப்பட்ட பின்னரும் புத்திரப் பேறு கிடைப்பதில்லை, காரணம் பிள்ளையில்லாதவர்கள் யாவரும் நாகசாபத்தால் என எண்ணுகின்றார்கள். இத்தவறினாலேயே நாகசாப நம்பிக்கையும் சாந்தியின் நம்பிக்கையும் கெடுகின்றது. புத்திரசாபம் பகைவர்களாலும், அன்னையாலும், நாகசாபத்தாலும், இன்னும் பல காரணங்களாலும் ஏற்படலாம். ஆகவே பிள்ளையில்லாதவர்கள் தமக்குள்ள குறையை நன்குணரவேண்டும். நாகசாபமும் பலதரமுடையது. சில சாபங்களுக்குப் பிராயச்சித்தமேயில்லை. இவற்றைச் சோதிட நூல்கள் அவரவர்கள் பிறக்கும் நேரத்தில் கோள்கள் நிற்கும் நிலையைக் கொண்டு அறியக் கூடியவாறு வகுத்தெடுத்துக் கூறுகின்றன. அவரவர்கள சாதகத்தில் 5ம் வீட்டுக் கதிபதியுடன் இராகு அல்லது கேது கூடியிருக்கப்பெறின் அவர்கள் நாகசாபத்தையுடையவர்களாகின்றனர். ஆனால் மேற்படி கிரகங்கள் 6, 8, 12ல் இருக்கப் பெற்றும் வேறும் சனி, செவ்வாய், போன்ற கிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றால் அவர்களுக்குடைய நாகசாபம் வலிமை கூடியது. அதனை எவ்வித சாந்திகளாலும் நீக்க முடியாது. ஏனைய நாக சாபங்களே சாந்தியாற் பரிகாரம் ஆகக் கூடியவை. இனி 6, 8, 12ம் இடங்கள் கிரகநிலைச்சக்கரத்தின் படி எடுப்பதும் பொருந்தாது. அவற்றைத் தீர்மானிக்கச் சோதிடகணிதம் கற்பவர்களுக்கே முடியும். அது சோதிடத்திற் பாவக கணிதத்தாற் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதனை அறியாத காரணத்தினாலும் சாபம் தீர்மானிப்பதில் தவறுகள் உண்டாகின்றன.

இப்பேற்பட்ட சாபங்களும் வாழ்த்துக்களும் வினைகளின் பலன்களும் உடனுக்குடன் தண்டனை கிடைப்பது போல் அவ்வப் பிறவிகளில் ஏன் கிடைக்கக்கூடாது என வினவலாம். அவ்வப் பிறவிகளில் நாம் அனுபவிக்க வேண்டிய கன்மங்கள் வரையறுக்கப்பட்டனவாயும், அவற்றிற்கேற்ற உடல்நிலையை யுடையவர்களாகவும் பிறவியுண்டாவதால் அவ்வப் பிறவிகளில் உண்டாகும் சாபகன்ம வாழ்த்துக்கள் அனுபவிக்க முடியாதாகின்றன, இப் பேதங்களை யெல்லாம் உய்த்துணர விக்கினேஸ்வரப் பெருமான் அருளுய்ப்பாராக.

**மு. காசித்தம்பி**
*கணிதம் விடுகை வருடம்.*

# பொறியின்றி ஒன்றும் புணராத புந்தி

பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள்

"மனிதன் சந்திரனில் காலடி வைத்துவிட்டான். இனி சமயத்தில் நம்பிக்கை வைக்க வேண்டியதில்லை" என்று ஒரு அன்பர் கூறினர். அவருடைய கூற்று புதிதானதன்று. விஞ்ஞானத்தின் சாதனைகள் மனிதனைப் பிரமிப்படையச் செய்யும் போதெல்லாம், இறைவனுடைய நம்பிக்கையின் வலிமை குன்றச்கூடிய மொழிகளை நம் காதுகளில் கேட்கிறோம். இது பொதுவான ஒரு மனப்போக்காக இருந்துவந்த போதிலும், சிறப்பாக, மாணவ உலகத்தை மிகவும் வேகமாகப் பற்றிக் கொள்கின்றது.

கல்வியுலகிலே முன்னென்று மிராத ஒரு மாற்றம் நிகழ்கின்றது. ஒரு காலத்திலே, மொழி, இலக்கியம், தத்துவம், சமயம் என்பனவற்றைக் கற்பதற்குப் போதிய தூண்டுதல்கள் இருந்து வந்தன. ஆனல் இன்று அவற்றை விரும்பிக்கற்பதற்கு அவற்றிற்காணும் இன்பமே தூண்டுதலாக இருக்கின்றதேயொழிய வேறு தூண்டுதல்கள் அருகிவிட்டன. இருபது வருடங்களுக்கு முன்னே பாடங்களைக் கௌரவ முதன்மைப்படி ஒழுங்கு செய்தால் உண்டாகும் வரிசைக்கிரமம் வேறு, இன்று அவ்வாறு செய்தால் உண்டாகும் வரிசைக்கிரமம் வேறு. பௌதிகம், இரசாயனம், உயிரியல், கணிதம் என்னும் பாடங்கள் முன்பென்று மிராதபடி முதன்மையிடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு தனிக் கௌரவம் ஏற்பட்டிருக்கின்றது. இப்பாடங்களை விசேட கவனத்துடன் கற்பிக்கும் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் உயர்ந்த இடம் இருக்கின்றது. அவற்றில் சேர்வதற்கு மாணவர்கள் முண்டியடித்துக் கொண்டு செல்கிறுர்கள். இப்படிப்பட்ட ஒரு கௌரவம் விஞ்ஞான பாடங்களுக்கு ஏன் ஏற்பட்டது என்று ஆராய்வது ஒரு விடயம். அப்படியான ஒரு கௌரவம் இப்பாடங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது உண்மைதான் என்று ஏற்றுக் கொள்வது இன்னெரு விடயம்.

கல்வி நிலையங்களிலே கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் இந்த நிலை நன்ருக விளங்கும். பலருக்கு இந்த நிலை கசப்பாக இருந்தபோதும் உண்மை நிலையை மறைக்க முடியாது. இலக்கியம், மொழி, சமயம் இவற்றில் சிறப்பாற்றல் பெற்று மேதைகளாக விளங்கக் கூடிய மாணவர்கள் கூட, விஞ்ஞானப்படிப்பில் சிறப்பாற்றல் பெருதிருந்தும் சமூகத்தின் நெருக்கத்தால் விஞ்ஞானத்துறையில் முன்னேற முயன்றுவிரத்தி அடைகிறுர்கள்.

உலோகாயதத்தை அடிப்படைக் கொள்கையாகக் கொண்ட "பொதுவுடைமை" (Communism) என்ற கோட்பாடு தீவிரமாகப் பரவி வருகிறது. வேலையற்ற நிலை, பொருளாதாரக் குறைவு, வறுமை என்பன இந்தப் பொதுவுடைமை வளருவதற்கு ஒரு வளமான பண்ணையாகின்றது. கும

ரப் பருவமடைகின்ற மாணவர்கள் இந்தக் கோட்பாட்டுப் புயலில் மிகச் சுலபமாகச் சிக்கிக்கொள்கிறார்கள். இறைவனின் உண்மையைக் கூறும் பிரசங்கங்களைக் காட்டிலும், இறையில்லை என்று கூறும் வாதங்கள் உண்மையற்றனவாயினும் வாலிப உள்ளங்களை முறுக்கேற்றக் கூடிய உற்சாக முடையனவாய் இருக்கின்றன.

சமயம், இலக்கியம், மொழி இவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, விஞ்ஞான ஆசிரியர்களுக்கில்லாத சில தடைகள் உள்ளன. ஒரு பொருளோடு இன்னொரு பொருளைச் சேர்த்துச் சூடாக்கினால் அது வெடிக்கும் என்று விஞ்ஞான ஆசிரியர் கற்பிக்கிறார். அதனை அவர் பரிசோதனைச் சாலையில் செய்து காட்டுகிறார். மாணவனும் செய்து பார்க்கின்றான். அது அப்படியே நிகழ்கிறது. அதுபோலவே அமீபாவின் தோற்றத்தை உருப்பெருக்கிக் கண்ணாடியின் கீழ் பார்க்கிறான். சூரிய கதிரைப்பிரித்தால் ஏழு நிறங்களாவதைப் பார்க்கிறான். ஆகவே பொருள்களைத் தொட்டும், முகர்ந்தும், கேட்டும், கண்டும், சுவைத்தும் அவற்றின் உண்மைகளைச் சரி பார்க்கிறான். இதனால் விஞ்ஞான ஆசிரியர் கற்பிப்பவையாவும் உண்மையென்ற மனப்பான்மை உண்டாகிறது. காந்தம், கோணம், திசையெண், விரிவுக்குணகம், முறிவுக்குணகம் என்னும் சொற்குறியீடுகள் கருத்துள்ளனவாக மாணவனுக்குப் படுகின்றன.

கம்பன் கவியிலே காணும் சொற்களின் உயிர்த்துடிப்பை எந்த உருப்பெருக்கியினாலும் காட்ட முடியாது. ஓ என்னும் இடைச்சொல் உண்டாக்கும் கருத்து மாற்றத்தைப் பரிசோதனைக் குழாயிலே தொட்டுக்காட்ட முடியாது. ஆணவம் என்பது எந்த இரசாயனப் பொருளாலும் பிரித்து வேறு படுத்த முடியாமல் இருக்கின்றது. ஆனபடியால் ஆசிரியர் சொல்லுவதை நம்புவதைத்தவிர வேறு வழியேயில்லை. அன்னமய கோசம், பிராணமய கோசம், அருஉருவத் திருமேனி என்பன சொற்பிரபஞ்சமாக இருக்கின்றன. அன்றியும் விஞ்ஞானக் கல்வியில் விவேகமும் கருத்தாக்கமும் தொழிற்படுகின்றன. ஆனால் சமயக் கல்வியிலோ உணர்வு தொழிற்படுகின்றது. உணர்வை உண்டாக்குவதென்பது சுலபமான காரியமன்று.

மேற் கூறியவை மாணவ உலகத்துக்கு மாத்திரம் பொருந்தக் கூடியவையல்ல வயது முதிர்ந்தோருக்கும் இவை பொருந்தும். விஞ்ஞானத்தின் அபூர்வ சாதனைகளின் பிரமிப்பினால் இறைவனிற் கொண்ட இறுகிய நம்பிக்கை தளர்கிறது. மனிதனாற் சாதிக்கக் கூடாதது எதுவுமில்லை என்ற எண்ணத்துக்கு அடிகோலுகிறது. அதாவது தங்களையறியாமலே உலகாயதத்துக்கு மெல்ல ஒரு ஆரம்பம் பிறக்கின்றது.

இவை நம்கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கும் உண்மை நிலைகளாகும். இது சைவசமயத்துக்குத்தான் சிறப்பானதென்று நாம் கூறவில்லை. இது எல்லாச் சமயங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் தாக்குதலாகும். இந்தப்பிடியிலிருந்து மக்களை மீட்பது சமயக்குருமாரின் பெரிய கடமையாகும். சமயத்தின் மீது கொண்ட பேரபிமானத்தினால் இப்படியான உண்மை நிலையை ஏற்கமறுப்பது ஆபத்தானதாகும். சமயத்தின் மீது மக்களுக்கு

நம்பிக்கை குறையப்பார்க்கிறது என்பதைக் கேட்கக் கசப்பாக இருக்கிறது. ஆனுல் அந்தக் கசப்பினுல் உண்மை நிலையை மறுப்பது ஆபத்தாகும். இந்நிலையில் சமயகுருமார் இவ்விளைவுகளால் நேரடியாகப் பாதிக்கப்படாதிருக்கலாம். ஆனுல் சமய ஆசிரியர்கள் வகுப்பறைகளிலே நேரடியாகத் தாக்கப்படுகிருர்கள். மாணவர் கூட்டத்தினின்று அவர் தப்பிச் செல்வது முடியாத காரியமாகும். அவ்வாசிரியர்களைப் பயிற்றும் ஆசிரியர்கலாசாலை இந்தப் பொறுப்பிலிருந்து தன்னை விடுவிப்பது முற்றுய் முடியாத காரியமாகும். இந்தப் பிரச்சனைக்கு முகங்கொடுத்து எதிர்நோக்கித் தீர்க்க முயல்வது நம்கடமையாகும்.

விஞ்ஞானத்தைக்கற்கும் மாணவர்களுக்கு ஒரு மனப்போக்கு உருவாகியுள்ளது. அதை "விஞ்ஞான மனப்போக்கு" என்று கூறுவர். ஐம்பொறிகளினுலும் பெறும் பொறிப்பதிவுகளை ஏதோ ஒரு வகையில் ஒழுங்கு செய்வதே இந்த விஞ்ஞான மனப்போக்கின் அடிப்படையாகும். ஐம்பொறிகளினுல் மூளையில் பெற்ற தாக்கங்களுக்கு ஓர் உருவம் கொடுப்பதே விஞ்ஞான உண்மையென்று கூறுவர். பொறிப்பதிவுகளே விஞ்ஞான உண்மையின் மூலப்பொருள்கள். ஒரு பொறிப்பதிவின் தாக்கஒழுங்குக்கு இன்னெரு பொறிப்பதிவின் தாக்க ஒழுங்கு முரணுதிருந்த விடத்து அது உண்மை யென்று கூறப்படும். ஒரு பாலைவனத்திலே நீரிருப்பதாகக் காண்கிறேம், ஆனுல் கிட்டச் சென்று அது வெறும் கானல்நீர் என்று அறிகின்றேம். ஆனுல் அதே பாலைவனத்தில் தூரத்தே தண்ணீர்போலத் தோன்றிய இன்னெரு பசும்புற்றரை உண்மையாகவே நீருள்ள சுனையும் சோலையுமாகக் காட்சி யளிக்கின்றது. பின் கண்டதை உண்மை யென்றும், முன் கண்டதைப் பொய்யென்றும் கூறுகின்றேம். இரண்டும், தூரத்தே கண்ணின் தோற்றத்துக்கு, நீருள்ள இடங்களாகவே தோன்றின. ஒன்றைப் பொய்யென்றும் மற்றதை மெய்யென்றும் கூறுகின்றேம். கட்பொறியின் பதிவின் ஒழுங்கினுல் ஆக்கப்பட்ட காட்சி, தொடுகைப் பொறிப் பதிவினுல் மறுக்கப்படுகிறது. கட்பொறிப் பதிவினுல் உண்டாய நீர், சுவைப் பொறியாகிய நாவுக்கு எட்டாததாகின்றது. எனவே, நீர் என்னும் பொருளின் உண்மைக்கு கட் பொறிப் பதிப்பு, ஊறு என்னும் தொடுகைப் பொறிப்பதிவு, நாவென்னும் சுவைத் தற் பொறிப்பதிவு, நீர் விழுதலாலெழும் ஒலிப்பதிவு. ஆகிய இவை ஏதோ ஒரு வகையில் ஒழுங்கு செய்யப்படுதல் இன்றியமையாத தாகின்றது. இப்பதிவுகள், அவ்வகையில் ஏற்பட்ட ஒழுங்கில் நிற்காது. முரணி நிற்பதால் வேறு ஒழுங்கு உண்டாகுமானுல் அதனை 'உண்மையன்று' என்கிறேம். சில கண்ணுடிகளை ஒழுங்கு செய்யும் விதத்தினுல், ஒளிபுக விடாது தடித்த சீமெந்துச் சுவருக்கூடாக வெளியே உள்ள பொருளைப் பார்க்கலாம். அப்பொழுது சுவர் துவாரமுள்ளது போலத் தோன்றும். தொட்டுப் பார்க்கும் போது அங்கே எவ்வித துவாரமும் காணபதில்லை. உண்மையென்ற நிலையில் இரு பொறிப் பதிவுகளினுல் ஆக்கப்பட்ட ஒரு ஒழுங்கு, இன்னேரிடத்தில் முரணி நிற்கும் வேறெரு ஒழுங்கானுல் அதனை உண்மையன்று என்கிறேம்.

ஒரு பொறிப்பதிவே ஒருகால் ஒன்றாகவும் ஒருகால் இன்னொன்றாகவும் தோன்றுமானால் அதனைப் பொய்த் தோற்றம் என்கிறோம். அந்தியிருட்டிற் கிடந்த கயிறு, ஒருகால் பாம்பாகவும், ஒருகால் வைக்கோலாகவும் காணும் பொழுது ஒன்று உண்மையன்று என்று தெளிகிறோம். ஒரு பொருளைப்பற்றிய பொறித் தாக்கங்களின் ஒழுங்கு எல்லோருக்கும் ஒரே விதமாக அமைவதில்லை. பெரும்பான்மையினருக்குத் தோன்றும் ஒழுங்கே உண்மை எனப்படும். ஒரு வித மன நோயாற் பீடிக்கப்பட்டவர்கள், சில பொருள்களைக் காண்பார்கள், சில ஒலிகளைக் கேட்பார்கள். அவை ஏனையோர் பொறிகளிற் பதியப்படாமையால் மனநோயாளர் கண்டதைப் பொய் யென்கிறோம். அதை இன்னொருவிதமாகச் சொன்னால், பெரும்பான்மையோர் பொறிப்பதிவுக்குப் பொருளாகாத ஒன்றை ஒருவர் கண்டால் பொய் என்கிறோம்.

விஞ்ஞான உண்மைகளைக் கருவிகள் காட்டுகின்றன என்பர் சிலர். எந்தக் கருவியும் இறுதியில் மனிதனின் பொறிப் பதிவுகளினாலேயே துணியப்பட வேண்டும். தொலை நோக்கியை உபயோகித்தாலும் கணிக்கும் எந்திரத்தை உபயோகித்தாலும், வானொலி அலைகளைக் கொண்டு அளந்தாலும் ஈற்றில் மனிதப் பொறிகளாலேயே, ஒழுங்கு செய்யப்பட வேண்டும். அவ்வொழுங்கையே உண்மையென்றோ அல்லவென்றோ கூறவேண்டும்.

மனிதனுக்கும், நாய்க்கும் இந்த உலகம் ஒரே மாதிரியாகத் தோற்றமளிக்குமோ என்னவோ யாரறிவார். மனிதன் மூக்கினாலே எள்ளளவேனும் பிரித்தறிய முடியாத ஒரு இரத்தச் சீலையை ஒரு நாய் மோந்து கண்டு கொள்கிறது. அன்றியும், பல மைல் தூரத்தில் ஒளித்திருக்கும் அச் சீலையுடையவனைச் சென்று சேர்கிறது. என்னே நாயின் மோப்ப வன்மை. நாயிலும் பேரறிவு படைத்தோமென்று மார் தட்டும் மனிதனால் இதனைச் செய்ய முடியவில்லையே.

மதியிலே உயிரினம் இல்லையென்று கூறுகிறார்கள். அதை நாம் சரியாகக் கூறவேண்டிய முறை வேறு. "இந்தப் பூமியாகிய கிரகத்திலே உயிர் என்று சொல்வதற்கு என்ன வரைவிலக்கணம் கொடுத்தோமோ அந்த வரைவிலக்கணத்தின்படி உயிர்கள் இல்லை" என்று கூறுவதே பொருத்தமாகும். பூமியின் மேற்பரப்பு வாயுமண்டலத்தினாற் சூழப்பட்டிருக்கிறது. பூமியின் இழுவையின் வன்மை, ஏனைய கிரகங்களின் வன்மையிலும் வேறானது. இப்பூமியின் நிலைகளுக்கேற்பட்ட ஒன்றை உயிர் என்று நாம் வரைவிலக்கணம் கொடுத்து விட்டோம். இப்பூமியின் சூழ்நிலைக்கேற்ப மனிதனுக்கேற்பட்ட ஐம்பொறிகளின் தாக்க ஒழுங்கே உண்மை என்கின்றோம். ஒருவேளை வேறுகிரகங்களில் நமது ஐம்பொறிகளால் உணரமுடியாதவை உயிரினங்களாய் இருக்கின்றனவோ. அவை நமது ஐம்பொறிகளின் வேறான நுண்ணிய பொறிகள் உள்ளனவோ யார்கண்டார்? சுவாசிப்பது, பூமியின் நிலைக்கேற்றது. காற்றில்லாவிடத்து வேறுவிதமான தொழில்கள் உள்ளனவோ?

இந்த ஐம்பொறிகளாற் கூட நாம் எத்தனையோ இவ்வுலகின் அதிசயங்

களைக் காணுதிருக்கின்றோம். ஒரு மலை யின் சரிவிலே ஒரு யானை நிற்கின்றது. அந்த யானையின் நிறை, மலையின் சரிவு, பூமியின் இழுவை, உராய்வு ஆகிய பல தரவுகளையும் கொண்டு யானை விழுந்தால் இந்த இடத்தில் இந்த நேரத்தில் விழுமென்று மிக நுட்பமாகக் கணித்தறியலாம். ஆனால், மலைக்காட்சியைப்பற்றி யானை என்ன நினைக்கின்றது என்பதைப்பற்றி யாரும் சொல்ல முடியாது. அது எவ்வளவு பாலுணர்ச்சியினுற் றூண்டப்பட்டிருக்கிறது என்பதையும் யாரும் வரையறுக்க முடியாது.

மனித உணர்வுகள், சுவைகள், ஆன்மதூண்டுதல்கள் இவற்றை அளந்தறிய வழிகள் கண்டுபிடிக்கப் படவில்லை. அளந்தறிவோமென்று முயன்றுரும், உடம்பின் மாற்றங்கள் நடத்தைகள் இவற்றைக் கொண்டு சில ஒழுங்குகளைச் செய்தார்களே தவிர அவற்றை இன்ன தன்மைய என்று கூறவில்லை. ஐம்பொறிகளினுல் அளக்கப்படும் ஒழுங்குக்கு உணர்வுகளைக் கொண்டு வர முயல்கின்றுர்கள்.

ஐம்பொறிகளின் பதிவுகளும் அவற்றின் ஒழுங்குகளுமே நாம் பெற்ற அறிவு. அதனையே உண்மையென்கின்றோம். இந்த உண்மையைத்தான் விஞ்ஞானம் நமக்குக் காட்டுகின்றது. இந்த அறிவையே பேரறிவு என்று கூறுகின்றோம். அதிலும், விஞ்ஞானம் மனித அனுபவங்கள் எல்லாவற்றையும் பொறிப்பதிவுகளின் ஒழுங்காக ஆக்க முயலவில்லை. அப்படி ஆக்குவதும் உண்மையாக மாட்டாது.

இத்தகைய முற்றுப்பெறுத சிற்றறிவையே நாம் அறிவென்று கொண்டாடுகின்றோம். மிக அழகாகத் திருவருட்பயன் ஆசிரியர் கூறுகின்றுர்.

''பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்கு
அறிவென்ற பேர்நன் றற''

பொறியின்றிக் காணுத புத்தியை, அறிவென்று கொண்டாடுகின்றோம். ஆகா மிக நன்றுயிருக்கிறது.

கனவு நிலையிலே கண்டனவற்றை யாரேனும், கனவு காணும் அந்நிலையிலேயே பொய்யென்று காண்கிறுர்களா? கனவிலே காணும் காசின் பெருக்கத்தை ''இது கனவிலே காணுகின்ற காசு வெறும் பொய்'' என்று அப்பொழுதே யாராவது உணர்ந்ததுண்டா? அப்பொழுது அது மிக மிக உண்மையாகும். விழித்தபின்பே, அது வெறும் பொய்த்தோற்றம் என்கிறோம். கனவு காணும் பொழுதே இதைப் பொய்யென்று அறியாத இந்த அறிவைப் பேரறிவென்று கொண்டாடலாமா? இந்தச் சிற்றறிவின் வயப்பட்டு நின்று காணும் மக்கள் முடிவுகளை, முடிந்த முடிபுகள் என்று கொள்ளலாமா?

''கண்டவற்றை நாளும் கனவிற் கலங்கியிடும்
திண்டிறலுக் கென்னே செயல்''

இது, திருவருட்பயன் தந்த மணிவாக்கு.

விஞ்ஞான சாதனைகளைக் கண்டு பிரமிப்படையும் மாணவர்களுக்கு அதன் இயலாத தன்மைகளையும், அதன் எல்லைகளையும் எடுத்துரைக்க வேண்டும். ஒளியானது ஒரு செக்கனில் ஒரு இலட்சத்து எண்பத்தாறுயிரம் மைல் செல்லும். சூரியனுடைய கதிர்கள் பூமியை வந்தடையக் கிட்டத்தட்ட எட்டரை நிமிடங்கள் ஆகும். பூமிக்

கும், சூரியனுக்கும் இடையேயுள்ள தூரத்தைக் கணித்துப் பார்க்கலாம். நட்சத்திரங்களிலிருந்து வரும் ஒளி களை ஒளிவருடங்களிற்ருன் கணக்கிடு கிருர்கள். ஒரு செக்கனில் ஒளிக்கதிர் மேற்கூறியளவு மைல்கள் போகுமா யின் ஒரு வருடத்தைச் செக்கன்க ளாக்கிப் பெருக்கி, ஒளிவருடத் தூரத்தைக் கற்பனை செய்க. சந்தி ரன் பூமியின் ஒரு உபக்கிரகம். சூரி யனேடு ஒப்பிடும் போது மிக அண் மையில் உள்ளது, அதற்கும் பூமிக் கும் இடையில் உள்ள தூரத்தை மைல் கணக்கிலே கூறுகிருர்கள்; ஒளி வருடங்களிலன்று. அண்டத்தின் அளக் கலாகாத் தன்மையைக் கற்பனை செய் தும் காணமுடியாது. ''கற்பனை கடந்த சோதி...'' என்பதற்குக் கருத்து வேறென்ன? மேலும்,

''பாதாள மேழினுங் கீழ்ச் சொற்கழிவு பாதமலர்
போதார் மணிமுடியும் எல்லாப் பொருள்
முடிவே''

எனப்பட்டதேன். சொற்கழிவு என் பதை சொற்கு + அழிவு என்றும், சொற் + கழிவு என்றும் பிரித்துக் கொள்ள லாம். ஒளிவருடங்கள், யுகவருடங்கள், அணுக்கள், பரமாணுக்கள், மின்னணுக் கள் என்ற விஞ்ஞான பதங்களும், விளக் கும் சொற்களும் கடந்து நின்ற ''ஆதி யுமந்தமுமில்லா அரும் பெருஞ்சோதி'' யின் அளப்பரும் தன்மையையும், விஞ் ஞானத்தின் பொறியளவையும் ஆசிரி யர்கள் மாணவர்களுக்குப் புகுத்த வேண்டும்.

யாரோ ஒரு அண்டவெளிப் பிர யாணி, அளக்கலாகா அண்டத்தின் பெருமையோடு ஒப்பிடும் போது தூரமென்று கூடச் சொல்ல முடி யாத சிலமையில்கள் சென்று, ''கட வுளை, அங்கே நான் காணவில்லை'' என்ருராம். ஆகாய வெளியிலே, மேகங்களுக்கப்பால் இறைவன் இருக் கிருன் என்று பிழையாக அவருக்குச் சமயங்கற்பித்ததாலேயே எழுந்தது இந்தமடைமை. அவரைப் போலவே ஒருகால் பிரமனும் விட்டுணுவும் எம் பெருமானை அளக்கச் சென்ற கதையை அவருக்கு மொழிபெயர்த்துச் சிந் தனைக் கெடுக்கும்படி கேட்பது நன்று. ''தேடிக் கண்டு கொண்டேனே'' ... என்ற வரிகளை மணிப்பெட்ட கத்துள் வைத்துப்போற்ற வேண்டும். ''அருமறையின் அகத்தானை அணுவை'' என்றும், ''கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற பெரியானை'' என்றும் கூறிய தெய்வ வாக்குகளின் கருத்தை எடுத்துரைக்க வேண்டும். இது ஆசி ரியர்களின் கடமை.

''பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப்பரப்பே''

''சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்
தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றி யொன்றில்லை
யாருன்னை அறியகிற்பாரே''

என்ற மணிவாக்குக்களுக்குக் கருத் துண்டு. அவைகளைக் கருத்தோடு பாராயணம் பண்ணினுல், மனிதன் சந்திரனில் காலடிவைத்து விட்டான்; இறைவன் முடியைத் தொட்டு விட் டான் என்று பிதற்றுவதற்கு இடமே வராது. ஆங்கிலங் கற்று விஞ்ஞானத் தில்தேறிப்பட்டம்பெற்றசிலரிடையே ஒரு புதுநோய் இருக்கிறது. வெள்ளை யர்கள் கண்டமுடிபுகள் சில வேதத் திலேயிருக்கின்றன, ஆகமத்திலே யிருக கின்றன. தேவாரத்திலேயிருக்கின்றன என்று பொருத்திக் காட்டுகின்ற ஒருபழக்கம் பரவி வருகின்றது. ஐன்ஸ் ரையினுடைய கொள்கை வேதவாக்கி யத்திலே யிருக்கிறது என்று நிருபிக்க ஒரு பெரியார் முயன்றிருக்கிருர். அது

வேண்டியதில்லை. விஞ்ஞான சாதனையின் பிரமிப்பால் மேலைத்தேசத்தவர் கூறுவன எல்லாவற்றிற்கும் மதிப்புக் கொடுக்கும் பழக்கம் வேரூன்றி விட்டது. நாம் ஒன்றை மாத்திரம் மறக்கலாகாது. விஞ்ஞானிகள் காலத்துக்குக் காலம், கொள்கைகளை மாற்றுவார்கள். அப்பொழுது வேதத்திற் கண்ட முற்கொள்கையை, அவரது பிற்கொள்கையாக மாற்றவேண்டி வரும். அதை எப்படி மாற்றுவது? ஒரு வேளை சுலோகங்களுக்குச் சொல்லும் உரையினுல் மாற்றிவிடலாம் போலும். ஆகவே, வலிந்து சிற்றறிவுடையோர் கொள்கைகளை, நம் வேதத்திலும் தேவார திருவாசகங்களிலும் காட்டுவது மிகப்பிழையாகும்.

பொதுவாக மாணவர்கள் மனத்திலே விஞ்ஞான மனப்போக்கும், சமய மனப்போக்கும் இன்றைய நிலையில் முரணி நிற்கின்றது. இந்த முரண்பாடுகளைத் தீர்த்து வைத்தாலன்றிப் பெரும்பாலோர்களை சமயவழியிற் செலுத்துவது பிரச்சனையாகவிருக்கின்றது. ''சும்மா பேசாமல் இரடா'' என்று அடக்குவதினுலும், ''கேள்விகேட்கப்படாது இரு'' என்று மிரட்டுவதினுலும், பிரம்பை உபயோகிப்பதாலும், அடக்கு முறையாலும், புரட்சியையே ஆக்குவோம். மாணவர்களை அனுதாபத் தோடு நோக்கவேண்டும். அவர்கள் மனதிலே இரு வேறு மனப்போக்குகளினுற் பிய்க்கப்படுகிருர்கள் என்பதை ஆசிரிய உலகம், அறிதல் வேண்டும். கல்விக் கொள்கைகளையும், பாடத் திட்டங்களையும் பிரகடனம் செய்யும் பெரியார்களும் அறிதல் வேண்டும். பிரதானமாக, விஞ்ஞான, கணித, சமய ஆசிரியர்களும் உணர்தல் வேண்டும். இவ்வுணர்வு எல்லாச்சமய ஆசிரியர்களுக்கும் பொதுவாயினும், சிறப்பாகச் சைவாசிரியர்கள் மனதிற் கொள்ள வேண்டும். சைவம் உண்மையைக்கூறுவது. எந்த விதமான விஞ்ஞானசாதனையினுலும், அசைக்க முடியாதது.

சமயங்கற்பிக்கும் ஆசிரியர்கள் விஞ்ஞானத்தின் கட்டுப்பட்ட அளவையும், சமயநெறியின் அளப்பரியாத் தன்மையையும் விளக்கவேண்டும். இதற்கு விஞ்ஞான ஆசிரியரும், சமய ஆசிரியரும், ஒத்துழைக்கவேண்டும். சமய பாடத்திலே ஒருமை காணும் நோக்கமாக இவை இடம் பெறவேண்டும். விஞ்ஞானம் புத்திக்கு விருந்தாகும். சமய ஆசிரியர் சில மனச்சார்புகளை மாணவர்களில் ஆக்கவேண்டும். அது மிகவும் பொறுப்பான தொன்று. அதனைத் தட்டிக்கழிக்கலாகாது. அந்த மனச்சார்பு மாணவர்களிடையே வளர்வதற்கு உபதேசம் மாத்திரம் போதாது. ஆசிரியன் வாழ்ந்து காட்டவேண்டும். ஆசிரியன் வாழ்க்கையிலிருந்து, அவன் கற்பிக்காமலே மாணவன் கற்பான். அவ்வாழ்க்கையை ஆசிரியர்கள் நடத்தவேண்டும். அது, சைவம் கற்பிக்கும் ஆசிரியனுக்கு மாத்திரம் உரியதன்று. ஒவ்வொரு சைவாசிரியனுக்கும் உரியதாகும்.

இங்கே இன்றைய மாணவ உலகிலே உண்டாய மனப்போக்கு முரணுதலை எடுத்துக் கூறியுள்ளோம். இவற்றை, நீக்கும் வழிவகைகளை எடுத்துரைக்க இக்கட்டுரை இடம் தந்திலது. எனினும், சைவாசிரியர்கள் பிரச்சனையை நன்ருக விளங்கிக் கொண்டால், தீர்வுக்கு அதுவே முதற்படியாகும்

கவிதை

# கடைசியிலே காண்பதெல்லாம்———

கவிஞர் வி. கந்தவனம்

அன்புவர அறிவுவர
ஆண்டவனைத் தொழுமனமே
தென்புவரத் தெளிவுவரத்
திருவருளில் திளைமனமே

பெரியதெது சிறியதெது
பிழைகளெவை சரிகளெவை
அரியதெது அதிகமெது
அளந்தவர் யார் அறிந்தவர் யார்

அளந்துவந்தே கூறிடினும்
அதுசரியென் றேற்பவர்யார்
உளந்திருந்தி ஏற்றிடினும்
உருக்கொடுக்க முயல்பவர்யார்

நான்பெரிதா நீபெரிதா
நாடெனக்கா வீடுனக்கா
வீணுரைகள் விசர்த்தனங்கள்
வில்லங்கங்கள் வேதனைகள்

உயர்ந்தவனுர் தாழ்ந்தவனுர்
உலகத்திலே உணர்ந்தவனுர்
பயந்தவனுர் துணிந்தவனுர்
படித்தவனுர் பாமரனுர்

படித்தவர்கள் பாமரராய்
பாமரர்கள் படித்தவராய்
நடத்தையினுல் பண்புகளால்
நாட்டுவரென் றறிந்திருந்தும்-

சொல்லிவிடத் துணிவுமில்லைச்
சொல்லிவரும் சுகமுமில்லை
எல்லவரும் மடையரென்றே
ஏற்றிடவும் முடிவதில்லை

சொந்தத்தினுல் பந்தத்தினுல்
சுதிபிழைக்கப் பாடுகிருர்
சந்தர்ப்பத்தாற் கட்சியொன்றிற்
சார்ந்ததுவே சிறந்ததென்பார்

கள்வெறியர் போலப்பிற
காரணங்கள் கண்டறியாக்
கொள்கையினுல் மற்றவரைக்
குருடரென்றே குரைத்திடுவார்

குதிகுதித்துப் பதைபதைத்துக்
குலமிழுத்துக் குணம்மறைத்து
மிதிமிதித்து மற்றவனை
விழுத்திவிடத் துடிதுடித்து

தொடுத்துவிட்டு நோண்டிவிட்டு
சுயநலத்தைத் தூண்டிவிட்டு
அடுத்தவனைக் கட்டையிலே
அனுப்புவதில் சுகம்பெறுவார்

மற்றவரைப் பற்றுவைத்து
மதிப்பதில்லை மனதுமில்லை
பெற்றபணம் உற்றதொழில்
பிறந்தகுலம் வளர்ந்தஇடம்

என்பவற்றில் நின்றல்லவோ
எங்கள்மதிப்பாகும் நிதம்
அன்பறிவை ஆற்றலினை
யார்மதிப்பார் ஆதரிப்பார்

அன்புவர அறிவுவர
ஆண்டவனைத்தொழு மனமே
தென்புவரத் தெளிவுவரத்
திருவருளில் திளைமனமே!

உ

# கோரிக்கை

சல்வயல் வே. குமாரசாமி

நண்ப நீ உனது நங்கையால் மனது
வெம்பி வீழுவது வீண்
நி த ம்
கண்க லங்குவதும் ஏன்?
பண்பு மேவினுயர் அன்பு சேரின் அது
பந்தம் ஆகுவது காண்
ப க் தி ப்
பண்டமாம் அறிவுமே;

வாழ்வ தில்லை இனி மாய்ப்பன் என் உயிரை
என்று கொன்றெ மூதிளுய்
ம ன ங்
கன்றி வெந்துருகி யோய்
தாழ்வ தில்லைஇனி நேரம் என் கதையைத்
தள்ளு வாய் அல்ல வே.
இ தை க்
கொள்ளு வாய் நல்லதே!

''நாத்தி கத்தினில் மூத்தவன்'' அல்ல
நல்ல ஞானி அறிவேன்
மு ன்
நட்பி ளுலும் உணர்ந்தேன்
ஏத்தி அவ்விறையை எண்ணிப் போற்றுவாய்
ஏன் இதை எண்ணிளுய்
பி ழை
ஏன் மனத் துன்னிளுய்

எங்களுக் கருளி உள்ள திந்த உடல்
ஈய்ந்தவன் இறைவன் ஆம்
இ து
ஓர் சிறைச் சாலையாம்
இங்கி ருந்துநாம் தப்பி ஓடுதல்
ஏற்றதல்ல அறிக
அ தை
இறைவ னேபுரிக;

ஆண்ட வன்உயிரை விடுத லைசெயும்
அந்த நாள் வரட்டும்
அ க ம்
அன்பி ளுல் உயர்த்தும்
பூண்ட உன் பணியை மீண்டுமே தொடர்
பொய்ம்மை வேர்கல்லு வாய்
பி ற ர்
போலியை எள்ளுவாய்

காத்தி ருக்குக கடவுளே வந்து
விடுதலை தரட்டும்
உ யி ர்
கடவுளின் உரிமையே
சூத்தை என்றிதை விட்டு நாம் ஏகச்
சோந்தை இல்லை அலவோ
சு யா
தீனமும் இல்லை யே.

# "துணையாகி நிற்குமுதலே"

— அரியாலையூர்: வே. ஐயாத்துரை —

அன்பா லருட்சிவனே ஆனந்தத் தாண்டவனே
நின்பால் நிறையன்பை நீடித்தேன் — என்பாலுன்
நல்லருளை வைத்துமனம் நாடறியும் நற்பணிக்கோர்
வல்லவனுய் வாழ்ந்திடயான் வார்

மண்ணகந் தன்னிலே மாய்கையில் சிக்கிநம்
மக்களே மாக்களாக
மதியின்றி வாழ்தலை மனுநீதி காட்டியே
வாழ்விக்க வரமீகுவாய்
எண்ணெழுத் தோடுநல் இனியநெறி யாவையும்
இன்னமுது போலூட்டவே
ஏற்றறிவு வல்லமை ஈவிரக் கம்பலம்
ஈகுவாய் செகதீசனே!

அன்னையின் தந்தையின் ஆதரவு வீட்டிலே
அன்பான குழந்தைகட்கே
ஆசிரிய ருதரவு அதிகமே பள்ளியில்
அறிவைவிரிப் பவனுமவனே
என்னையிப் பணிதனக் காக்குவாயீசனே
இடரேது மில்லாமலே
எழிலான சேவையில் வழுவா திருக்கவே
இணையடிக ளேத்துகின்றேன்.

கற்றதன் விளைவினுக் குற்றதுன் துணையென
காட்டினு னேவள்ளுவன்
கற்றதோர் கைப்பிடி மண்ணெனும் கல்வியை
கருணையாற் கடலாக்குவாய்
பெற்றநற் கல்வியைப் பிறங்கிடச் செய்யவே
பிழையிலா மொழிபெய்குவாய்
பேதமொன் றில்லாத பிரகாச னேசிவா
பிறையணியும் எம்பிரானே!

துர்க்குணச் சூழலுள் சோம்பலுள் ஏழ்மையுள்
துவண்டிடும் சுதர்களுக்குச்
சுந்தரப் பணியினுல் தூயவ ராக்கவே
துணையாகி நிற்குமுதலே!
நற்குணச் சமுதாயம் உருவாக நாட்டிலே
நமதுபணி நல்கவைப்பாய்
நாதனே! வேதனே நண்ணுவாய் நமதுளம்
நம்பினேன் நடராஜனே!

# முருக நாமம் ஒலித்திடுக!!

— சீனுச்சானு —

வேல்முனைக்கு நேர் இங்கே எதுவுமேயில்லை
முருக பக்தர் வாழ்விலே துன்பமேயில்லை

பூமியிலே மாரி எல்லாம் வேலவனாலே — நாம்
உண்பதுவும் உடுப்பதுவும் அவனருளாலே — நாடு
சேமமுற முருகன் எமைக்காப்பதனாலே — இங்கு
நன்மை எல்லாம் பெருகும் நன்றாய் பாருங் கண்ணாலே

ஊருக்கொரு கோவிலாக நிலைக்க வேண்டுமே — நாம்
பரவசமாய் பக்திப்பாடல் பாடவேண்டுமே — எங்கள்
ஊன வாழ்வு மிகச்சிறப்பு அடைய வேண்டுமே — அதற்கு
இரவு பகல் முருகனை நாம் அழைக்க வேண்டுமே

கோவிலிலே பூசையெல்லாம் நடக்க வேண்டுமே — அங்கு
பக்தரெல்லாம் பரவசமாய் ஆட வேண்டுமே — எங்கள்
நாவினிலே முருக நாமம் ஒலிக்க வேண்டுமே — நல்ல
முக்தி பெறும் வழியிதனைக் கண்டு கொள்வீரே.

முருகனை நாம் பாட வேண்டும் மெட்டு மெட்டாக — உலக
ஆசைகளை அடக்க வேண்டும் மட்டு மட்டாக — நாம்
பக்திக் கண்ணீர் சிந்த வேண்டும் முத்து முத்தாக — எழில்
தேசமெல்லாம் செழிக்கும் அருள் சொத்துச் சொத்தாக

## அறுபடை வீடுடை முருகா!

அழகான வேலோடு மயில்மீது விளையாடும்
பழமீனும் சோலை முருகா — என்னே!
அநியாய மாக இதுகாறும் வாழ்வை
அவமாகப் போக்கி அலைந்தேன் — உன்னை
ஒருநாளும் விட்டுப் பிரியாது வாழத்
தருவாய் வரமொன்று தயவாய் — பழனி
மலைமீது வள்ளி தெய்வானை யோடு
நிலையா யமர்ந்த பெருமாளே.

அலைபொங்கு செந்தூர் கடலோர மாக
அழகா யமர்ந்த பெருமாளே — பக்தர்
புடைசூழ நின்று அடியார்க்கு அருளும்
திருவாவி னன்குடி வடிவே — உன்னை
ஒருநாளும் விட்டுப் பிரியாது வாழத்
தருவாய் வரமொன்று தயவாய் — மதுரை
அருகே பரங்குன்றும் அழகான திருவேர
கிரிமீதும் காணும் பெருமாளே.

என். இளஞ்செல்வன்

---




முருகா முருகா முருகா
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல்
முருகா முருகா முருகா

பாரதியார்

# பலாலி ஆசிரியர் கழகம்



## சைவ மாணவர் மன்றம்

## 1969 - 1970









திரு. V. கணேசன் (தலைவர்)    திரு. K. மார்க்கண்டன்    திரு. A. பேரம்பலம்    திரு. சி. சிவசுப்பிரமணியம்








திரு. S. A. சோதிலிங்கம்    திரு K. ஸ்ரீகாந்தன்    திரு. S. பழனிவடிவேல் (செயலாளர்)    திரு. S. அமிர்தலிங்கம்




திரு. K. S. பாஸ்கரதாசன்    திரு. P. வீரபத்திரன் (பொருளாளர்)    திரு. S. சதாசிவம்    திரு. N. வரதராசா


திரு. M. கணேசலிங்கம்



திரு .க. முத்துலிங்கம்


திரு. P. பத்மநாதன்


திரு. V. குமாரசாமி



திரு. P. S. தில்லையம்பலம்



திரு. S. ஆனந்தக்கதிரபலை



திரு. T. நடராசலிங்கம்


திரு. T. நமநாதர்


திரு. V. கந்தசாமி



திரு. R. இராமச்சந்திரன்


திரு. S. இலங்கைநாயகம்



திரு. க. கனகரத்தினம்
(பத்திராதிபர்)


திரு. வே. திருநாவுக்கரசு


திரு. M. மகாதேவன்


திரு. K. சண்முகலிங்கம்


திரு. P. காங்கேகு



திரு. பொன். தெய்வேந்திரன்


திரு. S. குலேந்திரசிங்கம்


திரு. V. பத்மநாதன்


திரு. T. தேவராசா.


திரு. S. நாகேந்திரன்


திரு. S. சாந்தலிங்கம்


திரு. N. நடராசா


திரு. S. நடேசலிங்கம்


திரு. T. செல்வராசா


திரு P. விசாகப்பெருமாள்


திரு. கா. கனகச்சந்திரன்


திரு. கு. சதாசிவமூ


திரு. ஐ. மெ. ஜெயபாலன்


திரு. க. பாலசுப்பிரமணியம்


திரு. K. நவரத்தினம்


திரு. வி. அருளானந்தம்


செல்வி T. நமசிவாயம்


செல்வி J. விசுவலிங்கம்


செல்வி. J. செல்லப்பா


செல்வி R. சக்திவேல்


செல்வி S. வே... பிள்ளை



செல்வி. இ. வேலாயுதர்


செல்வி T. சின்னத்துரை


செல்வி P. நாகரத்தினம்



திருமதி. S. சற்குணம்


செல்வி வீ. நல்லதம்பி


செல்வி. M. ஈஸ்வரம்பிள்ளை



செல்வி S. நவரத்தினம்


செல்வி R. S. செல்லையா


திருமதி. க. பெரியதம்பி



செல்வி. T. குமாரவேற்பிள்ளை


செல்வி. R. இரத்தினம்


திரு P. பேரின்பநாதன்


திரு. A. குணசிங்கம்


திரு. T. ஸ்ரீ விசாகராசா


திரு. சி. கிருஷ்ணபிள்ளை


திரு. S. கனகலிங்கம்



திரு. S. யோகநாதர்


திரு. இ. ஆனந்தராசா



A. நாகலிங்கம்


திரு. R. மயில்வாகனம்
பிள்ளை


திரு. C. N. செல்வராசன்


திரு. N. கதிர்காமநாதன்


திரு. க. திருச்செல்வ
விநாயகமூர்த்தி


திரு. இ. சிவானந்தநாயகம்


திரு. க. நடராசா


திரு. S. சரவணமுத்து


திரு. N. செல்வரத்தினம்



செல்வி க. மாணிக்கம்



செல்வி R. செல்லையா



செல்வி ந. இராசசிவகுருநாதன்



செல்வி T. அம்பலவாணர்



திருமதி. M. நடராசா



செல்வி அ. இராமநாதன்



செல்வி T. சிற்றம்பலம்



செல்வி தி. நாகலிங்கம்



[illegible] ராயணசாமி



செல்வி நீ. வேலுப்பிள்ளை



செல்வி கோ. பொன்னம்பலம்



செல்வி P. தம்பையா



செல்வி S. முத்துத்தம்பி



செல்வி சரோஜாபெனடிற்




செல்வி S. செல்லையா



செல்வி T. காசித்தம்பி



திரு .S சுப்பிரமணியம்



திரு. V. நடராசா


திரு. S. செல்லத்துரை



திரு. சூ. பாலஇந்திரன்


திரு. S. செந்தில்நாதன்



திரு சி. இரத்தினசபாபதி


திரு. T. திருஞானசம்பந்தன்


திரு. S. மகாலிங்கம்


திரு. E. சிங்கநாயகம்


திரு. C. கந்தையா



திரு. A. பாலச்சந்திரன்




திரு. பொன். நித்தியானந்தன்


திரு. S. கணேசன்



திரு. மா. புவனேந்திரன்


திரு. S. தெட்சணாமூர்த்தி



திரு. R. [illegible]லிங்கம

திரு. S. இரத்தினம் திரு. J. பரராசசேகரம் திரு. R. லோகநாதன் திரு. ம. மயில்வாகனம்

திரு. C. ந[illegible]லையா திரு. T. ஜெயபாலன் திரு. S. கனகரத்தினம் திரு. K. செல்லத்துரை


   

[illegible] சேனாதிராசா செல்வி N. இரத்தினசிங்கம் செல்வி வி. முருகுப்பிள்ளை செல்வி க. சேனாதிராசா


செல்வி N. செல்லத்துரை திருமதி. R. சுப்பிரமணியம் திருமதி. T. கந்தசாமி திருமதி. W. அழகரத்தினம்




திரு. M. மகாலிங்கசிவம் திரு. N. சாம்பசிவம் திரு. சி. மகேந்திரநாதன் திரு. தி. தருமலிங்கம்



திரு. A. நடராஜசுந்தரம் திரு. N. செல்லக்குட்டி திரு. A. துரைராசா தி N. நட ாசா






திரு N. கிருஷ்ணனந்தன் திரு M. காசித்தம்பி திரு. P. கந்தப்பு திரு. T.







திரு. சி. சரவணபவன் திரு. C. சண்முகம்பிள்ளை திரு. K. குலசிங்கம் திரு M. இரா சிங்கம்


திருமதி. S. சதாசிவம்


திருமதி. N. சிவபாதசுந்தரம்


திருமதி. Y. செல்லையா


திருமதி. G. மகேசன்


திருமதி. P. அம்பிகைபாகன்


திருமதி. S. பத்மநாதன்


செல்வி J. சபாரத்தினம்


திருமதி. K. லோகிதராசா


செல்வி R. கந்தையா


செல்வி R. தம்பு


செல்வி. R. கந்தசாமி


செல்வி J. செல்லத்துரை

153. திரு. B. இராசையா
154. ,, S. செல்வவிநாயகம்
155. ,, M. கந்தசாமி
156. ,, K. கதிரேசன்
157. ,, S. நாகரத்தினம்
158. ,, N. வல்லிபுரம்
159. ,, C. பாலராமன்
160. ,, K. நாகேந்திரன்
161. ,, V. கைலைநாதன்
162. ,, V. கணபதிப்பிள்ளை
163. ,, S. சண்முகலிங்கம்
164. திரு. M. இராசரத்தினம்
165. ,, A. அருமைநாயகம்
166. ,, N. கிருஷ்ணராசா
167. ,, V. S. தில்லையம்பலம்
168. திருமதி R. குமாரு
169. செல்வி R. மயில்வாகனம்
170. ,, S. சின்னத்தம்பி
171. திருமதி B. சிவஞானியார்
172. ,, P. சுந்தரலிங்கம்
173. செல்வி I. குமாரசாமி
174 திருமதி V. மாசிலாமணி
175. செல்வி J. தில்லையம்பலம்
176. ,, G. தயாபரம்பிள்ளை
177. ,, N. வேலுப்பிள்ளை
178. ,, R. கந்தையா
179. திருமதி S. வேலும்மயிலும்
180. செல்வி P. மகாலிங்கம்
181. ,, T. இராமலிங்கம்
182. திருமதி, P. திருநாவுக்கரசு
183. செல்வி P. விநாயகமூர்த்தி
184. திருமதி. S பாலசிங்கம்
185. திருமதி. R. நடராசா
186. ,, U. சுந்தரதாஸ்

*With the Best Compliments of*

# ROTARY PRINTING TRADES

**34, Manipay Road, JAFFNA.**

If you do not have

Let it be your next

# "REFORM"

## THE QUALITY SHIRT

Made of 65% Tetron 35% Cotton
100% Nylon
100% Terylin

# Ali Shirt Manufacturers

125, Messenger Street

**COLOMBO-12**

Phone: 32775
T' Grams: "REFORM"

*With the Best Compliments of*

# KAREEM & CO

DEALERS IN FORAGE, POULTRY FOODS
&
**Poultry Medicines Etc.**

87, Sri Ratnajothi Saravanamuttu Mawatha
**COLOMBO-13.**

*Phone: 32208*

---

**With the Best Compliments of**

# N. A. MARKANDU & BROS

TRINCOMALEE

With the best Compliments of

# RANJANA STORES

52, Bankshall Street,

COLOMBO-11.

*T' Grams: RANJANAS* *T' Phone: 25851*

*With the Best Compliments of*

# KANNAN & COMPANY

182, BANKSHALL STREET

COLOMBO-11.

**T' Phone 26493**
**24779**

நங்கையர் விரும்பும் நவநாகரீக நகைகளுக்கும்

# மின்னும் வைரங்களுக்கும்

சிறந்த ஸ்தாபனம்

# கே. என். எம். மீருன் சாஹிப்

தங்கப்பவுன் நகை மாளிகை

கன்னுதிட்டி, — யாழ்ப்பாணம்.

போன் : 585

வைத்திருப்பதில் ஒரு பெருமை, பாவிப்பதில் ஒரு தனி மகிழ்ச்சி

"டொலர்" அலுமினிய, எவர்சில்வர் பாத்திரங்கள்

# டொலர் கோப்பறேசன்

14-டாம் வீதி — கொழும்பு

# SWARNA STORES

Dealers in Agricultural Implements &
General Hardware

**20/5, Stanley Road,**

**JAFFNA.**

உங்களுக்குத் தேவையான

உணவுப் பொருட்கள், சாய்ப்புச் சாமான்கள்
குளிர் பானங்கள், செருப்பு, சப்பாத்து வகைகள்
விவசாய ரசாயனப் பொருட்கள்
"டேவிட் பிறவுண்" உளவு யந்திரங்கள், உதிரிப்பாகங்கள்
சகலவிதமான ஜவுளித் தினிசுகள், சைக்கிள் மற்றும்
உதிரிப் பாகங்கள் மின்சார உபகரணங்கள்
"பிறதர்" தையல் மெசின்கள் மற்றும் பலவும்

மலிந்த விலையிலும் ஒரேயிடத்திலும் பெற்றுக்கொள்ள

**எங்கள் ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யுங்கள்.**

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

"தயா சேட்டுக்கள்" (THIA SHIRTS)

★ நன்கு பரிசீலனை செய்யப்பட்ட துணி
★ எத்தன்மையிலும் விசேடம் வாய்ந்தது.
★ கழுவும்பொழுது சுருங்காது.
★ முன்மாதிரியான தையல் முறைகளைக் கொண்டு நுட்பமாகத் தயாரிக்கப்பட்டது

ஆடவர்களாகிய நாம் அதை அணியும்பொழுது ஒரு புது மெருகுடனும் அழகுடனும் திகழ்வதாகப் பெண்கள் கூறுகிறார்கள்.

ஆம் இது உண்மை!

சந்தேகம் இருந்தால் அணிந்துபாருங்கள்.

**தயா சேட்டுக்கள்** தயார் செய்யுமிடம்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,

**சுன்னாகம்.**

# SELECTION OF SAREE SALON

# RAJGOPALS

Selective Saree Specialists,

36/1, Grand Bazaar,

JAFFNA.

*Grams : "Rajgo"* *Dial : 7168*

*With the Best Compliments*

*of*

**STUDIO PRINCESS**

**CHUNNAKAM.**

*With the Best Compliments*

*of*

**YARL METAL WORKS,**

K. K. S. Road,

Jaffna.

*Space Donated By*

**Sellappah & Co.**

Stanley Road,

JAFFNA.

*Space Donated By*

**COLOMBO RESTAURANT**

77, Kasturiar Road,

JAFFNA.

*With the best Compliments*

*of*

# S. R. S. Textiles

**216, K. K. S. Road, — JAFFNA.**

Tele: 296, JAFFNA.
Grams: 'ROHINI'

S

216, K

Tele: 29
Grams:

*Visit*

# A. K. S. Jewellers

JAFFNA

*For*

JEWELS & DIAMONDS

*With the best Compliments*

*of*

# S. R. S. Textiles

**216, K. K. S. Road, — JAFFNA.**

Tele: 296, JAFFNA.
Grams: 'ROHINI'

*With the Best Compliments*

*of*

# S. GOPALAPILLAI & CO. LTD.

111 MAIN STREET

**BANDARAWELA**

LEADING HOUSE FOR QUALITY TEXTILES

and

DISTRIBUTORS FOR LANKA SALU SALA

*T' Grams GOPALS* *Phone: 442*

# (G) கோல் ஸ்ரோஸ்

பிரபல உற்பத்தியாளரின் தரமான காலணிகளை
எமது ஸ்தாபனத்தில் சகாயமான
விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

★ டி. ஐ ★ டி. எஸ். ஐ ★ றியேவைற்
★ எலஸ்ரோ ★ பாட்டா

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

**(G) கோல் ஸ்ரோஸ்**

45, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

தலைமைக் காரியாலயம்
103, பிரதான வீதி
காலி

10, பிரதான வீதி
காலி

*With the Best Compliments*
*of*

# HIDHAYA HOTEL & BAKERY

**21, Main Street**
BANDARAWELA

*T' Phone 424*
*Prop:* **S. H. A. MULAFFER**

அழகிய செருப்பு சப்பாத்து வகைகளுக்கு



*நயமிக்க பலதரப்பட்ட ரகங்கள், இனங்கள், நிறங்களுக்கு*

ஈழத்திருநாட்டின் இணையற்ற பிரபல்ய பாதரட்சை விற்பனையாளர்.

# பிரகாஸ் ஸ்ரோர்ஸ்

31, 33, கஸ்தூரியார் ரேட், யாழ்ப்பாணம்.

# நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

மின்சார ஒப்பந்தகாரரும் விற்பனையாளரும்

வடமாகாண பிரதான மின்பொருள் விற்பனையாளர்கள்

எஸ்-லோன், பி. வி. ஸி. பைப் உபகரணங்கள்

றட்ஜ், ரேட்மாஸ்ரர் கீரே சைக்கிள்

விநியோகஸ்தர்கள்

141, 143, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

தொலைபேசி 7016

---

பலசரக்குவகைகளை

★ புதியனவாக

★ பழுதற்றவையாக

★ நிதான விலையில்

பெறவிரும்புகிறீர்களா?

எல்லாவிதமான பலசரக்கு வகைகளுக்கும்

எம்மிடம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

# இ. சண்முகநாதன்

பலசரக்கு வியாபாரம்

மார்க்கட்

சுன்னாகம்

பட்டரி றேடியோக்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்!
இன்றே எம்மிடம் கொண்டு வாருங்கள்
ரான்ஸ்ஸிஸ்டராகவோ (Transister) மெயினாகவோ (Main)
மாற்றிடுவோம்.

விற்பனையாளர் - பழுதுபார்ப்பவர்
குறைந்த செலவில் - சிறந்த சேவை

# ஸ்ரீ கிருஷ்ண றேடியோ வேர்க்ஸ்

புதிய பஸ்நிலையம் முன்பாக — சுன்னாகம்

*Always visit for the Convertion, Repair, of your Radio*

# Sri Krishna Radio Works

Dealers in Radio, Electrical goods, Cycle spares, etc,
Repairers in Radio & Electricals.

**Dr. Subramaniam Rd., Chunnakam**

---

சிறந்த முறையில் சேவை செய்வதற்காக நவீன
யந்திர சாதனங்களை வரவழைத்துள்ளோம்
எமது ஸ்தாபனத்தில் ஏராளமான தொழில்
திறமை வாய்ந்த நிபுணர்கள்
கடமையாற்றுகிறார்கள்.

எமது ஸ்தாபனத்தில் கீழ்க்காணும் வேலைகள் விசேஷமான
முறையில் செய்கிறோம்

- ★ லொறி ஹவுசிங் செய்தல்
- ★ லோஞ் சாவ்ட் சீர்ப்படுத்தல்
- ★ கிங்பின் செய்தல்
- ★ கிறஸர் சாவ்ட் செய்தல்

# பைனல் ரேர்ணிங் வேக்ஸ்

கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.

# MILK WHITE SOAP WORKS

**JAFFNA**

Phone: No. 7233

நம்நாடு செழித்தோங்க நம் நாட்டு கைத்தொழிலை ஆதரியுங்கள்.

★

## மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7233

---

# துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி வீதி, -:- யாழ்ப்பாணம்.

"யூ ஆ சா"
பற்றறி

**YUASA**
**BATTERY**

உங்கள் கார்களில் உல்லாசப் பவனி வர ஒரு "யூ ஆ சா" பற்றியை இணைத்துப் பாருங்கள்.

உங்கள் பலரகப்பட்ட உழவு இயந்திரங்கட்கும் விசேஷமாக பேர்குசன், டெக்ற்ரா - பியற் போன்றவைக்கும் மிகக்கூடிய வலிமை சக்தியை வழங்குகின்றன

இலங்கையில் உற்பத்தியாகும் அதிஉன்னத, மிகச்சிறந்த தயாரிப்பு.

இப்பொழுது கூடிய கழிவுடன் 1½ (ஒன்றரை) வருடகால உத்தரவாதத்துடனும் விற்பனையாகிறது.

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:-

# THURAI & Co.

23/3, STANLEY ROAD, -:- JAFFNA.

எங்களிடம் கண்கவர்
குழந்தை அன்பளிப்புக்கள், பெனியன்கள்,
சேட் வகைகள்
மற்றும்
உள்ளூர் கைத்தறி சேலைகளும்
திருமண வைபவத்திற்கு தேவையான
கூறைச்சேலை வகைகளும், பட்டுவேட்டி சால்வைகளும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
விலை சகாயமாகப் பெற்றுக் கொள்ளலாம்

# எஸ். ரி. நாகலிங்கம் அன் கோ.

101, 102, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

முதலீடு: எஸ். ரி. என் நாகரத்தினமும் சகோதரர்களும்

எங்களிடம்

பாக்குச் சீவல் கோவில் அபிஷேகத் திரவியம்
அத்தர் பன்னீர்
முதலியனவும்
சாய்ப்புச் சாமான்கள் சில்லறைச் சாமான்கள்
முதலியன மலிவான விலையில் சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

# ச. மருதலிங்கம்

பலசரக்கு வியாபாரம்

52, மார்க்கட் -:- சுன்னாகம்.



இனாம்!
உங்களுக்கு தேவையான
Agfa
பிலிம் சுருள்களை எம்மிடம்
வாங்குங்கள்
★ டெவலப்பிங் (DEVELOPING)
இனாம்!
★ போஸ்காட் அளவில்
ஒரு பிரதி- இனாம்!!
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம், போன். 410.

*Visit*

# A. K. S.

# JEWELLERS

## JAFFNA.

**For**

Jewels & Diamonds

# ஸ்ரீ லங்கா வெளியீடுகள்

**மீட்டல் வழிகாட்டி**

தூயகணிதம் I க. பொ. த. (சா) விலை ரூ. 3-50
தூயகணிதம் II பரீட்சைக்குரியது ,, ரூ. 3-00

எழுதியவர் சு. இராஜநாயகம் B. A. (Lond)

| | | | | |
|---|---|---|---|---|
| 6-ம் | வகுப்பு கணிதப்பயிற்சி 3-ம் பருவம் | விலை | சதம் | 90 |
| 7-ம் ,, | ,, | ,, | சதம் | 90 |
| 8-ம் ,, | ,, | ,, | ரூ. | 1-00 |

**மிக விரைவில வெளிவருகின்றன**

ஆறும் வகுப்பு ஆங்கிலம் 3ம்- பருவம்

எட்டாம் வகுப்பு ஆங்கிலப்பயிற்சி 3-ம் பருவம்

ஏழாம் வகுப்பு ஆங்கிலப்பயிற்சி 3-ம் பருவம் விலை சதம் 90

மேற்படி மூன்று பயிற்சிகளும் கல்வி திணைக்களக் கணித பாடத்திட்ட வழிகாட்டியைத் தழுவித் தயாரிக்கப்பட்டவை.)

எழுதியவர் S. இராஜநாயகம் B. A (Lond)

(இத்தொடரில் இரண்டாம் பருவத்திற்குரிய கணிதப் பயிற்சிகளும் உள்ளன.)

மாதிரிவிடைகள் உடனலசாத்திர வினுப்பத்திரங்கள் (சுகாதாரவியல் II)
(க. பொ. த. சாதாரணப் பரீட்சை 1962 – 1968)
ஆக்கியோர்: V. கந்தப்பு K. சுந்தரமூர்த்தி B. D. S. (Ceylon)
விலை ரூ. 2-50

குடியியல் வினு விடை (க. பொ. த சாதாரண வகுப்புக்குரியது) விலை ரூ. 2-50

பௌதிகப் புவியியல் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குரிய

பௌதிகப் புவியியல் குறித்து பத்து வினுவிடை விலை ரூ 2-00

வடகீழ் ஐக்கிய அமெரிக்காவின் புவியியல்
க. பொ. த. உயர்தரவகுப்பிற்குரியது. விலை ரூ. 1-25
தேசப்படத் தொகுதி (தமிழ் அற்லஸ்) விலை ரூ. 3-75
ஆறுந்தரப் புவியியல் — ,, ரூ. 3-90
ஏழாந்தரப் புவியியல் — ,, ரூ. 3-00
இலங்கையின் புவிச்சரிதவியல் Geology of Ceylon ரூ. 2-75
ஆக்கியோன: க. குணராசா B. A. Hons (Ceylon)

**English Sample Test Papers**
for G C. E. (O/L) Examination (New Syllabus)

# ஸ்ரீ லங்கா புத்தகசாலை

234, காங்கேசன்துறை வீதி, **யாழ்ப்பாணம்.**



Printed at Sri Lanka Printing Works 234, K. K. S. Road, Jaffna. 1970